Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

Tilko Jaffna City Hotel
❖ Banguet Hall
❖ Conference Hall
❖ Restaurant ❖ Luxurious rooms
❖ Swimming Pool
❖ Gymnasium/Spa
70/6, K.K.S Road, Jaffna.
E-Mail: tilkojaffna@gmail.com
Web: www.Cityhoteljaffna.com
TP: 0212225969
Hotline: 0212229497
(C/2517)

முரசு – 03 திருவள்ளுவர் ஆண்டு 2044 சித்திரை 25 புதன்கிழமை (08.05.2013) பக்கங்கள் 20 ஓசை – 220
















# பொதுநலவாய மாநாட்டில் இளவரசர் சாள்ஸ் பங்கேற்பார்

## உடல்நலக் குறைவால் மகாராணியின் விஜயம் இரத்து



(லண்டன்)

கொழும்பில் நடக்கவிருக்கும் பொதுநலவாய மாநாட்டில் பிரிட்டிஷ் மகாராணியின் சார்பில் இளவரசர் சாள்ஸ் கலந்துகொள்ளவிருக்கிறார். எதிர்வரும் நவம்பரில் நடக்க இருக்கும் காமன்வெல்த் உச்சிமாநாட்டில் பிரிட்டிஷ் அரசி எலிசபத் கலந்துகொள்ளமாட்டார். இது குறித்த அறிவிப்பொன்று பக்கிங்காம் அரண்மனையிலிருந்து வெளியாகியிருக்கிறது.

54 நாடுகள் உறுப்பினர்களாகக் கொண்ட காமன்வெல்த் அமைப்பின் இரண்டு வருடத்துக்கு ஒருமுறை நடக்கும் கூட்டங்களை 1971 இல் இருந்து ஒரேஒரு முறைதான் அரசி எலிசபத் கலந்துகொள்ளாமல் தவறவிட்டிருக்கிறார். பிரிட்டிஷ் அரசிதான் காமன்வெல்த் அமைப்பின் தலைவி என்பது குறிப்பிடத்தக்கது. பிரிட்டிஷ் அரசிக்குப் பதிலாக அவரது வாரிசான, இளவரசர் சாள்ஸ், இந்த மாநாட்டில் கலந்துகொள்வார்.

(19) ஆம் பக்கம் பார்க்க

## தீவக அபிவிருத்தி யாழில் விசேட மாநாடு



(யாழ்ப்பாணம்)

தீவகத்திற்கான அபிவிருத்தித்திட்டம் குறித்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் யாழ்ப்பாணத்தில் விசேட மாநாடு ஒன்று நேற்று இடம்பெற்றது. ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் ஆளுகைக்குட்பட்ட வேலணை, ஊர்காவற்துறை, நெடுந்தீவு சபைகளுக்காக பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் விசேடமாக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியினூடாக முன்னெடுக்கப்படவுள்ள திட்டங்கள் தொடர்பில் இம்மாநாட்டில் ஆராயப்பட்டது. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் வேண்டுகோளுக்கமைவாக வேலணை, ஊர்காவற்துறை, நெடுந்தீவு

(19) ஆம் பக்கம் பார்க்க

## பணம் கொடுத்து ஏமாந்தீர்களா? யாழ். பொலிஸார் அழைக்கின்றனர்

### போலி இராணுவ அதிகாரி யாழ். சிறையில்

இராணுவ அதிகாரி கேணல் ரூபன் பத்திரண என்று தன்னை அறிமுகப்படுத்தி பணமோசடி மற்றும் காணிப் பிரச்சினை தொடர்பான மோசடிக்கு உள்ளான நபர்கள் இருந்தால் முறைப்பாடு செய்யுமாறு பொலிஸார் அறிவித்துள்ளனர்.

யாழ். பொலிஸ் நிலையத்தில முறைப்பாடு செய்யுமாறு யாழ். சிறு குற்றத்தடுப்பு பொலிஸ் பொறுப்பதிகாரி எ. டபிள்யு. எல். விக்கிரமராச்சி வேண்டுகோள் விடுத்துள்ளார். தான் முன்னாள் ஓய்வு பெற்ற இராணுவ கேணலஏனக்கூறி பல பணமோசடி செயதுள்ள கம்பஹா மாவட்டத்தைச் சேர்ந்த ஹெட்டியாராட்சி (வயது 38) என்ற நபரிடம் ஏமாந்தவர்களையே முறையிடுமாறு பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர். குறித்த நபர் யாழில் உள்ள விருந்தினர் விடுதியில் கடந்த

(19) ஆம் பக்கம் பார்க்க

## மலகூட குழியில் மனித எலும்புக்கூடு

### மாதகலில் பரபரப்பு

(மாதகல்)

கைவிடப்பட்ட மலசல குழியில் இருந்து இனம் தெரியாத ஒருவரின் எலும்புக்கூடு மீட்கப்பட்டுள்ளது. சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள மாதகல் கிழக்கு ஜே/152 கிராம அலுவலர் பிரிவிலிருந்து இந்த எலும்பு கூடு மீட்கப்பட்டுள்ளது. மாதகல் பகுதியில் உள்ள உதயதாரகை சனசமூக நிலையத்திற்கு அருகாமையில் உள்ள தூர்ந்துபோன நிலையில்

(19) ஆம் பக்கம் பார்க்க

## குடாக்கடலில் தொடரும் சட்டவிரோத மீன்பிடி

### 600 கிலோ மீன்கள் அழிப்பு

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டுக் கடலில் நடக்கும் டயனமற் மீன்பிடி நடவடிக்கைகள் சட்டத்தின் பிடியில் சிக்கியுள்ளன. நேற்று கொட்டடிப் பகுதியில் உள்ள மீன்வாடி ஒன்றில் இருந்து யாழ். கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள அதிகாரிகளினால் கைப்பற்றப்பட்ட 600 கிலோ மீன் யாழ். நீதவான்

(19) ஆம் பக்கம் பார்க்க

## முஸ்லிம்களை வதைக்கிறது பயங்கரவாத தடைச்சட்டம்



(கொழும்பு)

இன்னமும் அகற்றப்படாமல் இருக்கும் பயங்கரவாத தடைச்சட்டம் இப்போது முஸ்லிம் மக்களை வதைக்க ஆரம்பித்துவிட்டது. இதில் முதலாவதாக பாதிக்கப்பட்டவர் அசாத்சாலி என்றும் இவருக்காக நீதிகேட்டு சர்வதேச சமூகத்திடம் முறையிடவிருப்பதாக கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன்

(19) ஆம் பக்கம் பார்க்க

## புலிகளின் பதுங்கு குழியில் வெடித்தது குண்டு

### ஆறு படைவீரர்கள் காயம்

(முல்லைத்தீவு)

புலிகளால் கைவிடப்பட்ட பதுங்குகுழி ஒன்றைத் துப்புரவு செய்ய முயற்சித்தபோது இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தில் ஆறு படைவீரர்கள் காயமடைந்துள்ளனர்.

முல்லைத்தீவு உடையார் கட்டுகுளம் காட்டுப் பகுதியில் இடம்பெற்ற இந்தக் குண்டு வெப்புச் சம்பவத்திலேயே இந்த

(19) ஆம் பக்கம் பார்க்க

## பலாலி வீதியில் சடலம் மீட்பு

யாழ். திருநெல்வேலி பிரதேசத்தில் நேற்றுக் காலை ஆண் ஒருவரின் சடலம் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது. பலாலி வீதி, திருநெல்வேலி சந்தைக்கு அருகாமையில் உள்ள கடைத் தொகுதிக்கு முன்பாகவே இந்தச் சடலம் மீட்கப்பட்டுள்ளது. சடலமாக மீட்கப்பட்டவர் பிறவுண்வீதி, கொக்குவிலைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான ஜெ. ரஞ்சனதாஸ் (வயது- 56) என அடையாளம் காணப்பட்டுள்ளார். நகை வியாபாரியான குறித்த நபர் வியாபார விடயமாக கொழும்பு சென்று நேற்று அதிகாலை மீண்டும் யாழ்ப்பாணம் திரும்பியுள்ளார். திருநெல்வேலி

(19) ஆம் பக்கம் பார்க்க

பக்கம் 02 இல்...
அபிவிருத்தி லொத்தர் சபையின் ஜயோதா உத்தியோகபூர்வ முடிவுகள்

உள்ளே...
தரம் – 3 மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்

# சில்லறை நாணயத்திற்கு தட்டுப்பாடு

யாழ்.குடாவில் எப்பகுதிக்குச் சென்றாலும் சில்லறை நாணத்திற்குப் பெரும் தட்டுப் பாடு நிலவி வருவதைக் காண முடிகிறது.

வர்த்தக நிலையம் முதல் வாகனப் போக்குவரத்து வரை இந்த நிலை காணப்படுகின்றது. வர்த்தக நிலையங்களில் பொதுமக்கள் சில்லறைக்குப் பதிலாக தீப்பெட்டி, பனடோல் போன்ற பொருட்களைப் பெற்று வருகின்றனர்.

வாகனப்போக்குவரத்துக்கு மீதிப்பணம் இல்லாததால் பெரும் கஷ்டமுறுவதைக் காணமுடிகின்றது. எனவே சில்லறைத் தட்டுப்பாட்டை நீக்குவதற்கு சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொதுமக்கள் கேட்டுள்ளனர். (150)


## ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 953

திகதி 06.05.2013

வெற்றி எண்கள் | ஆங்கில எழுத்து

14 22 44 49 Z

ஜக்பொட் பரிசு ரூ. 10,828,780/= வெல்லப்படவில்லை

| பரிசு அமைப்பு | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 0 | 10,828,780/= | ரூ. - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 2 | 10,00,000/= | ரூ. 2,000,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 12 | 50,000/= | ரூ. 600,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 236 | 1,000/= | ரூ. 236,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 458 | 1,000/= | ரூ. 458,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 11744 | 60/= | ரூ. 704,640/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 6012 | 40/= | ரூ. 240,480/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 153587 | 20/= | ரூ. 3,071,740/= |
| ஆங்கில எழுத்து | 22253 | 20/= | ரூ. 445,060/= |
| | | மொத்தம் ரூ. | 7,755,920/= |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ரூபா 50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| கம்பஹா | 604087034-4-04 |
| குருநாகல் | 604080676-1-01 |
| களுத்துறை | 604086548-9-19 |
| கொழும்பு | 604091261-5-15 |
| யாழ்ப்பாணம் | 604085011-8-48 |
| கேகாலை | 604088347-9-09 |
| ஹம்பாந்தொட்டை | 604082261-7-47 |
| கம்பஹா | 604095420-4-04 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 8,155,920/=

எதிர்வரும் வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா. 11,129,040/=

செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2013.05.09 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர். டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02. தொலைபேசி: 2 333546/7

(C/2731)


# மல்லாவி இலங்கை வங்கியில் நீண்ட நேரம் காத்திருக்கும் மக்கள்

(மல்லாவி)

மல்லாவி இலங்கை வங்கிக் கிளையில் சேவையைப் பெற்றுக்கொள்ள நீண்ட நேரம் காத்திருக்க வேண்டியுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் இலங்கை வங்கிக் கிளையானது தற்காலிகமாகவே இயங்கி வருகின்றது. இதனால் அரசாங்க உத்தியோகத்தர்கள் இதன் சேவையைப் பெற்றுக் கொள்வதற்கு கால் கடுக்க காத்து நிற்கின்றனர்.

மேலும் மன உளைச்சலுக்கும் ஆளாகி வருகின்றனர். இந்த வகையில் மக்கள் வேறு வங்கிகளில் பண வைப்பும் செய்து வருகின்றனர்.

இதனால் அரச உத்தியோகத்தர்கள் தொடக்கம் வலுவிழந்தோர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள் பலர் பாதிக்கப்படுகின்றனர்.

வாழ்வாதாரத்திற்காக வழங்கப்பட்ட பணங்கள் தவணைக்காலம் இருக்கும் பட்சத்தில் அவர்களின் வாழ்வாதாரக் கடன் கழிப்பைச் செய்து வருகின்றனர். இதனால் கோழி வளர்ப்புக்கான கடனைப் பெறமுடியா்த நிலையில் அந்த மக்கள் கவலையடைகின்றனர். (140)

# வல்லிபுர ஆழ்வார் மகா கும்பாபிஷேகம்

(வடமராட்சி)

வடமராட்சி அருள்மிகு ஸ்ரீ மகா கும்பாபிஷேகம் அடுத்த மாதம் 26ஆம் திகத நடைபெறவுள்ளது.

இப்புனருத்தான மகா கும்பாபிஷேகக் கிரியைகள் அடுத்த 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு சுதர்சன ஹோமமும் மாலை 6.00 மணிக்கு திருவிளக்குப் பூசையும் இடம்பெறவுள்ளன.

25ஆம் திகதி காலை 7.00 மணி முதல் பிற்பகல் 4.00 மணி வரை எம்பெருமானுக்குப் பக்த அடியார்கள் எண்ணெய்க்காப்புச் சாத்துவார்கள். 26 ஆம் திகதி காலை 9.36 மணி தொடக்கம் 10.36 வரையுள்ள சுபமுகூர்த்தத்தில் வல்லிபுர சக்கர மூல மாயவனுக்கும் ஏனைய பரிவாரமூர்த்திகளுக்கும் மகா கும்பாபிஷேகம் நடைபெறும். இவ்வாலய திருப்பணி வேலைகள் ஆலய அறங்காவலர் சபையால் 2 கோடி 50 இலட்சம் ரூபா செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (01)

# தண்ணீர் பந்தல் புனரமைப்பு

(வரணி)

வரணி சிட்டிவேரம் ஆலயச் சூழலில் கடந்த காலத்தில் அமைக்கப்பட்டிருந்த தண்ணீர்ப் பந்தல் புதிதாகப் புனரமைப்பு வேலைகள் நடைபெற்ற வண்ணமுள்ளன.

இக்கட்டடம் பழமை வாய்ந்த நிலையில் காணப்பட்ட சூழலில் தற்போது புதிய அமைப்பில் திருத்த வேலைகள் நடைபெறுகின்றது.

அடுத்து வரும் மாதம் வருடாந்த உற்சவம் ஆரம்பமாகும் வேளையில் அவசர அவசரமாக வேலைகள் நடைபெற்று வருகிறது. உற்சவ காலத்தில் இவ் தண்ணீர்ப் பந்தலில் அடியார்களின் நன்மை கருதி வருடா வருடம் தாகசாந்தி நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (150)

# இன்னிசை நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச் சந்நிதி ஆலயச் சூழலில் அமைந்துள்ள சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைப் பண்பாட்டுப் பேரவையால் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நடைபெறும் ஆன்மீக நிகழ்வில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு இன்னிசை நிகழ்வு இடம்பெறவுள்ளது.

# மாலையில் மழை

குடாநாட்டில் சில தினங்களாக மாலை நேரங்களில் மழை பெய்து வருவதை அவதானிக்க முடிகின்றது.

இக்காலம் கோடை காலமாகையால் தீடீர் திடீரென மழை பொழிவதால் தமது அலுவல்களின் நிமித்தம் பயணம் செய்வோரும், பாதசாரிகளும் பெரிதும் கஷ்டப்படுவதைக் காண முடிந்தது.


## யாழ். போதனா வைத்தியசாலையிலுள்ள சிற்றுண்டிச் சாலையை ஒப்பந்த அடிப்படையில் குத்தகைக்கு வழங்குதல் 01.06.2013 தொடக்கம் 30.05.2014 வரை

யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் இயங்கும் சிற்றுண்டிச்சாலையை ஒப்பந்த அடிப்படையில் 01.06.2013 தொடக்கம் 30.05.2014 வரை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

இதற்குரிய கேள்வி விண்ணப்பப்படிவத்தினையும் அதற்குரிய நிபந்தனைகளையும் அலுவலக நேரங்களில் வைத்தியசாலை அலுவலகத்தில் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்வதோடு சிற்றுண்டிச்சாலைக்கு மாதமொன்றுக்கு வாடகையாக வழங்கக்கூடிய ஆகக்கூடிய தொகையை விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடுவதோடு கேள்வி விண்ணப்பங்களை 17.05.2013 ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பணிப்பாளர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும். அல்லது நேரடியாக வைத்திய சாலைப் பணிப்பாளர் அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியில் இடலாம்.

விண்ணப்பப்படிவத்தினை மீளளிக்கப்படாத தொகையான ரூபா 500/= ஐ அலுவலகத்தில் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் மீளளிக்கக்கூடிய தொகையான ரூபா 5000/= ஐ அலுவலகத்தில் செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்துடன் இணைக்க வேண்டும்.

விண்ணப்ப கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் **சிற்றுண்டிச்சாலைக்கான கேள்வி விண்ணப்பம்** என தவறாது குறிப்பிடப்படுதல் வேண்டும்.

கேள்விகள் 17.05.2013 ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு பணிப்பாளர் அலுவலகத்தில் திறக்கப்படும். அச்சந்தர்ப்பத்தில் கேள்விதாரர் அல்லது அவரின் பிரதிநிதி பிரசன்னமாக இருக்கலாம்.

**பணிப்பாளர் (தலைவர்)**
**பிராந்திய பெறுகைகள் குழு,**
**போதனா வைத்தியசாலை,**
**யாழ்ப்பாணம்.**

(C/2732)






**யாழ்ப்பாணம் கொட்டடி சனசமூக நிலையத்தினரால் புத்தாண்டு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெற்றபோது கலை நிகழ்வு இடம்பெறுவதையும் சமூக சேவையாளர்கள் 'சமூக திலகம்' பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டதையும் காணலாம். (105)**

# ஆசிரியர் பற்றாக்குறையால் மாணவர் கல்வி பாதிப்பு

(வேலணை)

தீவக வலயத்திற்குட்பட்ட வேலணை தெற்கு ஐயனார் வித்தியாசாலையில் தரம் 1 முதல் 5 வரை வகுப்புக்கள் நடைபெற்றுவரும் நிலையில் இங்கு ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுவதாகவும் இதனால் மாணவர்களினுடைய கல்விச் செயற்பாடுகள் பாதிக்கப்படுவதாக பெற்றோர்களால் தெரிவிக்கப்படுகிறது.

இப்பாடசாலையில் தரம் 2 வகுப்பில் 45 மாணவர்கள் கல்வி பயின்று வரும் நிலையில் இவ்வகுப்பிற்கு நிரந்தர ஆசிரியர் ஒருவர் இன்மையால் 3 மாதங்களாக வேறு வகுப்புக்களுக்கு கல்வி பயிற்றும் ஆசிரியர்களே இம்மாணவர்களுக்கும் கல்வியைப் போதிப்பதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

இதனால் மாணவர்கள் மட்டுமல்லாது ஆசிரியர்களும் பல்வேறு நெருக்கடிகளை எதிர்நோக்குவதாகவும், இதனால் மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுவதாகவும் பெற்றோர்களால் கவலை தெரிவிக்கப்படுகிறது.

இதைவிட தரம் 3 வகுப்பில் 49 மாணவர்கள் கல்வி பயின்று வரும் நிலையில் இவ்வகுப்பிற்கு ஒரு ஆசிரியரே கல்வி போதிப்பதாகவும் தெரிவிக்கப்படும் நிலையில் குறிப்பாக ஆசிரியர்கள் விடுமுறையில் சென்றால் மாணவர்கள் பாடங்களைக் கற்கமுடியாத நிலை ஏற்படுவதாகவும் பெற்றோர் தெரிவிக்கின்றனர்.

எனவே, இப்பாடசாலை மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளைக் கருத்தில் கொண்ட ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய உரியவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என கோரிக்கை வகுக்கப்பட்டுள்ளது. (21)

# வீதி நடைமுறைகள் குறித்த விழிப்புணர்வு மாணவர்களுக்கு மிகவும் அவசியமானது

## – போக்குவரத்து பொலிஸ் அத்தியட்சகர்

(யாழ்.நிருபர்)

யுத்த காலத்தில் ஏற்பட்ட மனித இழப்பு போன்று தற்போது வீதி விபத்துக்களால் வண் உயிரிழப்புக்கள் ஏற்படுகின்றன.

அதிகூடிய வேகத்திலும், மற்றும் போக்குவரத்து விதிகளை அனுசரிக்காமலும் சாரதிகள் வாகனம் செலுத்துவதாலேயே அதிகளவில் விபத்துக்கள் ஏற்படுகின்றன.

பாடசாலை மாணவர்களும் போக்குவரத்து வீதி விதிகளை அனுசரித்து நடப்பதன் மூலம் விபத்துக்களைத் தடுக்கமுடியும் என கோப்பாய் பொலிஸ் பிரிவு போக்குவரத்து பொலிஸ் அத்தியட்சகர் எஸ்.குணரட்ணா தெரிவித்தார்

கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற போக்குவரத்து விதிகள் தொடர்பான வழிப்புணவர்வுக் கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

சாரதிகள் மட்டுமின்றி பொதுமக்களும், பாடசாலை மாணவர்களும் போக்குவரத்து விதிகளைத் தெரிந்து கொள்ள வேண்டும். பாதசாரிகள் வீதியின் வலது பக்க ஓரமாக நடந்து செல்லவேண்டும். பிரதான வீதியைக் கடக்கும் போது மஞ்சள் கோட்டுக் கடவையின் ஊடாகக் கடக்க வேண்டும். வீதிகளில் சைக்கிளில் சமாந்தரமாகச் செல்லக் கூடாது. இரவில் சைக்கிளுக்கு டைனமோ அல்லது டோச் வெளிச்சம் கட்டாயம் இருக்க வேண்டும்.

சிறுவீதிகள், ஒழுங்கையிலிருந்து வரும்போது இரண்டு பக்கமும் பார்த்து அவதானமாக வரவேண்டும். வீதிச் சமிக்ஞைகளை நன்கு அவதானிதது வாகனம் செலுத்த வேண்டும்.

நீங்கள் பேருந்திலோ, மோட்டார் சைக்கிளிலோ அல்லது நடந்தோ பயணம் செய்யும் போது நீங்கள் பயணம் செயயும் பாதையை நன்கு அவதானியங்கள். சாரதிகளினதும், பாதசாரிகளினதும் பாதுகாப்பிற்காக வீதியிலே போக்குவரத்துச் சமிக்ஞைகள் காட்டப்பட்டுள்ளன.

பெருமளவு பணத்தைச் செலவு செய்து இத்தகைய சமிக்ஞைகள் காட்சிப்படுத்தப்பட்டிருப்பது நம் அனைவரினதும் பாதுகாப்பிற்காகவே என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். இச்சமிக்ஞைகளை விளங்கி அவற்றைப் பின்பற்றி நடப்பதால் வீதி விபத்துக்களைத் தடுத்துக்கொள்ளலாம் என்றார். (10)

# வீதியில் குவிக்கப்பட்ட கற்களால் போக்குவரத்து இடையூறு

முழங்காவில் கிருஷ்ணநகர் ஊடாக இரணைமாதா நகருக்குச் செல்லும் வீதியில் புனரமைப்புப் பணிகளுக்காக பறிக்கப்பட்ட சல்லிக்கற்களால் போக்குவரத்து நெருக்கடிகள் ஏற்படுவதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இவ்வீதிப் புனரமைப்பு நடவடிக்கைகளுக்காக வீதியின் நடுப் பகுதியில் சல்லிக் கற்கள் பறிக்கப்பட்டுள்ளதுடன், வீதிப்போக்குவரத்துப் பாதைக்கு சிறிய இடைவெளியே உள்ளது. இதனூடாக பயணம் செய்வது நெருக்கடியாகக் காணப்படுவதாகவும் தெரிவிக்கின்றனர். ஒரு மாத காலத்திற்கும் மேலாக வீதிகளில் சல்லிக் கற்கள் பறிக்கப்பட்ட நிலையிலே காணப்படுவதாகத் தெரிவிக்கும் மக்கள் இவ்வீதியை விரைந்து புனரமைக்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என கோரிக்கை விடுக்கின்றனர். (09)

# முல்லைத்தீவின் பல வீதிகளில் பஸ் தரிப்பிட குறியீடுகள் இல்லை

## – மக்கள் சுட்டிக்காட்டு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு பரந்தன் வீதி, மாங்குளம் வீதி, கொக்கிளாய் வீதி ஆகிய வீதிகள் அகலிக்கபட்டு காப்பெட் வீதியாக புனரமைக்கப்பட்டுள்ளன. நிலையில் வீதிகளில் பஸ் தரிப்பிட குறியீடுகள் எதுவும் போடப்படாமல் இருப்பதாக பொதுமக்கள் தெரிவித்துள்ளன.

மக்களின் போக்குவரத்துக்காக மிக இலகுபடுத்தப்பட்டதாக வீதிகள் புனரமைக்கப்பட்டுள்ள போதிலும், வீதிகளில் பயணிகள் நின்று ஏறுவதற்குரிய பஸ்தரிப்பிட குறியீடுகள் இல்லாமல் வீதிகளில் ஆங்காங்கே மக்கள் நின்று பேருந்துகளில் ஏறுவதாகவும், இதனால் சிரமங்கள் ஏற்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் வீதிகளில் நிற்கும் பயணிகளை பேருந்துகள் இடையில் நிறுத்தி ஏறுவதால் விபத்துக்கள் ஏற்படும் அபாய நிலையும் காணப்படுவதாகத் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில் வீதியோரங்களில் பஸ்தரிப்பிடக் குறியீடுகள் அமைக்கப்பட்டால் மக்கள் அவ்விடத்தில் நின்று சிரமமின்றி போக்குவரத்தை மேற்கொள்ளக் கூடியாதாக இருக்கும் எனவும், இதனால் விபத்துக்கள் ஏற்படுவதைத் தவிர்க்கலாம் எனவும் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக வீதி அதிகாரசபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (04)

# அரங்கத்திறன் விருத்தி; நாடகப் பயிற்சிப்பட்டறை

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி முத்துத்தம்பி மகாவித்தியாலய மாணவர்களுக்கான அரங்கத்திறன் விருத்தி நாடகப் பயிற்சிப்பட்டறை நிகழ்வு திருநெல்வேலி முத்துத்தம்பி மகாவித்தியாலயத்தின் பிரதான மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

அரங்கத்திறன் பயிற்சிப் பட்டறை நிகழ்வின் வளவாளர்களாக யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் வழிகாட்டலும் ஆலோசனை சேவைப்பிரின் ஆசிரியர் நா.கு.மகிழ்ச்சிகரன், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் நாடகத்துறை ஆசிரியர் எஸ்.ரி.குமரன், மானிப்பாய் இந்துக்கல்லூரியின் நாடகத்துறை ஆசிரியர் எஸ்.ரி.அருள்குமரன் இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலய ஆசிரியர் இரா.இதயராஸ் ஆகியோர் கலந்து கொண்டுபயிற்ச்சிப் பட்டறையை திறம்பட வழிநடாத்தினார்கள்

இப்பயிற்சிப் பட்டறையில் தரம் 9 தரம் 10 தரம் 11 மாணவர்களுக்கான நடிப்புசார் பயிற்சிகள், அரங்கத்திறன் விருத்தி, ஆளுமை வளர்ச்சிசார் பயிற்சிகள், கற்பனைத்திறன் விருத்தி, மகிழ்வான கற்றலுக்கான சூழலை ஏற்படுத்தல், குழுவாக இயங்குதல், புத்தாக்கத் திறனை வளர்த்தெடுத்தல் முதலிய பயிற்சிகள் வழங்கப்பட்டது.

இப்பயிற்ச்சிப் பட்டறையில் கலந்து கொணட மாணவர்களுக்கு மிகவும் பயனுள்ள முறையில் இப்பயிற்ச்சிப்பட்டறையானது அமைந்திருந்தததுடன் புதிய அனுபவங்களையும், அரங்கியல் சார் நுட்பங்களையும் ஆளுமை வளர்ச்சிசார் செயற்பாடுகளையும் அறிந்து கொள்ள முடிந்துள்ளதாக் தெரிவித்தார்கள்.

# நெடுந்தீவு யோகேஸ்வரனின் கவிதைநூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக மூன்றாம் வருட இசைத்துறை மாணவன் நெடுந்தீவு க.யோகேஸ்வரனின் மூன்றாவது கவிதைத் தொகுப்பான 'காற்றிடைவெளியே' என்ற நூல் வெளியீட்டுவிழா இன்று புதன் கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக மருதனார் மடம் நுண்கலைப் பீடத்தில் யாழ்.பல்கலைக்கழக இசைத்துறைத் தலைவர் தர்சனன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்விற்கு கௌரவ விருந்தினராக மகரகம தேசிய கல்வி நிறுவக அழகியற் பாட உதவி விரிவுரையாளர் ராகினி திருக்குமரன் கலந்துகொள்ளவுள்ளார்.



நல்லூர் பிரதேச சபையின் கோண்டாவில் பொது நூலக புத்தக தின நிகழ்வு அண்மையில் நடைபெற்றபோது விருந்தினர்களாகக் கலந்து கொண்ட நல்லூர் பிரதேசசபைத் தவிசாளர் ப.வசந்தகுமார், கொக்குவில் இந்துக்கல்லூரி அதிபர் வே.ஞானகாந்தன் அகியோர் உரையாற்றுவதையும், பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.பல்கலைக்கழக கல்வியற்துறைப் பேராசிரியர் மா.சின்னத்தம்பி சிறுமி ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் காணலம். (10)

நம்பிக்கை குறையும் போது ஒவ்வொரு மனிதனும் நெறியற்ற கொள்கையை மேற்கொள்கிறான். - ஜான்மில்டன்.


தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net


## கதிரைக்குப் போடும் கூப்பாடு!

தேர்தல் அறிவிப்பு வெளியாகக் கூட வேண்டாம்; வெளியாகப் போவதாகத் தெரிந்தாலே போதும், "தமிழ்மக்களின் ஒற்றுமையைக் காட்ட வேண்டிய தருணம் வந்துவிட்டது... ஏகப்பிரதிநிதிகளைத் தேர்வு செய்து (இது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பா அல்லது தமிழரசுக் கட்சி மட்டுமேதானா என்பதில் இன்னும் தெளிவில்லை) சிங்கள அரசின் சூழ்ச்சியை முறியடிக்கும் காலம் நெருங்குகிறது... தயாராகுங்கள் தமிழ்மக்களே..." என்று கட்சி ஊடகங்கள் கதற ஆரம்பித்துவிட்டன.

இதுவரைக்குமான ஒற்றுமையைக் காட்டிய தேர்தல்களின் பின் என்னாயிற்று நிலைமை? இராணுவத்தை இங்கிருந்து அனுப்பிவிட்டார்களா? காணிநிலங்களைக் காப்பாற்றினார்களா? அற்ப சலுகைகளுக்குப் பதிலாக மக்களுக்கு அதிகாரங்களைப் பெற்றுத்தந்து விட்டார்களா? சர்வதேசத்தை இழுத்துவந்து தீர்வைப் பறித்தெடுத்துத் தந்துவிட்டார்களா? என்ன நடந்தது என்று கொஞ்சம் நிதானித்துப் பார்க்க வேண்டாமா?

அரசின் சூழ்ச்சிகளை முறியடிக்க தமிழ்மக்கள் ஒற்றுமைப்பட்டு வாக்களிக்க வேண்டும் என்று யுத்தத்தின் பின் நடந்த மூன்று தேர்தல்களிலும் கூட அதையே கேட்டு கதிரைகளில் போய் குந்திக்கொண்டார்கள். எந்த சூழ்ச்சியையும் முறியடித்ததாய்க் காணோம்; இந்தத் தேர்தலுக்கும் அரசின் சூழ்ச்சிகளை முறியடிக்க அவர்களையே மக்கள் அனுப்பிவைக்க வேண்டுமாம்!

தமிழ் மக்கள் ஒற்றுமைப்பட்டு 22 எம்பிப் பதவிகளை இவர்களுக்குத் தந்துவிட்டிருந்த போதுதான், முள்ளிவாய்க்கால் அழிவுக்கு மக்களைத் தயார்படுத்தி அனுப்பிவிட்டு, அந்த அழிவை வெளிநாடுகளிலிருந்து பார்த்துக்கொண்டிருந்தார்கள்! இப்போதும் பெருமளவு உறுப்பினர்களை வைத்துக்கொண்டு மக்களுக்கு எந்தத் துரும்பையும் எடுத்துக் கொடுத்ததில்லை.

என்ன தீர்வு, அதை எடுக்க என்ன திட்டம், இவர்கள் செய்துகொண்டிருக்கக்கூடிய முயற்சி என்ன? என்பது பற்றியெல்லாம் எதுவும் பேசாமலே, மீண்டும் ஒற்றுமைப்பட்டுத் தங்களுக்கு வாக்களிக்கா விட்டால் தமிழர்கள் நசுக்கப்பட்டு விடுவார்கள் என்று மிரட்டுகிறார்கள்.

இவர்கள் எந்தப் பதவிக்கு வந்தாலும், இவர்களது சொந்த லாபங்கள் நிறைவேறுவதேயதல்லால், மக்களை எந்த இக்கட்டிலிருந்தும் மீட்டதில்லை; அதற்கான சாதுரியங்களும் இவர்களிடமில்லை. இந்தத் தேர்தல் முடிந்து அடுத்துவரும் தேர்தலிலும் மக்கள் ஒற்றுமைப்பட்டு வாக்களிக்க வேண்டும் என்று கோருவதற்காக இதே நிலைமைகளிலேயே மக்களை விட்டுவைப்பார்கள். அதுதான் இவர்களது அறுபத்தைந்து வருட வரலாறும்!

இதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். இவர்களது உணர்ச்சியூட்டும் எதிர்ப்புக் கோஷங்களில் திரும்பத் திரும்ப மயங்கிக் கொண்டிராது, விழிப்படைய வேண்டும். நமது தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள நடைமுறைச் சாத்தியமான வழிகளை இனங்கண்டாக வேண்டும். எதிர்ப்பு முழக்கங்களால் இவர்கள் மக்களுக்கு எதையும் வாங்கித் தந்ததில்லை; அழிவுகளையும் இழப்புகளையும் தவிர.

வெறுமனே குறை கண்டுபிடிக்கும் வாதங்களினால் வாழ்க்கையை சீர்செய்துகொள்ள முடியாது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். நமது சரியே ஒரே சரி என்ற எண்ணமே மற்றவரோடு உரையாட முடியாத நிலையில் நம்மை நிறுத்துகிறது.

நம் தவறுகளைக் கண்டுகொள்ள மறுத்து மற்றவர் தவறுகளுக்காய் முறுக்கிக்கொண்டு நேராய் நிற்பதில் நாம் பெருமைப்பட முடியாது. அப்படி நிற்பவர்களிடமும், நாம் தணிந்து அவர்களையும் தளர்த்தி வழிக்குக் கொண்டுவர முயல்வதில் இழிவெதுவுமில்லை. பலருக்குமான வாழ்வைச் செய்துதரும் மேன்மைச் செயலே அது. அதைச் செய்வதற்குரிய தகைமை வாய்ந்தவர்களையே நம் பிரதிநிதிகளாய்த் தேர்ந்துகொள்ள வேண்டும்.

\- ஆசிரியர்

# அசர்பைசானில் இருந்து இலங்கை எண்ணெய் இறக்குமதிக்கு ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

அசர்பைசானில் இருந்து இலங்கைக்கு எண்ணெய் இறக்குமதி செய்வது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அசர்பைசான் வெளிவிவகார அமைச்சர் எல்மர் மம்மத்யாரோ, நேற்றுமுன்தினம் மாலை அலரி மாளிகையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்துள்ளார்.

இதன்போது எண்ணெய் இறக்குமதி குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இலங்கையின் எண்ணெய்த் தேவையில் 90 வீதம் ஈரானில் இருந்து கொண்டுவரப்படுவதாக ஜனாதிபதி இங்கு சுட்டிக் காட்டியுள்ளார். எனினும் ஈரானுக்கு விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடை காரணமாக எண்ணெய் இறக்குமதியில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதனால் அசர்பைசானிடம் இருந்து எண்ணெய் இறக்குமதி செய்ய ஜனாதிபதி விருப்பம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஐ.நா. பாதுகாப்பு குழுவில் நாடாளுமன்றம் அல்லாத உறுப்பினராக உள்ள அசர்பைசான் உலக சமதாதான மற்றும் பாதுகாப்பில் முக்கிய பங்கு வகிப்பதாக வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார். அசர்பைசான் வெளிவிவகார அமைசசருடன் இடம்பெற்ற சந் திப்பின் போது பீரிஸ் இவ் வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கை மற்றும் அசர்பைசான் நகர் பாக்குவிற்கு இடையில் நேரடி விமான சேவையை ஆரம்பிப்பது குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

# அகில இலங்கை ரீதியாக பாணின்விலை 60ரூபா

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை ரீதியாக பாணின் (450 கிறாம் நிறைகொண்டது) தற்போதைய விலை 60 ரூபாவாகும் என யாழ். மாவட்ட வெதுப்பக உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் அறிவித்துள்ளது.

இவ்விலை 30.10.2012 தொடக்கம் நடைமுறையில் இருந்து வருகிறது. என்பதை பொதுமக்களுக்குத் தெரியப்படுத்துவதாகவும் அச்சங்கம் மேலும் தெரிவித்துள்ளது.

பாணின் நிறை சம்பந்தமாக எமது அங்கத்தவர்களான பேக்கரி உரிமையாளர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளது. இதை மீறிச் செயற்படுவோருக்கு எதிராக அத்துறை சார்ந்த அதிகாரிகளால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பாணின் நிறை, தரம என்பவற்றின் குறைபாடுகளை பொதுமக்கள் இத்துறை சார்ந்த அதிகாரிகளிடமோ அல்லது எமது சங்கத்திலோ முறையிட்டால் சம்பந்தப்பட்டவருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு ஆவண செய்வோம் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கர்ப்பிணிகள் மீது சோதனை இன்புளுவென்சா குறித்து எச்சரிக்கை

(கொழும்பு)

இன்புளுவென்ஸா ஏ வைரஸ் தொற்றியுள்ளதாகச் சந்தேகிக்கப்படும் 536 நோயாளர்கள் மீது மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் சோதனை மேற்கொண்டதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டாக்டர் பாலித மஹிபால தெரிவித்தார்.

இந்த வைரஸ் தொற்று உள்ளதாக சந்தேகிக்கப்படுவோருக்கு காய்ச்சல், இருமல் மற்றும் மூக்குச் சிந்துதல் ஆகிய அடையாளங்கள் காணப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

கடந்த சில மாதங்களில் இந்த நோய் ஏற்பட்ட மூவர் இறந்துள்ளதாக அவர் தெரிவித்தார். இது ஆட்கொல்லி வைரஸ் அல்ல. குறைந்தளவான நோய் எதிர்ப்பு சக்தியே இவர்களின் மரணத்திற்குக் காரணம் என டாக்டர் பாலித மஹிபால தெரிவித்தார். நோய் எதிர்ப்பு சக்தி குறைந்தவர்களும் கர்ப்பிணிகளும் கூடுதல் கவனமாக இருக்க வேண்டும் என அவர் குறிப்பிட்டார்.

# மழை வெள்ளத்தால் 23 ஆயிரம்பேர் பாதிப்பு

(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலையால் இதுவரை 5419 குடும்பங்களைச் சேர்ந்த 23002 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இவர்களில் 459 குடும்பங்களைச் சேர்ந்த 2088 பேர் 10 தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாக அந்த நிலையம் குறிப்பிட்டுள்ளது.

முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள அனைவரும் கம்பஹா மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் கூறியுள்ளது.

இதேவேளை, மாலை அல்லது இரவு வேளைகளில் நாட்டில் இடி, மின்னலுடன் கூடிய மழை பெய்யும் என வானிலை அவதான நிலையம் எதிர்வு கூறியுள்ளது.

# செந்தில் தொண்டமான் குழுவினரே தொழிலாளர்கள் மீது தாக்குதல்

## திகாம்பரம் குற்றச்சாட்டு

தொழிலாளர்கள் மீது தாக்குதலை நடத்தியவர் செந்தில் தொண்டமானே ஆகும். கடந்த வாரம் இடம்பெற்ற தொழிலாளர் தேசிய சங்க மே தினத்துக்கு வருகைதந்த எமது ஊவா மாகாண ஆதரவாளர்கள் பண்டாரவளை, பூனாகலை கீழ் கணக்குத் தோட்டத்தில் இ.தொ.கா காடையர்களால் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளனர். இதனை தொழிலாளர் தேசிய சங்கம் வன்மையாகக் கண்டிக்கிறது என தொழிலாளர் தேசிய சங்கத் தலைவரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பி.திகாம்பரம் விடுத்திருக்கும் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவிக்கையில், ஊவா மாகாணத்தில் எமது தொழிற்சங்க அரசியல் நடவடிக்கைகளைப் பொறுத்துக்கொள்ள முடியாத கையாலாகாதவர்கள் எமது ஆதரவாளர்களின் வீடுகளை சேதப்படுத்தியும் அவர்களுக்கு உயிராபத்தை ஏற்படுத்தக்கூடிய தாக்குதல்களையும் மேற்கொண்டுள்ளனர்.

ஊவா மாகாணத்தில் அமைச்சராக இருக்கும செந்தில் தொண்டமான் தனது அரசியல் அதிகாரத்தை துஷபிரயோகம் செய்து இந்தத் தாக்குதலை மேற்கொண்டுள்ளார். தாக்குதலுக்கு உள்ளான எமது அதரவாளர்கள் தற்போது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்த ஆதரவாளர்கள் கடந்த வாரம் எமது மே தினத்தில் கலந்துகொண்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

குறிப்பிட்ட தாக்குதல் நடவடிக்கை இ.தொ.கா.வின் திட்டமிட்ட மிலேச்சத்தனமான செயற்பாடு என்பதை நாம் உறுதிபடத் தெரிவிக்கின்றோம். கடந்த சனிக்கிழமை பதுளையில் ஊவா மாகாண அமைச்சர் செந்தில் தொண்டமான் தலைமையில் எமது ஆதரவாளர்கள் மீது தாக்குதல் நடாத்த திட்டம் தீட்டப்பட்டமை எமக்குத் தெரியவந்தது.

நாம் எமது ஆதரவாளர்களை பாதுகாப்பாக இருக்குமாறு கூறியதுடன் கடந்த ஞாயிறு இந்த சதித் திட்டம் தொடர்பில் எமது ஆதரவாளர்கள் பண்டாரவளை பிரதேச பொலிஸ் மற்றும் இரகசிய பொலிஸ் அதிகாரி அலுவலகங்களுக்கு எழுத்து மூலம் தெரிவித்துமுள்ளனர்.

எனினும் ஞாயிற்றுக்கிழமை தமது திட்டத்தின் படி நிறைவேற்ற முடியாத சதிகார மிலேச்சக் கும் பல் நேற்று முன்தினம் நள்ளிரவில் கோழைத்தனமாக ஏழைத் தொழிலாளர்களின் வீடுகளில் புகுந்து தாக்கியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# முன்மாதிரியான பின்லாந்தின் கல்வி முறை

**எமது சமூகம் உலகத் தரத்துக்கு வளர்ச்சி பெற வேண்டுமானால், உலகின் முன்னேற்றகரமான சமூக, பொருளாதார, கல்வி, கலாசார முறைகளைத் தனக்குள் உள்வாங்குவதன் மூலமே அந்த நிலையை அடைய முடியும். இதற்கு எமது சமூகத்திலுள்ள உரத்துச் சிந்திக்கக்கூடிய கல்வியாளர்கள், புத்திஜீவிகள் முன் கையெடுத்துச் செயற்பட வேண்டும்.**

Programme for International Student Assessment (PISA) என்பது சர்வதேசரீதியில் மாணவர்களின் செயற்பாட்டுத் திறமையைக் கணிப்பிடுவதற்காக, பொருளாதார வளர்ச்சி அமைப்பினால் (Organization for Economic Development – OECD) முன்னெடுக்கப்படுகின்ற செயற்பாடாகும். இக் கணிப்பீடு 1997இல் இருந்து 3 வருடங்களுக்கு ஒருமுறை 15 வயதுடைய மாணவர்கள் மத்தியில் மேற்கொள்ளப் படுகின்றது. இக்கணிப்பீட்டிற்குப் பயன்படும் முக்கியமான பாடங்கள் வாசிப்பு, கணிதம், விஞ்ஞானம் என்பனவாகும்.

2000ஆம் ஆண்டில் 15 வயதுடைய மாணவர்கள் மத்தியில் பெறப்பட்ட PISA கணிப்பீட்டில் பின்லாந்து மாணவர்களே உலகிலேயே வாசிப்பதில் முன்னணியில் உள்ளனர். பின்னர் 2003இல் பெறப்பட்ட கணிப்பீட்டில் கணிதத்திலும் பின்லாந்து மாணவர்களே முன்னணியில் உள்ளனர். 2006இலிருந்து 57 நாடுகளில் நடாத்தப்பட்ட கணிப்பீட்டில் விஞ்ஞானத்திலும் பின்லாந்து மாணவர்களே முன்னணியில் உள்ளனர். ஒருசில ஆசிய நாடுகள் பின்லாந்திலும் பார்க்க கணிதத்தில் முன்னிலையைப் பெற்றுள்ளன.

அண்மையில் சீனாவின் சாங்காய் நகரம் கணிதம், விஞ்ஞானம், வாசிப்பு என்பனவற்றில் முன்னிலையைப் பெற்றுள்ளதும் இங்கு கவனிப்புக்குரியது. ஆனால் ஆசியாவைச் சேர்ந்த ஆசிரியர்கள், தமது மாணவர்கள் கல்வியில் மாத்திரம் கவனம் செலுத்துவதால், விளையாட்டு, இசை போன்ற இன்னபிற துறைகளில் அக்கறை இல்லாமல் அவற்றை ஒதுக்கி விடுவதாகக் கவலைப்படுகின்றனர்.

இவ்வாறு பின்லாந்தின் மாணவர்கள் உலகிலேயே கல்வியில் முதன்மை இடத்தைப் பெறுவதற்கான பின்னணி என்ன என்பதை இப்போது ஆராய்வோம்.



(நன்றி: வானவில்)

## காவலூர் பாலன் கட்டுரையிலிருந்து

மேலும் இந்த முன்னிலைப் பாத்திரத்தை அடைவதற்கு எவ்வாறு செயற்பட்டார்கள் என்பதையும் இங்கு உற்று நோக்குவோம். உண்மையில் இது ஓர் எளிமையான சாதாரண அணுகுமுறையாகும். அதாவது உலகின் முன்னேறிய மேற்கத்தைய நாடுகளின் கல்விச் செயற்பாடுகளுக்கு நேர் எதிரானதே பின்லாந்தின் கல்வித் திட்டமாகும். அவை பின்வருமாறு அமைந்துள்ளன:

1. குழந்தைகள் 7 வயதை அடையும்வரை பாடசாலைக் கல்விக்கு உட்படுத்தப்படுவதில்லை.

2. மாணவர்கள் பதின்ம வயதை (Teen Age) அடையும்வரை பரீட்சையோ, வீட்டுப் பாட வேலையோ கொடுக்கப்படுவதில்லை.

3. முதல் 6 வயதுவரை அவர்களது தராதரம் கணிக்கப்படுவதில்லை.

4. திறமையுள்ள மாணவனோ, திறமை குறைந்தவனோ, ஒரே வகுப்பிலேயே ஒன்றாகக் கற்பார்கள்.

5. 30 வீதமான மாணவர்கள் 9 வயதுவரை பிரத்தியேக உதவியைப் பெறுவார்கள்.

6. விஞ்ஞான வகுப்பில் ஆகக்கூடிய தொகை 16 பேர் மட்டுமே. எனவே அவர்கள் எல்லோரும் செயல்முறைப் பயிற்சியில் ஈடுபட முடியும்.

7. 93 வீதமான மாணவர்கள் உயர் பாடசாலைக் கல்வியை (Academic / Vocational) முடிப்பார்கள். அதில் 43 வீதமானவர்கள் தொழில் பயிற்சிக் (Vocational) கல்லூரிக்கே செல்வார்கள். (இது அமெரிக்காவைவிட 17.5 வீதத்தால் கூடியதாகும்)

8. ஆரம்பப் பாடசாலைகளில் மாணவர்களுக்கு ஒரு நாளைக்கு 75 நிமிட ஓய்வு வழங்கப்படும். (அமெரிக்காவில் இது 27 நிமிடங்கள் மட்டுமே)

9. ஆசிரியர்கள் ஒரு நாளில் 4 மணித்தியாலங்கள் மட்டுமே வகுப்பறையில் மாணவர்களுடன் செலவிடுவார்கள். மேலும் கிழமைக்கு 2 மணித்தியாலங்கள் மாணவர்கள் தொழில் தகைமை வளர்ச்சிப் (Professional Development) பயிற்சிக்குக் கூட்டிச் செல்லப்படுவார்கள்.

10. அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் 1.1 மில்லியன் (11 இலட்சம்) மாணவர்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களின் எண்ணிக்கைக்குச் சமமாகவே பின்லாந்தில் 600,000 (6 இலட்சம்) மாணவர்களுக்குக் கற்பிக்கும் பணியில் ஆசிரியர்கள் உள்ளனர்.

இனி பின்லாந்தின் ஆசிரியர் தெரிவு பற்றியும், அவர்களது கல்வித் தகைமை, சமூக நிலை, ஊதியம் என்பவற்றை இப்போது நோக்குவோம்.

அ. பல்கலைக்கழகத்தில் மிகத் திறமையான முதல் 10 வீதமான மாணவர்களே ஆசிரியர் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். பின் அவர்களும் M.A / Masters Degree பெற்ற பின்னரே கற்பிக்க அனுமதிக்கப்படுவார்கள். இக்கற்றலுக்கான மாணியம் அரசால் வழங்கப்படும்.

ஆ. ஆசிரியர்களின் ஆரம்ப வருடாந்தக் கொடுப்பனவு 29,000அமெரிக்க டொலர்கள் (2008 ஆண்டில்)

இ. இவர்களுக்கும் வைத்தியர்கள், வழக்குரைஞர்கள் போன்றோர்களுக்கு வழங்கப்படும் மரியாதையே உண்டு. அதாவது ஒரே தரத்திலேயே வைத்துக் கணிக்கப்படுவர்.

ஈ. 15 வருடக் கற்பித்தல் அனுபவமுள்ள ஆசிரியர் ஒருவர், கல்லூரிப் பட்டதாரிகளின் சம்பளத்தின் 102 வீதத்தைப் பெறுவார்கள்.

உ. ஆசிரியர்களுக்கு தராதரத்தின் அடிப்படையில் சம்பளம் வழங்கப்படுவதில்லை.

11. 6 வயதை அடைந்த 97 வீதமான குழந்தைகள் அரசாங்கப் பாடசாலைகளுக்கே செல்கின்றனர். அங்கே சில ஆரம்ப அறிவூட்டல்கள் தொடங்குகின்றன. 7 வயதில்தான் முறையான கற்பித்தல் தொடங்குகின்றது.

12. பின்லாந்தில் 3,500 பாடசாலைகளில் 62,000 ஆசிரியர்கள் கற்பிக்கின்றார்கள்.

13. அநேகமான பாடசாலைகள் சிறியவை. எனவே ஆசிரியர்கள் ஒவ்வொரு மாணவரைப் பற்றியும் தெரிந்திருப்பார்கள்.

14. உயர் வகுப்புப் பாடசாலைகளில் கற்கும் மாணவர்களில் 66 வீதமானவர்கள், உயர் கல்விக்காக கல்லூரிகளுக்கு அனுமதிக்கப்படுகிறார்கள். இது ஏனைய ஐரோப்பிய யூனியன் நாடுகளை விட அதிகமானதாகும்.

15. இவ்வளவிற்கும் பின்லாந்து ஒரு மாணவனுக்குச் செலவிடும் தொகை, அமெரிக்கா செலவிடுவதைவிட 30 வீதம் குறைவானதாகும். கனடாவைவிட 13 வீதம் குறைவானதாகும்.

16. உலகிலேயே இங்கே உள்ள மாணவர்கள் மத்தியில்தான், மிகத் திறமையான மாணவர் ஒருவருக்கும், மிகப் பின் தங்கிய மாணவர் ஒருவருக்கும் இடையிலான அறிவுத்திறன் இடைவெளிமிகக் குறைவானதாகும்.

17. 16 வயதிலேயே மாணவர்கள் முதன்முதலாக ஒரு தராதரப் பரீட்சைக்கு முகம் கொடுக்கின்றனர். அதற்கு முன்னதாக எந்தப் பரீட்சையும் இல்லை.

18. பின்லாந்தில் வறுமையில் வாடுபவர்கள் வீதம் 3.4 ஆகும். கனடாவில் வறுமையில் வாடுபவர்கள் 13.6 வீதத்தினர் ஆகும். ஏனெனில் அந்த நாடு இன்னமும் ஒரு சமூக நலன் பேணும் சமூகமாகவே (Welfare Society) இயங்குகின்றது. ஆனால் ஏனைய முன்னேறிய நாடுகளில், சோவியத் யூனியனின் வீழ்ச்சியுடனும், நவ காலனித்துவத்தின் கீழும், மக்கள் முன்னர்பெற்றிருந்த உரிமைகளையும், பல சலுகைகளையும் இழந்து கொண்டு வருகிறார்கள்.

19. ஆசிரியர்கள் மாணவர்களுக்கு இயன்றளவு குறைந்தளவு வீட்டு வேலையே கொடுக்கின்றனர். அத்துடன் விளையாட்டு, நாடகம், இலக்கியம், இசை போன்ற ஏனைய செயற்பாடுகளில் ஈடுபடுமாறும் தூண்டப்படுகிறார்கள்.

20. OECD நாடுகளில் ஒரு மாணவர், ஒரு வருடத்திற்கு வகுப்பறையில் 810 மணித்தியாலங்களைக் கற்றலில் ஈடுபடும்போது, பின்லாந்தில் 640 மணித்தியாலங்களையே கற்றலில் கழிக்கிறார்கள்.

இங்கே குறிப்பிட்ட பல விடயங்களையும் ஒன்றுபடுத்திப் பார்ப்போமானால், நாம் பின்லாந்தின் கல்வி வளத்தைப் பின்வருமாறு சுருக்கிக் கூறலாம். பொருளாதாரத்தில் முன்னேறிய ஏனைய நாடுகளில் நடைமுறையிலுள்ள போட்டிக் கல்வி முறையுடன் ஒப்பிடும்போது, பின்லாந்தில் உள்ள புதிய நடைமுறையில் போட்டி அற்ற சமத்துவக் கல்வி முறையே அமுலில் உள்ளது. இதன் அடிப்படையில் முன்னேறிய - பின்தங்கிய எல்லா மாணவர்களுக்கும், அவர்கள் என்ன பின்னணியில் இருந்து வந்திருந்தாலும், எப்படிப்பட்ட குடும்பப் பொருளாதார நிலையிலிருந்தாலும், கற்றலில் சம சந்தர்ப்பமே வழங்கப்படுகிறது. இதில் முக்கிய விடயமென்னவெனில், போட்டி முறையில் அதிமேதாவிகளை உற்பத்தி (Produce Star Performers) செய்வதல்ல அங்குள்ள கல்வி முறையின் நோக்கம். மாறாக சமூக சமத்துவமின்மையைக் குறைப்பதே கல்வியின் நோக்கமாக உள்ளது.

பின்லாந்து ஒரு ஸ்காண்டிநேவியன் (Scandinavian) நாடு. அதன் எல்லைகளில் கிழக்கே ரஸ்யா, மேற்கே சுவீடன், வடக்கே நோர்வே என்பன உள்ளன. 600 வருட காலத்திற்கு மேற்பட்ட ஆட்சியிலிருந்து பின்லாந்து நாடு சுவீடனால் ரஸ்யாவிற்கு பிரித்துக் கொடுக்கப்பட்டது. 1917இல் ரஸ்யாவில் ஏற்பட்ட போல்ஸ்விக்குகளின் சோசலிசப் புரட்சிக்குப் பின்னர், பின்லாந்து தன்னை ஒரு தனி நாடாகப் பிரகடனப்படுத்திக் கொண்டது. அதன் முடிவு அப்பொழுது லெனின் தலைமையிலான சோவியத் அரசால் அங்கீகரிக்கப்பட்டது.

ஆனாலும் ஏகாதிபத்தியவாதிகளின் தூண்டுதலால், 1939 - 1945இற்கு இடைப்பட்ட காலத்தில் சோவியத் யூனியனுடன் இருமுறை சண்டைகளில் ஈடுபட்டது. அதேபோல் பின்னர் ஜேர்மனியுடனும் போர் புரிந்தது. தற்போது அந்த நாட்டின் மக்கள் தொகை 5.4 மில்லியன்கள் ஆகும். அதில் வெளிநாட்டவர்கள் 4 வீதம் மட்டுமே. பின்லாந்தின் அரச கரும மொழிகள் பினிஸ், சுவிடிஸ் என்பன ஆகும். ஆனாலும் 3ஆவது மொழியாக ஆங்கிலம் பெரும்பான்மையானவர்களால் கற்றலுடன் பேசப்படுகிறது. தொடர்பாடல் ஊடகமாகவும் பயன்படுத்தப்படுகிறது.

பின்லாந்துடன் ஒப்பிடும்போது, எமது இலங்கை பொருளாதாரத்தில் பின்தங்கிய ஒரு மூன்றாம் உலக நாடாக இருந்த போதிலும், 1930களிலேயே மதிப்புக்குரிய C.W.W. கன்னங்கார அவர்களால் எல்லோருக்கும் இலவசக் கல்வி என்ற திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு, இன்று மிக முன்னேறிய முதலாம் உலகத் தரத்தை எட்டியுள்ளது. அது மாத்திரமல்ல, இலங்கை சுதந்திரமடைந்த நாளிலிருந்து ஒரு சமூக நலத்திட்ட (Welfare) நாடாக, இலவசக் கல்வி, இலவச மருத்துவம், இலவச உணவு உதவி என மக்களின் நல வாழ்வுக்கே முக்கியத்துவம் வழங்கி வருகின்றது.

இங்கே புலம்பெயர்ந்து வந்து கனடாவில் வாழும் எமது தமிழ் மாணவர்கள் கனடாவின் தேசிய நீரோட்டத்தில் என்ன நிகழ்கின்றது என்று தெரியாதவர்களாக அல்லது அக்கறை அற்றவர்களாக, புலிகளால் விதைத்து விடப்பட்ட பிற்போக்கு தமிழ் தேசியவாத அலையில் அள்ளுண்டவர்களாக இருக்கின்றனர். 2009இல் இறுதிக்கட்டப் போர் நடந்தபோது, புலிகளைக் காப்பாற்றும்படி கோரி கனடாவின் சட்ட திட்டங்களை மீறி, அந்நாட்டின் பெரும் தெருக்களை மறித்து கனடிய மக்களின் வெறுப்பைச் சம்பாதிக்கும் அளவுக்குத்தான், . கனடிய தமிழ் சமூகம் இருந்தது. ●

## தாயின் மரணச்செய்தி கேட்டு அதிர்ச்சியடைந்த யுவதி காட்டில் மீட்பு



கொட்டக்கலை - மூங்கில் கொட்டக்கலை தோட்டத்தில் தாய் இறந்த செய்தி கேட்டு அதிர்ச்சியில் ஓடி காணாமற் போன யுவதி மீட்கப்பட்டுள்ளார்.

பத்தனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மவுண்ட்வேன்ன காட்டுப் பகுதியில் வைத்து குறித்த யுவதி மீட்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் மாலை குறித்த காட்டுக்கு விறகு வெட்டச் சென்ற பொது மக்கள் யுவதியைக் கண்டு பின் பத்தனை பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர். இதனையடுத்து அங்கு சென்ற பத்தனை பொலிஸார் யுவதியை மீட்டு கொட்டக்கலை வைத்திய சாலையில் அனுமதித்தனர்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட யுவதி பயந்து, பேச முடியாமல் இருந்ததாக தெரிவிக்கப்படுகிறது. சிகிச்சைகளின் பின் யுவதி வீடு திரும்பியுள்ளார்.

கொட்டக்கலை - மூங்கில் கொட்டக்கலை (பொரஸ்ட் கிறீக்) பகுதியில் தனது தாய் இந்த செய்தியைக் கேள்வியுற்ற மகள் அதிர்ச்சியில் ஓடிச் சென்று காணாமல் போன சம்பவம் கடந்த 6 ஆம் திகதி இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# உதவி வைத்திய அதிகாரிகளின் பகிஷ்கரிப்புப் போராட்டம் தொடர்கிறது

(கொழும்பு)

அரச பதிவு செய்யப்பட்ட மற்றும் உதவி வைத்திய அதிகாரிகளின் சங்கம் முன்னெடுத்துள்ள பணிப்பகிஷ்கரிப்பு நேற்றும் தொடர்ந்தது.

தொடர்பாடல் கொடுப்பனவை அரச பதிவு செய்யப்பட்ட மற்றும் உதவி வைத்திய அதிகாரிகளுக்கும் வழங்குமாறு கோரி இந்த தொழிற்சங்க நடவடிக்கை நேற்று முன்தினம் காலை முதல் முன்னெடுக்கப்படுகிறது.

நாடளாவிய ரீதியில் உள்ள 997 வைத்தியசாலைகளில் கடமையாற்றும் அரச பதிவு செய்யப்பட்ட மற்றும் உதவி வைத்திய அதிகாரிகள் இந்த பணிப்பகிஷ்கரிப்பில் இணைந்து கொண்டுள்ளனர். குறித்த வைத்தியசாலைகளில் கடமையாற்றும் சுமார் ஆயிரத்து 550 வைத்திய அதிகாரிகள் பணிப்பகிஷ்கரிப்பை மேற்கொண்டு வருகின்றனர்.

இது தொடர்பில் அதிகாரிகளுக்கு பல தடவைகள் அறிவித்தும் எவ்வித பதிலும் இல்லை என சங்கத்தின் செயலாளர் டாக்டர் மஹிந்த லியனகே தெரிவித்துள்ளார்.




எவ்வாறாயினும் அரச பதிவு செய்யப்பட்ட மற்றும் உதவி வைத்திய அதிகாரிகளுக்கு தொடர்பாடல் கொடுப்பனவுகளை வழங்குவதற்கான இயலுமை இல்லை என சுகாதார அமைச்சின் செயலாளர் டாக்டர் நிஹால் ஜயதிலக கூறியுள்ளார்.

வைத்திய அதிகாரிகள் கோரியுள்ள கொடுப்பனவு வழங்கப்பட்டாலும் மேலும் பல பிரச்சினைகள் உருவாகலாம் என அவர் தெரிவித்துள்ளார்.

## விபசார விடுதி முற்றுகை



யக்கல பகுதியில் பாலியல் தொழிலாளர்கள் எனக் கருதப்படும் பெண்கள் மூவரையும், மற்றுமொருவரையும் கம்பஹ பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

யக்கல பகுதியில் உள்ள வீடு ஒன்றில் கடந்த திங்கட்கிழமை மேற்கொள்ளப்பட்ட சோதனையின்போதே, இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்த வீடு பாலியல் தொழிலுக்காக மிக நீண்டகாலமாக நுட்பமான முறையில் பயன்படுத்தப்பட்டு வந்ததாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. 21, 23, 43 வயதுடைய பெண்கள் மூவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்கள் குருநாகல், வலவ்வத்த, சதிக்காவத்த ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

இந்தச் சந்தேக நபர்களை கம்பஹ நீதவான் நீதிமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை ஆஜர்படுத்தினர்.

## நாடாளுமன்ற அமர்வுகளை நேரடி ஒளி, ஒலிபரப்புச் செய்ய முயற்சி

(கொழும்பு)

நாடாளுமன்ற அமர்வுகளை நேரடியாக ஒளி, ஒலிபரப்புச் செய்வது குறித்து கவனம் செலுத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மக்களுக்கும், நாடாளுமன்றத்திற்கும் இடையிலான உறவுப் பாலமாக ஊடகங்கள் செயற்பட்டு வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்துள்ளார். அரசியல்வாதிகள் தொடர்பில் மக்கள் அதிருப்தியடைந்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்ற அமர்வுகளை நேரடியாக ஒளி, ஒலிபரப்புச் செய்வதன் மூலம் அரசியல்வாதிகளின் நடவடிக்கைகளில் மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என அவர் தெரிவித்துள்ளார். காலநேரப் பிரச்சினை காரணமாக மக்கள் பிரதிநிதிகள் நாடாளுமன்றில் எவ்வாறு செயற்படுகின்றார்கள் என்பது பற்றிய தகவல்கள் முழுமையாக வெளியிடப்படுவதில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்ற அமர்வுகளை



நேரடியாக ஒளி, ஒலிபரப்புச் செய்வதன் மூலம் இந்தப் பிரச்சினைக்கு தீர்வுகாண முடியும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். நேரடியாக ஒளி, ஒலிபரப்புச் செய்வதன் மூலம் நாடாளுமன்ற அமர்வுகளின் தரத்தை அதிகரிக்க முடியும் என ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த யோசனைத் திட்டத்திற்கு ஆளும் கட்சியினரும் ஆதரவினை வெளியிட்டுளமை குறிப்பிடத்தக்கது. அவைத்தலைவர் நிமால் சிறிபால டி சில்வா, சபாநாயகர் சமால் ராஜபக்ஷ மற்றும் ஆளும கட்சியின் பிரதம கொறடா தினேஷ் குணவர்தன ஆகியோர் இந்தத் திட்டத்திற்கு ஆதரவளித்துள்ளனர்.

# லெபனான் சென்ற பணிப்பெண் கொடூரமாக வெட்டிப் படுகொலை

(கொழும்பு)

லெபனானுக்கு வீட்டுப் பணிப்பெண்ணாகச் சென்ற இலங்கைப் பெண் ஒருவர் கொடூரமாக வெட்டிக்கொலை செய்யப்பட்டுள்ளார்.

குறித்த இலங்கைப் பணிப்பெண்ணின் சடலம் கடந்த 6 ஆம் திகதி கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

குறித்த சடலம் தொடர்பில் சந்தேகம் கொண்ட விமான நிலைய அதிகாரிகள் அதனை சோதனை செய்துள்ளனர். அப்போது சடலத்தின் இரு கைகள் மற்றும் தலை மாத்திரம் காணப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. இது குறித்து வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

சடலம் நீர்கொழும்பு வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. மாரவில வடக்கு துடுவாவ பிரதேசத்தைச் சேர்ந்த 32 வயதான டிலிகா மதுசானி என்ற பெண்ணே இவ்வாறு கொடூரமாக கொலை செய்யப்பட்டுள்ளார்.

குறித்த பெண் ஏற்கனவே பல தடவைகள் மத்திய கிழக்கு நாடுகளில் வீட்டுப் பணிப்பெண்ணாக கடமையாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. குறித்த பெண்ணின் சடலம் குப்பைக் கூளமொன்றிலிருந்து கடந்த மாதம் 26 ஆம் திகதி மீட்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

லெபனான் சென்ற பெண் கடந்த ஒரு மாதத்திற்கு முன் காணாமற்போயிருந்ததாகவும் தனிப்பட்ட பிரச்சினை காரணமாக இந்தக் கொலை இடம்பெற்றிருக்கலாம் எனவும் வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் அதிகாரி ஒருவர் அததெரணவிடம் தெரிவித்தார்.



தொழிற்சங்க ஒருங்கிணைப்பிற்கான ஏற்பாட்டுக்குழுவின் ஏற்பாட்டில் மின்சாரக் கட்டண அதிகரிப்புக்கு எதிரான போராட்டமொன்று கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்னால் இடம்பெற்றது. இதன்போது அரசியல்வாதிகள், தொழிற் சங்கவாதிகள் என பலர் கலந்துகொண்டனர்.

# குடும்பஸ்தரைக் கொன்று புதைத்த 5 பேர் கொக்கட்டிச்சோலையில் கைது

கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கச்சக்கொடி சுவாமிமலை பகுதியில் ஒருவரை கொலைசெய்து புதைத்த சம்பவம் தொடர்பில் ஐந்து பேரைக் கொக்கட்டிச்சோலை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்களில் மூவர் 20 வ்யதிற்குக் குறைந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

காணி துப்புரவுப் பணியில் ஈடுபட்டிருந்தோர் சடலம் அழுகிய நிலையில் புதைக்கப்பட்டு இருபபதைக்கண்டு பொலிஸாருக்கு அறிவித்ததைத் தொடர்ந்து இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வந்தனர்.

இந்நிலையில் சடலம் அவரது மனைவியால் அடையாளம் காட்டப்பட்டமை அடுத்து சடலமாக மீட்கப்பட்டவர் - கச்சக்கொடிசுவாமிமலையை சேர்ந்த ஐந்து பிள்ளைகளின் தந்தையான அருளானந்தம் பரமானந்தம் (வயது - 45) என தெரியவந்துள்ளது.

இவர் கடந்த மாதம் 21 ஆம் திகதி காணாமற்போயிருந்த நிலையில் மனைவியினால் கொக்கட்டிச் சோலை பொலிஸ் நிலையத்தில முறையிடபபட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். கடந்த மாதம் 12 ஆம் திகதி பணப்பிரச்சினையொன்று தொடர்பில் ஆறு பேர் இவர் மீது முறைப்பாடு செய்திருந்ததாகவும், அது தொடர்பில் விசாரணை செய்து தீர்த்து வைத்ததாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

இந்நிலையில் கடந்த மாதம் 23 ஆம் திகதி குறித்த நபர் மதுபோதையில் இருந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ஐந்துபேரும் இவரைக் கொலை செய்து புதைத்துள்ளதாக விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொக்கட்டிச்சோலை பொலிஸ் நிலையத்தின் பொலிஸ் குற்றப்புலனாய்வு உத்தியோகத்தர் மொன்ரோவுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான விசாரணைகளை கொக்கட்டிச்சோலை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கே.எம்.எஸ்.கருணாதிஸ்ஸ தலைமையிலான பொலிஸார் மேற்கொண்டுவந்தனர்.

இவர்கள் ஐந்து பேரும் களுவாஞ்சிகுடி நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டபோது அவர்களை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்க நீதவான் உத்தரவிட்டுள்ளார். இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை கொக்கட்டிச்சோலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# புனரமைக்கப்பட்ட வீதிகள் பாவனைக்குத் திறந்துவைப்பு



(கிளிநொச்சி)

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் நிரந்தர புனரமைப்பிற்குட்படுத்தப்பட்ட வீதிகள் கடந்த சனிக்கிழமை மக்களின் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டன.

சிறுவர் அபிவிருத்தி பெண்கள் விவகார அமைச்சர் திஸ்ஸ கரலியத்த, வடமாகாண ஆளுநர் சந்திரசிறி, ஈ.பி.டி.பி.யின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், அம்பாந்தோட்டை நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ ஆகியோர் இணைந்து இவ்வீதிகளைத் திறந்துவைத்தனர்.

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கிராமிய வீதிகளைப் புனரமைத்தல் செயற்பாட்டிற்கமைவாக கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த பல தசாப்தங்களாக புனரமைக்கப்படாத வீதிகள் தற்போது புனரமைக்கப்பட்டு வருகின்றன.

அதனடிப்படையில் கிளிநொச்சி கனகபுரத்தில் அமைந்துள்ள 2 ஆம் பண்ணை மற்றும் 10 ஆம் பண்ணை ஆகியவீதிகள. கொங்கிறிட் இடப்பட்டு நிரந்தர புனரமைப்பிற்குட்படுத்தப்பட்டுள்ளன. அத்தோடு சுமார் 1.3 கிலோமீற்றர்களைக் கொண்ட கிளிநொச்சி குளவீதியும் 15 மில்லியன் ரூபா செலவில் நிரந்தரமாகப் புனரமைக்கப்பட்டு கடந்த 4 ஆம் திகதி மக்களின் போக்குவரத்திற்காக திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வுகளில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், பிரதேச செயலாளர்கள், திணைக்களங்களின் உயரதிகாரிகள், மக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்

## வருண பகவானின் சதி; வேப்பம் பூவுக்கு கிராக்கி

யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலும் தற்போது வேப்பம் பூவுக்கு கிராக்கி ஏற்பட்டுள்ளது.

வேப்பமரம் தற்போது பூத்துக் குலுங்கும் வசந்தகாலம் ஆரம்பித்த நிலையில் யாழ்ப்பாணத்து உணவுப் பண்டங்களில் ஒன்றான 'வடகம்' தயாரப்பது ஆரம்பமான நிலையில் வேப்பம் பூவுக்கு கிராக்கி ஏற்பட்டுள்ளது.

ஆட்கள் இல்லாத காணிகளில் உள்ள வேப்பமரங்கள் தற்போது சுத்திகரிக்கப்படுவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

ஆனாலும் தற்போது ஏற்பட்டுள்ள காலநிலை மாற்றத்தின் விளைவாக அடிக்கடி மழை ஏற்படுவதால் இவ்வேப்பம் பூக்கள் உதிர்ந்து வருவதால் இம்முறை பெரும் தட்டுப்பாடு காணப்படுவதாக பலரும் தெரிவிக்கின்றனர். கிராமப்புறங்களில் உள்ள சில சிறு உற்பத்தியாளர்கள் வடகத்தை உற்பத்தி செய்து சந்தைப் படுத்துகின்றனர். இது தற்போது பருவகால உற்பத்தியாக மேற்கொள்கின்றனர். (இ)

# விழிப்புலனற்றவர்களுக்கு வாழ்வாதார உதவிகள்



(யாழ்.நிருபர்)

வியாவில் ஐயனார் தேவஸ்தானம் ஊடாக பிரித்தானியா வாழ் தொழிலதிபர் நட்டு நட்டுவாணியின் அனுசரணையுடன், இராசநாயம் சுந்தரதாசன் ஊடாக விழிப்புலனற்ற 7 பேருக்கு அண்மையில் வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன.

நல்லூர் பிரதேச செயலரும் காரைநகரைச் சேர்ந்தவருமான செந்தில்நந்தனன் கலந்து கொண்டு இவ்வுதவிகளை உரியவர்களிற்கு வழங்கினார்.

கோழிக்கூடு மற்றும் கோழிக் குஞ்சுகள், மின்சார உபகரணங்கள், சைக்கிள் மற்றும் வீடு கட்டுவதற்கான உதவிகள் என்பனவும் இவர்களுக்கு வழங்கப்பட்டன. வியாவில் தேவஸ்தான அறங்காவலர் க.சோமசேகரம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கிராம சேவக்ர் இ. திருப்புகழூர்சிங்கம், தொழிலதிபர்கள் சீமாட்டி சற்குணம், இ.எஸ்.பி.நாகரட்ணம் மற்றும் பலர் கலந்து கொண்டனர். (10,150)

## மகோற்சவம்

(கொடிகாமம்)

வரணி கும்பிட்டான்புலம் கற்பக விநாயகர் ஆலய மகோற்சவம் எதிர்வரும் 15 ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

இதில் 20 ஆம் திக்தி வசந்தோற்சவ திருவிழாவும், 21 ஆம் திகதி அன்று சம்பறத்திருவிழாவும், 22 ஆம் திகதி வேட்டைத் திருவிழாவும், 23 ஆம் திகதி தேர்த்திருவிழாவும், 24 ஆம் திகதி தீர்த்த உற்சவமும் இடம்பெறும். (130)



# மகாத்மாவின் பொருட்கள் ஏலம்; தடுக்குமாறு சோனியாவுக்கு கடிதம்



லண்டனில், மகாத்மா காந்தி பயன்படுத்திய பொருட்களை ஏலம் விடுவதைத் தடுத்து நிறுத்த வேண்டும் என காங்கிரஸ் கட்சி தலைவி சோனியா காந்திக்கு பிரபல எழுத்தாளர் கிரிராஜ் கிஸோர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.


எதிர்வரும் 21ஆம் திகதி லண்டனில் மகாத்மா காந்தி 1921ஆம் ஆண்டு எழுதிய முக்கியமான கடிதங்கள், அவர் பயன்படுத்திய டம்ளர், யானைத் தந்தத்தால் செய்யப்பட்ட 3 குரங்குச் சிலைகள் ஆகியவை ஏலம் விடப்பட இருக்கின்றன.

இதனைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று எழுத்தாளர் கிரிராஜ் கிஷோர் ஏற்கனவே காங்கிரஸ் கட்சித் தலைவி சோனியா காந்திக்கு கடிதம் எழுதி இருந்தார். இதன் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று சோனியா காந்தியிடம் இருந்து பதில்க் கடிதமும் கிடைத்தது. ஆனால் இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

மகாத்மா காந்தியின் பொருட்கள் லண்டனில் ஏலத்துக்கு வருவது உறுதியாகியுள்ளதால் கவலை அடைந்துள்ள பிரபல எழுத்தாளர் கிரிராஜ் கிஸோர், மகாத்மா காந்தியின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கடிதங்கள் ஏலத்துக்கு வருவதை தடுப்பதற்காக போராட்டத்தில் ஈடுபடப் போவதாக அறிவித்துள்ளார்.

இதனையடுத்து, மகாத்மா காந்தி பயன்படுத்திய பொருட்கள் ஏலம் விடப்படுவதைத் தடுக்கும் பொருட்டு, 'ஏலத்திலிருந்து காந்தியின் விடுதலை' என்ற தலைப்பிலான ஒரு புத்தகத்தையும் கிரிராஜ் வெளியிட்டார்.

இந்தியச் செய்திகள்



காங்கிரஸ் முன்னாள் தலைவர் மேதிலால் நேருவின் பிறந்த நாளையொட்டி, நாடாளுமன்ற வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பிரதமர் மன்மோகன் சிங், காங்கிரஸ் தலைவர் சோனியா, சபாநாயகர் மீராகுமார், சமாஜ்வாடி கட்சித் தலைவர் முலாயம் சிங் யாதவ் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

# இந்தியாவுக்குள் சீனப்படையின் ஊடுருவல் காரணத்தை கண்டுபிடித்தார் முலாயம்சிங்



இந்தியாவுக்குள் ஊடுருவுவதில் என்ன பிரச்சினைகள் உள்ளது என்பதை தெரிந்து கொள்வதற்காகவே காஷ்மீரில் சீன இராணுவத்தினர் ஊடுருவி நோட்டம் விட்டுள்ளனர் என்று சமாஜ்வாடி தலைவர் முலாயம் சிங் யாதவ் கூறியுள்ளார். காஷ்மீர் மாநிலம், லாடாக் பகுதியில் கடந்த மாதம் 15ஆம் திகதி இந்திய எல்லைக்குள் 19 கி.மீ. ஊடுருவிய சீன இராணுவத்தினர் கூடாரம் அமைத்து தங்கினர்.

இருதரப்பிலும் தூதரக ரீதியாகவும் லாடாக்கில் இராணுவ அதிகாரிகள் அளவிலும் நடாத்திய பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து சீனப் படைகள் நேற்று முன்தினம் வாபஸ் பெற்றன.

எல்லையில் பழைய நிலை தொடர்ந்து நீடிக்க இருதரப்பும் ஒப்புக் கொண்டுள்ளதாகவும் இதை உறுதிப்படுத்துவதற்காக இராணுவ அதிகாரிகள் கூட்டம் நடந்ததாகவும் வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் நேற்று அறிவித்தார்.


இது பற்றி சமாஜ்வாடி கட்சித் தலைவர் முலாயம் சிங் யாதவ் கூறியதாவது,

காஷ்மீரில் சீன இராணுவத்தினர் வாபஸ் ஆனாலும், இந்திய பகுதிக்குள் அவர்கள் ஊடுருவியதை மன்னிக்க முடியாது. இந்தியாவுக்குள் ஊடுருவுவதில் என்ன பிரச்சினைகள் உள்ளது என்பதை தெரிந்து கொள்வதற்காகவே சீன இராணுவத்தினர் ஊடுருவியுள்ளனர்.

இந்தியாவை தொடர்ந்து சீண்டி வருவதை சீனா நிறுத்தாது. சீனா நமக்கு துரோகி என்பதை வரலாறு உணர்த்துகிறது.

இப் போது, படைகளை வாபஸ் பெற்றாலும் சீனாவை இந்தியா நம்பக் கூடாது. இவ்வாறு முலாயம் கூறினார்.

# முக்கிய இடங்களைத் தாக்குவோம் இந்தியாவை மிரட்டும் 'அல்ஜிஹாத்'




கொல்கத்தாவில் உள்ள அமெரிக்க தூதரகத்திற்கு சில நாட்களுக்கு முன்னர் வந்த கடிதத்தில் மும்பை, ஐதராபாத், பெங்களூர் உள்ளிட்ட நகரங்களில் உள்ள அமெரிக்க தூதரகங்களின் மீது வெடிகுண்டுத் தாக்குதல் நடத்தப்படும் என கூறப்பட்டுள்ள்து.

'அல்ஜிஹாத்' என பெயரிடப்பட்டுள்ள லெட்டர் ஹேட்டில் எழுதப்பட்டுள்ள அந்த கடிதத்தின் நகலை கொல்கத்தாவில் உள்ள அமெரிக்க தூதரக அதிகாரிகள் மும்பை அமெரிக்க தூதரகத்திற்கு அனுப்பி வைத்துள்ளனர். இதனையடுத்து, மும்பை பொலிஸார் உஷார்படுத்தப்பட்டுள்ளனர்.

அல் ஜிஹாத் என்ற பெயரில் எந்த தீவிரவாத அமைப்பும் இல்லாததால் ஏற்கனவே இயங்கி வரும் தீவிரவாதக் குழுக்கள் இந்த மிரட்டல்க் கடிதத்தை அனுப்பியிருக்கலாம் என மும்பை பொலிஸார் கருதுகின்றனர்.

'மும்பை, ஐதராபாத், பெங்களூர் உள்ளிட்ட முக்கிய நகரங்களில் உள்ள அமெரிக்க தூதரக கட்டடங்களை உடனடியாக காலி செய்து வெளியேற வேண்டும். இல்லாவிட்டால், அமெரிக்க தூதரங்களின் மீது வெடிகுண்டுகளை வீசித் தாக்குவோம்.

வரும் ஜூலை மாதத்திற்குள் இந்தியாவின் முக்கிய நகரங்களில் உள்ள இரயில் நிலையங்கள் மற்றும் மக்கள் அதிகமாக கூடும் இடங்களில் தாக்குதல்களை நடத்துவோம்' என அந்த கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

# கூடங்குளம் எதிர்ப்பாளர் உதயகுமாரின் கடவுச்சீட்டு மீண்டும் முடக்கம்



கூடங்குளம் அணுமின் நிலையத்துக்கு எதிராக போராடி வரும், போராட்டக் குழு ஒருங்கிணைப்பாளர் உதயகுமாரின் கடவுச்சீட்டு மீண்டும் முடக்கப்பட்டுள்ளது.

கூடங்குளம் அணுமின் நிலையத்திற்கு எதிராக போராடி வரும் உதயகுமார் மீது பல்வேறு வழக்குகள் பதிவானதைத் தொடர்ந்து, அவரது கடவுச்சிட்டு சில மாதங்களுக்கு முன் முடக்கி வைக்கப்பட்டது.

இதை எதிர்த்து அவர் உயர் நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்தார். சரியான காரணங்கள் இன்றி கடவுச்சீட்டை முடக்கி வைக்கக் கூடாது என உயர்நீதிமன்றம் உத்தரவிட்டதால், கடவுச்சீட்டு மீண்டும் உதயகுமாரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

இதையடுத்து, உங்கள் கடவுச்சீட்டை ஏன் முடக்கி வைக்கக்கூடாது எனக்கேட்டு, அவருக்கு, கடிதம் அனுப்பப்பட்டது. அதற்கு அவர் பதிலளிக்காததால், மீண்டும் அவரது கடவுச்சீட்டை முடக்கி வைக்க அதிகாரிகள் உத்தரவிட்டனர்.

# ஆந்திராவில் வெய்யிலின் கொடூரம்; ஒரே நாளில் 21 பேர் பலி

ஆந்திராவில் கடந்த ஞாயிரன்று ஒரே நாளில் வெய்யில்க் கொடுமைக்கு 21 பேர் மயங்கி விழுந்து பரிதாபமாக உயிரிழந்தனர். ஆந்திர மாநிலத்தில் தெலுங்கானா, ராயலசீமா ஆகிய பகுதியில் கத் தரி வெய்யில் கொளுத்தி வருகிறது.

ஆனால் சில மாவட்டங்களில் இடியுடன் கூடிய கன மழையும் பெய்து வருகிறது. இந்த இரு சீதோஷ்ண நிலைகளால் மக்கள் அவதிப்பட்டு வருகின்றனர்.



இதில் மெதக், நலகொண்டா, ரங்காரெட்டி, பிரகாசம், கிருஷ்ணா, குண்டூர், நெல்லூர் ஆகிய மாவட்டங்களில் கடந்த ஞாயிரன்று ஒரே நாளில் மட்டும் வெய்யில்க் கொடுமைக்கு 21 பேர் மயங்கி விழுந்து இறந்துள்ளனர். ரங்காரெட்டி மாவட்டம் இப்ரகிம் பட்டினம் என்ற இடத்தில் ஏரிக்கரையோரம் இருந்த மிகப்பெரிய ஆலமரத்தில் இடி விழுந்ததில் ஆலமரம் எரிந்து வீதியில் விழுந்தது.

# கூடங்குளம் மின்நிலையம்; உச்ச நீதிமன்றம் அனுமதி

கூடங்குளம் அணுமின் நிலையம் இயங்க அனுமதி அளித்து நீதிபதிகள் கே.எஸ்.ராதாகிருஷ்ணன், தீபக்குமார் ஆகியோர் அடங்கிய இந்திய உச்சநீதிபதிகள்குழு தனது தீர்ப்பினை வழங்கியது.

எரிசக்தித் தேவைக்காக அணு உலையில் பயன்படுத்தப்பட்ட எரிபொருளை பாதுகாப்பாக சேமிக்கும் முறையை மத்திய அரசு மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர்கள் அறிவுறுத்தினர்.

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ........................................

முகவரி : ........................................

பிறந்த ஆண்டு : ........................................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்

........................................

பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

# இரணைமடு படைத் தலைமையகத்தில் கூடைப்பந்தாட்டப் பயிற்சிப் பட்டறை



(கிளிநொச்சி)

இலங்கை கூடைப்பந்தாட்ட சம்மேளனம், அம்பாந்தோட்டை புளுஸ் கூடைப்பந்தாட்டக் கழகம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்த 3 ஆவது கூடைப்பந்தாட்டப் பயிற்சிப்பட்டறை கிளிநொச்சியிலுள்ள இரணைமடு படைத் தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இலங்கையில் கூடைப்பந்தாட்ட விளையாட்டை ஊக்குவிக்கும் நோக்கிலும், மாணவர்களிடத்தில் அது குறித்த அறிமுகத்தை ஏற்படுத்தும் நோக்கிலும் இந்தப் பயிற்சிப் பட்டறை நடாத்தப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் கிளிநொச்சியில் நடைபெற்ற பயிற்சிப்பட்டறையில் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் உள்ள தெரிவு செய்யப்பட்ட 18 பாடசாலைகள் கலந்துகொண்டன.

அந்தவகையில் யாழ். மாவட்டத்திலிருந்து யாழ்.இந்துக்கல்லூரி, யாழ். இந்து மகளிர் கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி, இராமநாதன் மகளிர் கல்லூரி, ஏஞ்சல் சர்வதேச பாடசாலை, யாழ். மத்திய கல்லூரி, சென். பற்றிக்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணக் கல்லூரி ஆகிய 8 பாடசாலைகளிலிருந்தும் கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து கிளிநொச்சி இந்துக் கல்லூரி, கிளி.மத்திய கல்லூரி, கிளி. மகாவித்தியாலயம், திரேசா பெண்கள் கல்லூரி, வட்டக்கச்சி மகாவித்தியாலயம், மாங்குளம் மகாவித்தியாலயம், ஸ்ரீவிக்னேஸ்வரா மகா வித்தியாலயம் புதுமுறிப்பு விக்னேஸ்வர பாடசாலை, பூநகரி மகாவித்தியாலயம், மல்லாவி மத்திய கல்லூரி, யோகபுரம் மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளிலிருந்தும் மொத்தமாக 144 மாணவ மாணவிகள் பங்கேற்றனர்.

கலந்துகொண்ட மாணவர்களுக்கு கூடைப்பந்தாட்டம் தொடர்பான அடிப்படை நுணுக்கம் பற்றிய விளக்கம் திரையிட்டு காண்பிக்கப்பட்டதுடன், செயன்முறைப் பயிற்சியும் இலங்கை தேசிய கூடைப்பந்தாட்ட தலைமைப் பயிற்றுவிப்பாளரினால் ஆடுகளத்தில் வைத்து பயிற்றுவிக்கப்பட்டது.

இந்தப் பயிற்சிப் பட்டறையின் நிறைவில் அதிகூடிய திறமையை வெளிப்படுத்திய மாணவ, மாணவிகள் 5 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

பிரியந்தி (யாழ். வேம்படி மகளிர் கல்லூரி), ஐஸ்வர்யா, குணதீபன் (யாழ். ராமநாதன் கல்லூரி), நிஷாந்தன் (யாழ். இந்துக்கல்லூரி), லோஜிதன் (மல்லாவி மத்திய கல்லூரி) ஆகியோரே தெரிவு செய்யப்பட்டதுடன், அவர்கள் தேசிய பயிற்சி முகாமில் கலந்து கொள்வதற்கான வாய்ப்பும் வழங்கப்பட்டது.

இதனையடுத்து இப்பயிற்சி முகாமை நிறைவு செய்யும் முகமாக சிறுவர் மற்றும் மகளிர் விவகார அமைச்சர் திஸ்ஸ கரலியத்த, நாடாளுமன்றஉறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் மற்றும் வடமாகாணஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி, கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், வலயக்கல்விப் பணிப்பாளர் பாடசாலை அதிபர்கள், உடற்பயிற்சி ஆசிரியர்கள் என பலரும் கலந்து கொண்டனர். இதன்போது கலந்துகொண்ட மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டதுடன் பாடசாலைகளுக்கு கூடைப்பந்தாட்ட விளையாட்டு உபகரணங் கள் அதிதிகளால் வழங்கி வைக்கப்பட்டன.

இலங்கை கூடைப்பந்தாட்டச் சம்மேளனமும் அம்பாந்தோட்டை புளுஸ் விளையாட்டுக்கழகமும் இணைந்து நடத்தி வரும் இப்பயிற்சிப்பட்டறை முதலில் யாழ். மாவட்டத்திலும் இரண்டாவது பயிற்சிப்பாசறை கொழும்பிலும் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. இதேவேளை 4 ஆவது பயிற்சிப் பாசறை கண்டி, குருநாகலில் நடைபெறவுள்ளது என ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

## பயிற்றுநர்களுக்கான பயிற்சி முகாம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண பாடசாலை கிரிக்கெட் பயிற்றுநர்களுக்கான இரண்டு நாள் பயிற்சி முகாம் இன்று யாழ். சென் ஜோண்ஸ் கல்லூரியில் ஆரம்பமாக உள்ளது.

இலங்கை கிரிக்கெட் சங்கத்தின் பயிற்றுநர் கிளை மற்றும் யாழ். மாவட்ட பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ள இப்பயிற்சி முகாமில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த 17 பயிற்றுநர்களும், மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த 15 பயிற்றுநர்களும், யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த பல பயிற்றுநர்களும் இப் பயிற்சி முகாமில் பங்குகொண்டு பயன் பெறவுள்ளனர்.

தலைமைப் பயிற்றுவிப்பாளர் ஜெறோம் ஜெயரட்ண தலைமையில் கொழும்பிலிருந்து வரவுள்ள இப்பயிற்சிக் குழுவில், சுழற்பந்து பயிற்றுநர்பியால் பிரயதுங்க கமமே உட்பட பலர் பங்குகொண்டு பயிற்றுநர்களுக்கான உத்திகளை வெளிப்படுத்தவுள்ளனர்.

இதில் செயற்முறைப் பயிற்சி மற்றும் எழுத்து மூலமான பயிற்சி என்பன இடம்பெறும் என ஒழுங்கமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (எஸ்.பி.)

# ஹட்ரிக் கிண்ணம் வென்று அசத்தியது துறையூர் ஐயனார்





(வேலணை)

வேலணை அம்பிகை நகர் மகேஸ்வரி விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்பட்ட மாபெரும் கால்பந்தாட்டப் போட்டியில் கிண்ணம் வென்றதன் மூலம் வேலணை துறையூர் ஐயனார் அணி ஹட்ரிக் கிண்ணம் வென்று அசத்தியது.

வேலணை அம்பிகைநகர் மகேஸ்வரி சனசமூக நிலையத்தின் ஆண்டு நிறைவை முன்னிட்டு அதன் விளையாட்டுக்கழகத்தினால் தீவகத்திற்குட்பட்ட கால்பந்தாட்ட அணிகளுக்கிடையிலான மாபெரும் கால்பந்துப் போட்டித் தொடரை நடாத்தியது.

இதில் தீவகத்தைச் சேர்ந்த முன்னணிக் கால்பந்து அணிகள் உட்பட, 38இற்கும் மேற்பட்ட அணிகள் பங்குகொண்டன. இதன் காலிறுதி மற்றும் அரையிறுதிப் போட்டிகள் கடந்த 4,5ஆம் திகதிகளில் அம்பிகைநகர் மகேஸ்வரி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

இதன் காலிறுதிப் போட்டிக்கு அம்பிக்கைநகர் மகேஸ்வரி ஏ,பி, ஊர்காவற்றுறை றேஞ்சர்ஸ், துறையூர் ஐயனார் ஏ, பி, நண்பர்கள் ஏ, புங்குடுதீவு சன் ஸ்ரார், புங்குடுதீவு பாரதி ஏ அணிகள் தகுதிபெற்றன.

முதலாவது காலிறுதிப் போட்டியில் அம்பிகை நகர் மகேஸ்வரி ஏ அணியும், ஊர்காவற்றுறை றேஞ்சர்ஸ் அணியும் மோதின. இதில் சிறப்பான ஆட்டத் திறனை வெளிப்படுத்திய ஊர்காவற்றுறை றேஞ்சர்ஸ் அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது காலிறுதிப் போட்டியில் துறையூர் ஐயனார் ஏ அணியும், நண்பர்கள் ஏ அணியும் மோதின. இதில் இரு அணிகளுமே ஏற்கனவே, இறுதிப் போட்டி ஒன்றில் மோதியமையால் இப்போட்டி இரு அணிகளுக்கும் சவால் நிறைந்ததொரு ஆட்டமாக அமையும் என இரசிகர்களால் எதிர்பார்க்கப்பட்டது. குறிப்பாக, இறுதிப் போட்டியில் அடைந்த தோல்விக்கு நண்பர்கள் அணியால் பழி தீர்க்கப்படும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆட்டத்தின் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய துறையூர் ஐயனார் ஏ அணி 3-0 என்ற கோல் கணக்கில் ஊதித்தள்ளி அரையிறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது.

மூன்றாவதாக நடைபெற்ற அரையிறுதிப் போட்டியில் அம்பிகைநகர் மகேஸ்வரி பி அணியும், புங்குடுதீவு சன் ஸ்ரார் அணியும் மோதின. இதில் ஆரம்பம் முதலே இரு அணிகளும் சிறப்பாக ஆடியபோதும் கோல்கள் பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் ஆட்டம் நிறைவடைந்தது. இறுதியில் தண்ட உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் புங்குடுதீவு சன் ஸ்ரார் அணி 5-3 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது. இறுதியாக இடம்பெற்ற காலிறுதிப் போட்டியில் துறையூர் ஐயனார் பி அணியும், புங்குடுதீவு பாரதி ஏ அணியும் மோதின. இதில் சிறப்பான முறையில் ஆடிய துறையூர் ஐயனார் அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற அரையிறுதிப் போட்டியில் ஊர்காவற்றுறை றேஞ்சர் அணியும், துறையூர் ஐயனார் ஏ அணியும் மோதின. இதில் முற்பாதி ஆட்டத்தில் இரு அணிகளுமே சிறப்பாக ஆடியது. பிற்பாதி ஆட்டத்தில் அசத்திய துறையூர் ஐயனார் ஏ அணி பந்தை தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்ததுடன் ஒரு கோலையும் போட்டு முன்னிலை பெற்றது. இறுதியில் 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்ற துறையூர் ஐயனார் அணி இறுதிப் போட்டியில் ஆடும் தகுதியைப்பெற்றது. இரண்டாவதாக நடைபெற்ற அரையிறுதிப் போட்டியில் துறையூர் ஐயனார் பி அணியும், புங்குடுதீவு சன் ஸ்ரார் அணியும் மோதின. இதில் இரு அணிகளுமே கோல் களைப் பெற்றுக்கொள்ளும் முனைப்புடன் இறுதி வரை போராடிய போதும் எந்தவித பலனும் இன்றி போட்டி நிறைவுக்கு வந்தது. இதன் காரணமாக தண்ட உதை மூலம் வெற்றிதோல்வி தீர்மானிக்கப்பட்டது.இதில் புங்குடுதீவு சன் ஸ்ரார் அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது.

இறுதிப் போட்டியில் துறையூர் ஐயனார் ஏ அணியும், புங்குடுதீவு சன்ஸ்ரார் அணியும் மோதின. இதில் தீவகத்தில், கால்பந்தில் நட்சத்திரமாக மின்னும் துறையூர் ஐயனார் அணிக்கு ஈடுகொடுத்து ஆடும் வகையில் புங்குடுதீவு சன்ஸ்ரார் அணி களத்தில் செயற்பட்டது. வெற்றி என்ற தாகத்துடன் இரு அணிகளும் மோதியபோதும் ஆட்டத்தின் 10ஆவது நிமிடத்தில் போட்டியைத் தொடர்ந்தும் நடத்த முடியாத அளவிற்கு பெரும் தடங்கல் ஏற்பட்டது. கையில் பட்ட பந்தை காம்போல் என நடுவரால் அறிவிக்கப்பட்டது. இது காம்போல் இல்லை என நடுவருடன் வாதிட்ட புங்குடுதீவு சன் ஸ்ரார் அணி, தொடர்ந்து விளையாட பல நிபந்தனைகளை முன்வைத்தது. போட்டி ஏற்பாட்டாளர்கள் சமரசம் செய்து தொடர்ந்தும் ஆட்டத்தில் பங்குகொள்ள பல முயற்சிகள் செய்தனர். அதனை ஏற்கமறுத்துடன் களத்தை விட்டு புங்குடுதீவு சன்ஸ்ரார் அணி வெளியேறி யது. இதன் பின்னர் போட்டி ஏற்பாட்டாளர்கள், விருந்தினர்கள், நடுவர்கள் ஆகியோர் கூடி ஆராயப்பட்டு, துறையூர் ஐயனார் அணிக்கு வெற்றி வழங்கப்பட்டது. இதன் மூலம் துறையூர் வேலணை ஐயனார் அணி கிண்ணத்தை வென்றதுடன் தொடர்ந்து மூன்றாவது கிண்ணத்தையும் கைப்பற்றி அசத்தியது. இதற்கு முன்னர் வேலணைப் பிரதேச செயலக மட்ட கிண்ணம் மற்றும் செட்டிபுலம் ஐயனார் விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்பட்ட கிண்ணம் ஆகிய கிண்ணங்களைக் கடந்த இரு மாதங்களில் தொடர்ச்சியாக வென்று அசத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இப்போட்டி நிகழ்வில் ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கமல், அம்பிகைநகர் மாதர்சங்கத்தலைவர், ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி செனவிரட்ண மற்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்துகொண்டனர். (21)

# சுன்னாகம் ஸ்ரீ கதிரமலைச் சிவன் தேவஸ்தானம்

### ஸ்ரீ சுவர்ணாம்பிகை பாகர் பொன்னம்பலவாணப் பெருமானின் அருள் அனைவருக்கும் கிடைக்கட்டும்

அண்ட சராசரங்களையும் காத்து அருள்புரியும் சைவசமயத்தினரின் முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானின் ஆலயமாக அழகிய இராஜகோபுரத்துடன் காட்சி தரும் கதிரமலையம்பதியானுக்கு இன்று தேர் உற்சவமாகும். அழகிய சித்திரத் தேரினிலே சோமாஸ்கந்தமூர்த்தமாக தேருக்கு எழுந்து அருள் கொர்டுக்கும் காட்சி எம் மனங்களை எல்லாம் ஒருகணம் மகிழ்வில் நிறுத்தி மறக்கமுடியாத நிகழ்வாக அமையப்பெற்றது. பிள்ளையார், முருகன், உமாமகேஸ்வரர் சகிதம் தேருக்கு எழுந்து அருளும் காட்சியைக் காண ஆயிரம் கண் வேண்டும். இக்காட்சியை அனைவரும் தரிசித்து அருள் பெற்று எம் பெருமானின் திருவடியைப் பணிவோமாக!

சுபம்!




**முத்தமிழ்குருமணி சிவஸ்ரீ**
**நா.சர்வேஸ்வரகுரு**
**(பிரதம சிவச்சாரியார்)**

### "கீரிமலையில் வடம்பிடிக்க" வாரீர்!

சுன்னைநகரின் நடுவே அழகிய வானுயர்ந்த இராஜகோபுரத்துடன் அமைந்த கதிரமலையம்பதியான் இன்று எல்லோரின் துன்பங்களையும் நீக்கி தன்னை நாடி வரும் அடியவர்களுக்கு இன்பத்தை வழங்க அழகிய சித்திரத்தேரில் ஏறி அருள் வழங்குகிறார். கலாகேசரி, இரதச்சக்கரவர்த்தி அமரர் ஆ.தம்பித்துரை அவர்களால் பூசாந்தர அமைப்பில் அமைக்கப்பட்ட தேரானது இன்றும் கம்பீரமாக, எவ் ஆலயத்திலும் காண முடியாத அமைப்பில் உருவாக்கப்பட்டதாகும். சோமஸ்கந்தர், விநாயகர், சுப்பிரமணியர், ஸ்ரீ பொன்னம்பாலவாணர் சகிதம் தேருக்கு எழுந்துவரும் காட்சியைக் காண கதிரமலைக்கு வாரீர்! வாரீர்! ஒரு முறை வடம் பிடித்தால் துன்பம் களையும், இன்பம் பெருகும் எனப் பிரார்த்தித்து அமைகின்றேன். கதிரைமலையானின் வடம்பிடிக்க வாரீர்.

**திரு.மு.செல்வஸ்தான்**
**(அதிபர் யாழ்.இனுவில் இந்துக்கல்லூரி பொருளாளர், திருப்பணிச்சபை)**






PC PLAZA
077 990 0000
077 387 8374
077 194 9428
233, K.K.S ROAD,
CHUNNAKAM
pcplaza@gmail.com
C/2729

SINGER Plus
No:136, K.K.S ROAD,
CHUNNAKAM
021 224 0555
C/2718

முத்துமாரி
எசன்ஸ் மார்ட்
சகலவிதமான கெக், யூஸ், கேக் ஐசிங் பொருட்கள் இங்கே பெற்றுக்கொள்ளலாம், அத்துடன் பிறந்தநாள் அலங்காரப் பொருட்களையும் பெற்றுக்கொள்ளலாம்
ஸ்ரேசன் வீதி,
சுன்னாகம் (சந்தி)
077 959 7207
C/2717

PC SOL
Sales and Ser
Station Road,
Chunnakam
pcsolve2010@g
C/2713

எக்ஸலண்ட்
077 527 9228
021 320 7798
e.mail:- excellenttex@live.com
No: 59, K.K.S. ROAD,
CHUNNAKAM
C/2720

Asia
Tech Phone Shop
சிவன்கோவில் வீதி,
சுன்னாகம்.
C/2716

Apex of Computer Technology
Tech Phone Shop
Sales, Service & Repairs
021 320 6893
077 353 0125
Station Road,
Chunnakam
C/2715

துவாரகன்
ஹாட்வெயார்
ஸ்ரேசன் வீதி,
சுன்னாகம்.
C/2714

வினோ
எலக்ட்ரிக்கல்ஸ் அன்ட்
எலக்ரோனிக்ஸ்
ஸ்ரேசன் வீதி,
சுன்னாகம்.
C/2728

சுமித்திரா
தொலைத்தொடர்பு
நிலையம் அன் நெற்
புறோசிங்
ஸ்ரேசன் வீதி,
சுன்னாகம்
021 224 0287
C/2727

RAAMNET.COM
Communication & Computer services
with printing Press
T.P:- 021 321 5253
021 568 3313
Fax:- 021 224 2144
Skype:- raamnetcom
Mail: raamnetcom@yahoo.com
Web: www.raamnet.com
116C, K.K.S. ROAD,
C/2726

சிறி கண்ணன்
ஜுவல் ஹவுஸ்
T.P 021 459 0995
077 923 1602
060 221 9054
K.K.S. ROAD,
CHUNNAKAM.
C/2725

# னம் சித்திரைப் பெருவிழா இரதோற்சவம் - 2013




## தேவஸ்தான இளவரசுவின் ஆசிச் செய்தி

சுன்னையம்பதியுறை கதிரமலையான் தன்னை நாடி வரும் அடியவர்களுக்கு வேண்டிய அருள் வங்குபவர். கதிரைமலையில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிய 13 ஆம் நாள் பெருந்திருவிழா தீர்த்தோற்சவத்துடன் நிறைவுபெறு வதுடன், மறுநாள் சண்டேஸ்வரர் திருவிழாவும், 11.05.2013 திருக்கல்யாண (பூங்காவன) உற்சவத்துடன் பெருந்திருவிழா நிறைவுபெறும். எம்பெருமான் 15 தினங்களும் ஒவ்வொரு அலங்காரத்துடன் காட்சி தரும் அழகே! அழகு. அந்த வரிசையில் இன்று (08.05.2013) இடம்பெறும் சித்திரத்தேர் உலாவின் அழகு சொல்லிற்கடங்கா. அடியவர்களின் அரகரா கோஷம், காவடிகள் ஆட்டம், கற்பூரச் சட்டி ஏற்றும் அடியவர் மறுபுறம் அங்கப்பிரதிஷ்டை என ஒவ்வொருவரும் தங்கள் நேர்த்திகளை நிறைவேற்றி வர கதிரைமலையின் தேரில் உலாவரும் போது வீதி தோறும் எல்லை மானப் பந்தலில் அர்ச்சனைகள் தாராளம் இவை எல்லாம் இவ் ஆலயத்தின் தனிச்சிறப்பாகும். இச்சிறப்புமிக்க தேர்த்திருவிழாக் காட்சியின் அருள் கிடைக்க அனைவருக்கும் ஆசி வழங்கி பிரார்த்திக்கிறேன்.

ஓம் சாந்தி!

சிவஸ்ரீ ச.ஸ்ரீகாந்தக்குரு
(தேவஸ்தான இளவரசு)
(மகோற்சவ குரு)



## ஆலயத்தின் மகிமை

பல நூற்றாண்டுகளுக்கு முன் கதிரமலை இராச்சியத்தை ஆட்சி செய்த உக்கிர ராஜசிங்க மன்னனால் பூசிக்கப்பட்டு வழிபட்ட ஆலயமாகும். இன்றும் மஹோற்சவ காலகட்டியத்தில் உக்கிர ராஜசிங்கனின் பெயர் உச்சரிக்கப்படுவதுடன், வசந்த மண்டபபூஜை நிறைவில் புஷ்பாஞ்சலியின் போதும் மன்னனின் பெயர் கூறப்படுவது இவ் ஆலயத்தின் பழமையை சான்று பகிர்கிறது. வில்வமரத்தை தலைவிருட்சமாகக் கொண்ட ஆலயம் என்பதுடன் ஆலய மணியில் கதிரவளை (கதிரமலை) எனப் பொறிக்கப்பட்டிருப்பது நோக்கக் கூடியது. ஒருமுறை கடும் வெள்ளம் ஏற்பட்டபோது இப்பிரதேச மக்கள் ஆலயத்தில் தஞ்சம் அடைந்தனர். அப்போது (வளை) புற்று ஒன்று ஏற்பட்டு அதற்குள் மழை வெள்ளம் சென்றதாக வரலாறுகள் கர்ண பரம் பரைக்கதையாகக் காணப்படுகிறது. மேலும் இங்கு அஷ்டலஷ்மி ஆலயம், சரஸ்வதிக்கென ஆலயம், தேர்வடிவில் அமைந்த நவக்கிரக ஆலயம் என்பன இவ் ஆலயத்தின் சிறப்பாகும். வருடத்தில் மூன்று தரம் மூன்று வேளைகளில் தேர் உற்சவம் இடம்பெறும் மார்கழித்திருவாதிரையில் அதிகாலையிலும், சித்திரப் பெருவிழாவில் மதியமும், ஆலப்பூர அம்பாள் உற்சவத்தில் இரவும் தேர் உலாவருவது சிறப்பம்சமாகும். எம்பெருமானின் கும்பாபிஷேகப் பெருவிழா காலந்தவறாமல் 12 வருடங்களுக்கு ஒருமுறை நடைபெறுவது இவ்வாலயத்திற்கான சிறப்பாகும். தற்போது ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ நா.சர்வேஸ்வரக்குருவின் வழிநடத்தலில் திருப்பணிச்சபையினர், தொண்டர்கள் இணைந்து சிறப்பான முறையில் ஆலயம் வளர்ச்சியடைந்து சுன்னை நகரின் அழகுக் கோயிலாக மிளிர்வதற்கு ஊரவர்களின் அளப்பரிய பங்களிப்பே ஆகும். இன்றைய நன்னாளில் அனைவருக்கும் அருள் கிடைக்கப் பிரார்த்திப்போமாக.

பிரம்மஸ்ரீ ச.ஸ்ரீகுமார் சர்மா

Mathankey
Cool Bar
காலை, மதியம், மாலை உணவுகள்,
சிற்றுண்டி வகைகள் மற்றும் உடலிற்கு
இனிமையான குளிர்பானங்கள்
சுன்னாகம்
C/2730

OLVE
d Service
021 300 1219
071 462 3852
2010@gmail.com

லபிசன்
கோல்டன் கிரேப்ஸ்
தங்கநகை வியாபாரம்
நவீன வடிவமைப்புகளில் அழகிய தங்க நகைகளைச் செய்து பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஸ்தாபனம்
ஓடர் நகைகள், குறித்த தவணையில் உத்தரவாதத்துடன் 22 கரட்டில் செய்து கொடுக்கப்படும்
ஸ்ரேசன் வீதி, சுன்னாகம்
021 222 4143
C/2711

M.T.S
Jewellery Work Shop
நவீன முறையில் அழகிய டிசைன்களில் 22 கரட் தங்கத்தில் உங்கள்எண்ணம்போல் ஓடர் நகைகள், குறித்த தவணைய-ல் உத்தரவாதத்துடன் செய்து பெற்றுக்கொள்ள
எம். ரி. எஸ்
நகைத் தொழிலகம்
இல: 42 Dr. சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம்
021 720 0124
C/2719

சக்தி
கூல்பார்
சிவன்கோவில் வீதி,
சுன்னாகம்.
C/2712

மதூர்
டீசல் என்ஜினிஜேர்ஸ்
சகலவிதமான பம்புகளையும் நொசில்களையும் தரமான முறையில் சேவிஷ் செய்யவும், அதற்கான உதிரிப் பாகங்களைப் பெற்றுக்கொள்ளவும், தர மான வாகன உதிரிப்பாகங்களைப் பெறவும் நாடவேண்டிய சிறந்த ஸ்தாபனம்.
T.P 021 224 0004
C/2710

ஜெய துர்க்கா
மோட்டோர்ஸ்
ஸ்ரேசன் வீதி,
சுன்னாகம்.
(சிவன்கொவில் முன்பாக)
C/2708

சிவாஸ்
தளபாட விற்பனை
நிலையம்
T.P 077 634 1119
ஸ்ரேசன் வீதி,
சுன்னாகம்.
C/2709

Raj Music
116, K.K.S ROAD,
CHUNNAKAM.
C/2724

நியூ சோதி
நகைத் தொழிலகம்
இல: 64 Dr. சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம்.
T.P 071 894 6461
C/2723

யோகன் களஞ்சியம்
இல: 17, 19 சந்தை தெற்கு வீதி,
சுன்னாகம்.
T.P 077 169 8442
C/2722

எரிக் கணேஷ்
மூக்குக்
கண்ணாடி அகம்
இல: 107 கே.கே.எஸ். வீதி,
சுன்னாகம்.
021 224 0255
C/2721



ருஹுனு பல்கலைக்கழகத்தின் ஐந்து மாணவர்களை நீக்கியமைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில், எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது. பல்கலைக்கழக வளாகத்தின் பிரதான வாயிலில் இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது. ருஹுனு பல்கலைக்கழகத்தின் மாணவர் ஒன்றியத்தினால் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. பகிடிவதையில் ஈடுபட்டார்கள் என தெரிவித்தே இவர்கள் கடந்த 4ஆம் திகதி முதல் பல்கலைக் கழகத்தில் இருந்து இடை நிறுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# நடைமுறைச் சாத்தியமான வழியில் அரசியல் உரிமைகளை வென்றெடுப்பதே இலக்கு



நடைமுறைச் சாத்தியமான வழியில் மக்களுக்கான அரசியல் உரிமைகளை வென்றெடுப்பதே எமது இலக்காகும் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா அவர்கள் தெரிவித்துள்ளார். யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அமைச்சரின் செயலகத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற வடமராட்சி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தினருடனான கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கிளிநொச்சி அறிவியல் நகரை எவ்வாறு அரசுடன் பேசி அதனை யாழ்.பல்கலைகழகத்திற்காக பெற்றுக் கொண்டோமோ அதேபோன்று குடாநாட்டில் படைத்தரப்பினர் வசமுள்ள பகுதிகளையும் நிச்சயம் மீட்டெடுப்போம். அதற்கு மக்கள் சரியான வழி நின்று மக்களுக்காக சேவையாற்றுபவர்களுக்கு பலம் சேர்க்க வேண்டும். அவ்வாறான சந்தர்ப்பத்திலேயே இவை சாத்தியமாகும். அந்த வகையில் தும்பளை கிழக்கிலிருந்து தொண்டைமானாறு வரையான கடற்கரைப் பகுதிகளை படைத்தரப்பினரிடமிருந்து மீளப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

இதன்போது ஈ.பி.டி.பி.யின் வடமராட்சி இணைப்பாளர் சிறிரங்கேஸ்வரன், ஈ.பி.டி.பி.யின் வல்வெட்டித்துறை இணைப்பாளர் தெய்வேந்திரம் ஆகியோர் உடனிருந்தனர்.

# 150 ஆண்டுகளாக மனிதாபிமான சேவையில் செஞ்சிலுவை

## இன்று செஞ்சிலுவைத் தினம் - மே 08

ஹென்றி டுனான்ட் என்பவரால் உருவாக்கப்பட்டதே செஞ்சிலுவைச் சங்கம். 1828 மே 08ஆம் திகதி சுவிஸ் நாட்டில் ஜெனிவாவில் பிறந்த இவர் வர்த்தக நோக்கமாக 1859ஆம் ஆண்டு இத்தாலிக்குப் போகும் போது இத்தாலியில் வடக்கு எல்லையில் சொல்பரினா என்னும் இடத்தில் பிரான்ஸுக்கும், ஆஸ்த்திரியாவுக்கும் சண்டை மூண்டது. சண்டையில் 40,000இற்கும் மேற்பட்ட படைவீரர்கள் காயப்பட்டும், இறந்தும் காணப்பட்டனர். இவர்களுக்குத் தேவையான மருந்து, முதலுதவி என்பன வழங்கப்படாத காரணத்தால் இந்நிலமை ஏற்பட்டது. இதனைக் கண்ணுற்ற ஹென்றி டுனான்ட் உடனடியாக அவர்களுக்கு உதவி செய்வதற்காக பல தொண்டர்களை இணைத்து.



முதலுதவியும், மருத்துவ உதவியும் வழங்கி பலரைக் காப்பாற்றியிருந்தார். இக்காட்சி அவருக்கு பெரும் அதிர்ச்சியை அளித்தது.

எனவே, 1862ஆம் ஆண்டு போர் காலங்களில் தான் கண்ட காட்சியை வைத்து சொல்பரினா நினைவுகள் (Memory of Solferina) என்ற புத்தகத்தை வெளியிட்டார். இப்புத்தகம் செஞ்சிலுவைச் சங்கம் ஆரம்பமாவதற்கு சர்வதேச ரீதியில் அங்கீகாரம் பெற்றது. 1863இல் செஞ்சிலுவைச் சங்கம் உருவாகியது. இதில் இரண்டு விடயங்கள் முக்கியம் பெற்றன.

1. காயப்பட்டவர்களை கவனிக்க தொண்டர்கள் இணைக்கப்படல் வேண்டும்.

2. இத்தொண்டர்களையும், பாதிக்கப்பட்டவர்களையும் பாதுகாக்க சர்வதேச சட்டங்களை ஏற்படுத்தி, சர்வதேசம் அவற்றை அங்கீகரிக்க வேண்டும்.

இந்த நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு 16 நாடுகள் இணைந்து செஞ்சிலுவைச் சங்கத்தை உருவாக்கினர்.

இன்று 191 நாடு செஞ்சிலுவைச் சங்கம் ஜெனிவாவை மையமாகக் கொண்டு செயறபட்டு வருகின்றது. இச் சங்கத்தின் கொடியின் செஞ்சிலுவையானது ஜெனிவா நாட்டின் தேசியக் கொடியின் சிவப்பு பின்னணியில் உள்ள வெள்ளைச் சிலுவையை வெள்ளைப் பின்னணியில் சிவப்பு சிலுவையாக மாற்றி அமைத்து உருவாக்கப்பட்டது. இதுதான் 'உலகளவில் காணப்படும் நடுநிலைமையுடன் செயல்படும் செஞ்சிலுவையின் அடையாளமாகும்.

செஞ்சிலுவைச் சங்கம் மூன்று பிரிவுகளாக செயற்படுகின்றது.

1.செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் குழு - ICRC

2.தேசிய செஞ்சிலுவையின் சங்கங்கள் - N.S

3.சர்வதேச செஞ்சிலுவை சம்மேளனம் - IFRC

**சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக்குழு - *ICRC***

1863ஆம் ஆண்டு ஹென்றி டுனான்ட் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஆயுத மோதல்கள், உள்நாட்டு கலகங்களால் பாதிக்கப்படும் மக்களுக்கு பாதுகாப்பு வழங்குவதற்காக உலக நாடுகளினால் அதிகாரமளிகக்கப்பட்ட ஒரு தனிப்பட்ட நடுநிலமையான சுயாதீன மனிதநேய அமைப்பாகும்.

இது ஆயுத மோதல்களில் பாதிக்கப்படடோருக்குபல்வேறுபட்ட அமைப்புக்களால வழங்கப்படும் சர்வதேச நிவாரணங்களை பகிர்ந்தளிக்கும். அதோடு துன்பப்படும் மக்களுக்கு சர்வதேச உரிமைச் சட்டத்தை நடை முறைப்படுத்துவதில் உறுதிப்படுத்துகின்றது. உயரமான இடத்தில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் அமைக்கப்பட்டு இருந்தாலும் குவாண்டனாமா முகாம் பற்றி கடுமையாக விமர்சனங்கள் உண்டு.

சிறுவர்களை போரில் பயன்படுத்துதல் மிக வன்மையாக கண்டிக்கும் இவ் அமைப்பு எல்லைப் போர், உள்நாட்டு யுத்தங்கள், இனக்கலவரங்கள் என்பவற்றையும் இவ் அமைப்பு வன்மையாகப் பக்கச் சார்பில்லாமல் கண்டிப்பதால் சர்வதேசத்திற்கு ஆறுதல் அளிக்கும் ஒரு நிறுவனமாக மதிக்கப்படுகின்றது. போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதுடன் போர்காலங்களில் கடைப்பிடிக்கப்பட வேண்டிய சர்வதேச நியமனங்களைப் பற்றி வலியுறுத்தும் அமைப்பாகும். இன்று போர்காலங்களின் தன்மை மாறி வருகின்றது. புதிய ஆயுதங்கள் பயன்படுத்துதல், பாதிக்கப்படும் மக்களின் அளவு அதிகரித்து வருதல் என்பன காரணமாக, இந்த அமைப்பின் செயற்பாடு முன்பு ஒரு போதும் இல்லாதளவு சிக்கலாகியுள்ளது. இலங்கையைப் பொறுத்தவரையில் சர்வதேச செஞ்சிலுவைக் குழு உள் நாட்டுப் போரில் மிகவும் கணிசமாக செயற்பட்டிருப்பதாக உள்ளூர் செய்தியாளர்கள் கூறுகின்றார்கள். இருந்தாலும், கடைசியாக *வன்னியில் இருந்து வெளியேறியது ஓர் கசப்பான செய்தியாகும்.* இன்று 92 நாடுகளில் 13000 ஊழியர்களுடன் செயற்படும் ஓர் அமைப்பாகும்.

**தேசிய செஞ்சிலுவைச் சங்கங்கள், செம்பிறைச் சங்கங்கள் - *N.S***

உலகளாவிய ரீதியில் இயங்கிவரும் இயக்கமான செஞ்சிலுவை செம்பிறைச் சங்கங்கள், அனர்த்த நிவாரணம், சுகாதாரச் சேவை சமூகசேவைகள், பலதரபட்ட மனிதாபிமானச் சேவைகளை, அரசுக்குத் துணையாக அதனது சொந்த நாட்டிலேயேசெய்கின்றது. அதனது கொள்கைகளைப் பலப்படுத்த தேவையான வலைப்பின்னல் அமைப்புக் கொண்ட மனிதாபிமான இயக்கம் ஒன்றாகும்.

**சர்வதேச செஞ்சிலுவை, செம்பிறை சங்கங்களின் சமாசம் - *IFRC***

1919ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. தேசிய சங்கங்களினால் ஜெனிவாவில் 191 நாடுகள் கையொப்பமிட்டு உருவாக்கப்பட்டதாகும். இது இன, மத வர்க்கம், ஆகிய வேறுபாடின்றி மிகவும் பாதிக்கப்பட்ட மக்களது நிலைமைகளை மேம்படுத்துவதே இதன் நோக்கம். தனது நிவாரணப்பணிகள் ஊடாக தேசிய வளங்களைப் பலப்படுத்துகின்றது.

**இச் சங்கங்கள் யாவும் :-**

மனிதாபிமானம், பாராபட்சமின்மை, நடுநிலமை, சுயாதீனம், தொண்டர் சேவை, ஒருமைப்பாடு, சர்வதேச மயம் என்று அதன் முக்கிய ஏழு கொள்கையின் அடிப்படையிலேயே செயற் படுகின்றது.

**இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்**

1932ஆம் ஆண்டு மலேரியா நோயைக் கட்டுப்படுத்த பிரித்தானியாவால் இலங்கை அரசாங்கத்துக்கு உதவுவதாய் உருவாக்கப்பட்டது. 1948இல் சுதந்திரத்திற்குப்பின்பு இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் என 1949இல் உருவாகியது. 1952இல் சர்வதேச செஞ்சிலுவை செம்பிறைச் சங்கத்துடன் இணைந்தது. 1972இல் இலங்கை செஞ்சிலுவை எனப் பெயரிட்டு செயற்படத் தொடங்கியது. செயற்பட்டும் வருகின்றது. இவற்றின் சேவைகள், முதலுதவிப் பயிற்சி, முதலுதவி சேவை, அடிப்படை சுகாதார சேவை, மனிதனால், இயற்கையால் ஏற்படுத்தப்படும் அனர்த்தங்களுக்கு நிவாரணம் வழங்கல், இரத்த தான முகாம், நடமாடும் மருத்துவ சிகிச்சை முகாம் நடாத்தல், சமூகங்களுக்கு எயிட்ஸ் பற்றி பாதுகாப்பு விழிப்புணர்வூட்டல், அனர்த்தத்துக்கு எப்படி முகம் கொடுப்பது என்பதற்கு பயிற்சி அளித்தல், அடிப்படை ஏழு கொள்கைகளை பரப்புரைகளை செய்தல், அத்துடன் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பலவகையிலும் உதவி செய்தல், சுனாமி வீட்டுத் திட்டம், யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வைத்தியசாலைகள் புனரமைப்பு என்பன போன்ற பல்வேறு நிவாரணத்தினை செய்து வருகின்றது.

**யாழ்ப்பாண செஞ்சிலுவைச் சங்கம்**

இலங்கை செஞ்சிலுவைச் சங்கங்களின் மாவட்ட கிளையாக இது இயங்கி வருகின்றது. இது

தேசிய அடிப்டையில் செயற்படும் எல்லா நிவாரணப்பணிகளிலும் செயலாற்றுகின்றது. குறிப்பாக கூறும் போது யுத்தகாலங்களில் யாழ்.மாவட்டத்தில் இருந்த ஊரடங்குச் சட்ட நேரத்தில் இரவு-பகல் 24 மணித்தியாலம் அம்புலன்ஸ் சேவை யாழ். மக்களால் மறக்கமுடியாது. அத்துடன் முகாம்களில்இருந்த மக்களுக்கு நிவாரணம், மருந்து வசதிகள் வழங்கப்பட்டன. முகாம்களுக்கு வெளியில் வைத்தியசாலைகள் இல்லாத இடங்களில் 2012 வரை நடமாடும் வைத்திய சேவைகள் செய்யப்பட்டன. இது ICRC உதவியுடன் மேற்கொள்ளப்பட்டது.

**கு.பாலகிருஸ்ணன்**
**செயலாளர்**
**இலங்கை செஞ்சிலுவைச்சங்கம்,**
**யாழ்.கிளை.**

# வீதிகளுக்கான பெயர்ப்பலகை பொருத்துமாறு கோரிக்கை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் 6 பிரதேச செயலர் பிரிவுகள் உள்ளடங்கலாக பிரதான உள் வீதிகளுக்கு வீதிக்குரிய பெயர்ப்பலகைகள் பொருத்தப்படாமல் இருப்பதால் வீதிகளைத் தெரியாத மக்கள் அலைந்து திரிவதாக விசனம் தெரிவிக்கப்படுகிறது.

இம்மாவட்டத்தில் கரைத்துறைப்பற்று, ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு, வெலிஓயா, துணுக்காய், மாந்தை கிழக்கு ஆகிய பிரதேச செயலக பிரிவுகளில் உள்ள பிரதேச சபைகளுக்கு சொந்தமான உள்வீதிகளுக்கு 3 மொழிகளிலும் பெயர்ப்பலகை பொருத்தப்படவேண்டியது அவசியமானதாகும்.

இந்நிலையில் இவ்வீதிகளுக்கு பெயர்ப்பலகை பொருத்தப்படாமல் இருப்பதால் வெளியிடங்களில் இருந்து வரும் மக்கள் வீதிகளின் பெயர் தெரியாது அப்பகுதியில் வசிப்போரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளவேண்டியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எனவே உள்வீதிகளின் பிரதான வீதிகளுக்கு பெயர்ப்பலகையை பொருத்த உரிய அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (04)

# போதனாசிரியர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

புடவைக் கைத்தொழில் திணைக்களத்தின் கீழ் இயங்கும் புடவைத்தொழில் பாடசாலைகளில், புடவைத் தொழில் போதனாசிரியர் பதவிகளுக்கு தகைமையுள்ள இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

இப்பதவிகளுக்கான ஆட்சேர்ப்பில் எழுத்துப் பரீட்சை முதல் நடைபெற்று சித்தியடையும் விண்ணப்பதாரி செயன்முறைப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு, வெற்றி எண்ணிக்கையின் இரு மடங்கானோர் பொது நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

பரீட்சை சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளில் நடைபெறும்.

விண்ணப்பதாரிகள் தமது விணணப்பங்களை எதிர்வரும் ஜூன் 7ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கும் வகையில் புடவைக் கைத்தொழில் பணிப்பாளர், புடவைக் கைத்தொழில் திணைக்களம் இல 111 டீ.பீ. ஜயா மாவத்தை கொழும்பு - 10 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கவேண்டும்.

மேலும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் புடவைத் தொழில் போதனாசிரியர் பதவி எனக் குறிப்பிடல் வேண்டும்.

கல்வித் தகைமை உள்ளிட்ட ஏனைய விபரங்களை தினமுரசு காரியாலயத்தில் பார்வையிடலாம்.

# வேலைகள் ஆரம்பம்

(வரணி வடக்கு)

யா.வரணி சைவப்பிரகாச வித்தியாசாலை புனரமைப்பு வேலைகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இப்பாடசாலைக்கு அரசினால் 5 இலட்சம ரூபா அபிவிருத்திக்கு ஒதுக்கப்பட்ட நிலையில் இந்நிதி மூலம் கிணறு புனரமைப்பு, மலசலகூட திருத்தவேலை மற்றும் சுற்றுமதில் அமைப்பு வேலைகள இடம்பெறுகின்றன. அதே வேளை மாணவர்களின் பெற்றோர்களும் இவ்வேலைத்திட்டத்திற்கு பூரண ஒத்துழைப்பு வழங்குவதாக தெரிவிக்கப்படுகிறது. (150)

# உடையார்கட்டு குரவில் முத்துமாரியம்மன் கும்பாபிஷேகம்

(உடையார்கட்டு)

முல்லை உடையார்கட்டு குரவில் ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தான புனராவர்த்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் இடம்பெறவுள்ளது.

27ஆம் திகதி திங்கட்கிழமை காலை 6.13 விநாயக வழிபாடு, அனுக்கை, கணபதிஹோமம், நவக்கிரகமம், மாலை 4.00 மணிக்கு கிராமசாந்தி, பிரவேசபலி, வாஸ்துசாந்தி, மிருத்சங் கிரணம், அங்குரார்ப்பணம், ரக்ஷாபந்தனம் கடஸ்தாபனம், கலாகர்ஷ ணம் யாகபூஜையும், இரவு 11.28 - 12.40 வரையுள்ள சுபவேளையில் கலசதாபனம், தீபஸ்தாபனம், யந்திரதாபனம், பிம்பதாபனம் அஷ்டபந்தனம் என்பன இடம்பெறவுள்ளது 28.ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.00மணிக்கு அடிய வர்கள் எண்ணெய்க்காப்பு சாத்தும் வைபவமும், யாகபூஜையும், மாலை 5.00 மணிக்கு விநாயகர் வழிபாடு, விசேட சாந்தி, பிம்பசுத்தி பூர்வசந்தானம், யாகபூஜை, விஷேதிரவ்யஹோமம் பச்சிம சந்தா னம் வேதஸ்தோத்திர தேவா பராயணம் இடம்பெறும்.

29ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணிக்கு விநாயக வழிபாடு யாகபூஜை, மஹா பூர்ணாகுதி, அந்தர்பலி பகிர்பலி, கும்பம், வீதி பிரதட்சணம் 11.28 - 11.48 வரையுள்ள சுபமுகூர்த்தத்தில் கும்பாபிஷேகம் தொடர்ந்து தசதர்ஷணம் ஆச்சார்ய சம்பாவனை, ஆசிர்வாதம் மஹா அபிஷேகம். என்பன இடம்பெறும்.

பிரதிஷ்டா சிவாச்சாரியார் சிவப்பிரம்ம சுந்தர செந்தில்ராஜா சிவாச்சாரியார் (துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பளை) தலைமையில் இடம் பெறும். (21)

# பொதுக்கூட்டம்

(வரணி வடக்கு)

வடக்கு வரணி விவசாய சம்மேளனத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் நாளை வியாழக்கிழமை காலை 10 மணிக்கு தம்பான் விநாயகர் சனசமூக நிலையத்தில் சாவகச்சேரி கமநல சேவைகள் நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் க.சத்தியேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

அன்றையதினம் புதிய நிர்வாகசபைத் தெரிவும்நடை பெறவிருப்பதாக வட.வரணி சம்மேளனத்தின் செயலாளர் க. தியாகராசா அறிவித்துள்ளார். (150)



திருநெல்வேலி வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கத்தின் ஆண்டு விழாவின்போது வடமாகாண சமூக சேவைத் திணைக்களப் பணிப்பாளர் நளாயினி இன்பராஜ் உரை நிகழ்த்துவதையும், சிறுமிகளின் நடன நிகழ்வையும் காணலாம். (137)

# ஆயுர்வேதம்



## உட்புற வறட்சி... வெளிப்புற வியர்வை!

உடலின் உட்புறப் பகுதிகளில் வறட்சியும், வெளிப்புற தோல்பகுதியிலிருந்து அதிக வியர்வையும் ஏற்பட்டால் நெய்ப்பு என்னும் எண்ணைப் பசை உடலில் குறைந்துவிடும். வறட்சி மற்றும் வியர்வைப் பெருக்கு ஏற்படக் காரணமாக இருப்பது, உணவு மற்றும் செயல்களில் நெருப்பு – வாயு – ஆகாயம் போன்ற மகாபூதங்களின் சேர்க்கைதான். இவற்றின் வரத்து அதிக அளவில் உள்ள நிலையில் நிலம் மற்றும் நீரின் அம்சம் குறையும்போது, உடல் வேகமாக இளைக்கத் தொடங்கி, பல்வேறு உபாதைகளும் தோன்றக் கூடும்.

உட்புற வறட்சி, வெளிப்புற வியர்வை யாருக்கு அதிகரிக்கக் கூடும் என்று ஒரு பட்டியலை ஆயுர்வேதம் தயாரித்திருக்கிறது. நோய்களின் தாக்குதலால் உடல் மெலிந்தவர், மருந்துகளைத் தொடர்ந்து சாப்பிட வேண்டிய நிர்ப்பந்தமுள்ளவர், மதுபானம் அருந்துபவர், மனதில் மகிழ்ச்சி இல்லாமல் சோகமாகவே இருப்பவர், கனமான சாமான்களைத் தூக்குவதால் சோர்வடைந்தவர், அதிக தூரம் நடந்து செல்பவர், இருமலால் மார்புக் கூடு பலவீனமடைந்தவர், இயற்கையாகவே உடல் வறட்சியாயிருப்பவர் போன்றவர்களுக்கு, உபாதைகள் நன்றாகத் தென்படும்.

நெருப்பு, வாயு, ஆகாயம் எனும் மகாபூதங்களைக் குறைத்து, நிலம் மற்றும் நீரின் அளவு உடலில் கூடினால் உபாதைகள் குறைய வாய்ப்பிருக்கிறது. மாமிச சூப், பால், சீனி, நெய், நல்ல உறக்கம், படுக்கையில் சுகமாகப் படுத்திருத்தல், மூலிகை எண்ணைய்த் தேய்ப்பு, குளியல், திருப்தி மற்றும் மகிழ்ச்சி போன்றவற்றின் தொடர் உபயோகத்தினால் உபாதைகள் பல குறைந்து விரைவில் குணமடையலாம். ஏனென்றால் இவை அனைத்தும் நிலம் – நீரின் அளவை உடலில் அதிகரிக்கச் செய்து, நெருப்பு – வாயு – ஆகாயம் ஆகியவற்றைக் குறைத்துவிடுபவை.

மேற்குறிப்பிட்டவை உடலுக்குச் செய்யும் நன்மைகள் – உடல் வலு கூடும், உடல் போஷணை பெறும். மேற்குறிப்பிட்ட உணவு மற்றும் சிகிச்சை முறைகளை, உடல் உபாதைகள் குணமாகும் வரைதான் செய்ய வேண்டும். அவற்றின் மீது விருப்பம் ஏற்பட்டு, அவற்றையே தொடர்ந்து செய்து கொண்டிருந்தால், உடல் பருமன், நீரிழிவு, காய்ச்சல், வயிற்றில் நீர் சேர்தல், பௌத்திரம், இருமல், மூர்ச்சை, சிறுநீர்த்தடை, மப்பு நிலை மற்றும் தோல் உபாதைகள் ஏற்படக் கூடும்.

எளிதில் செரிக்கக் கூடியதும், உடல் போஷணைக்கு உதவக் கூடியதுமான உணவே இதற்குச் சிறந்தது. காலையில் புழுங்கலரிசிக் கஞ்சியுடன், நெய்யும் உப்பும் கலந்து வெதுவெதுப்பாகச் சாப்பிட்டால், உடல் புஷ்டிக்கு ஏற்றதாக இருக்கும். உப்பைத் தவிர்த்து இந்தக் கஞ்சியுடன் நெய்யும் சீனியும், பாலும் கலந்து வெதுவெதுப்பாகக் காலையில் குடித்தால் அது உடல் ஊட்டத்துக்கும் சுறுசுறுப்புக்கும் ஏற்றதான உணவாகும். மாமிச சூப்பும் கலந்து பருகலாம். மதியம் நல்ல திடமான இனிப்பும் நெய்ப்பும் தரக்கூடிய சவ்வரிசி பாயசமும், சோற்றுடன் பருப்பும், தயிரும் சாப்பிட உகந்தவை. மாலையில் அல்வா போன்ற இனிப்பும், இரவில் சீனி கலந்த பாலும் சாப்பிட ஏற்றவை.

ப்ருகச்சாகலாதி கிருதம், விதார்யாதி கிருதம், அஸ்வகந்தாதி லேகியம், சியவனப்பிராசம் லேகியம், கூஷ்மாண்ட ரசாயனம், ப்ராம் ரசாயனம், குமார்யாஸவம், மிருத சஞ்ஜீவனீ போன்ற தரமான ஆயுர்வேத மருந்துகளை ஓர் ஆயுர்வேத மருத்துவரின் அறிவுரைப்படி சாப்பிட்டு வந்தால், உடல் உபாதைகள் அனைத்தும் குணமாகிவிடும். ஆனால் இதில் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். இம்மருந்துகளின் சுவையில் மயங்கித் தொடர்ந்து சாப்பிடாமல், உபாதைகள் குணமானதும் நிறுத்திவிடுவது மிகவும் நல்லது.

## வெந்நீர் மகிமை

⊖ வெந்நீர் இரத்தத்தில் உள்ள நஞ்சை வெளிப்படுத்துகிறது.

⊖ அடிக்கடி வெந்நீர் சாப்பிடுவதை பழக்கமாகக் கொண்டவர்களுக்குத் தலைவலியே வருவதில்லை.

⊖ குழந்தைகளுக்கு வரும் வயிற்று வலியும் வெந்நீர் கொடுப்பதனால் குணமாகும்.

⊖ வயிற்றுப் புண்ணினால் வரும் வயிற்று வலியாக இருந்தால் இளஞ்சூடான வெந்நீரைக் கொஞ்சம் கொஞ்சமாக உறிஞ்சிக் குடித்தால் வலி குறையும்.


⊖ சூடாக உள்ள நீரில் குளிர்ந்த நீரைக் கலந்து குடிப்பது சரியல்ல. வெந்நீரை ஆற்றிக் குடித்தால்தான் உரிய பலன் கிடைக்கும்.

⊖ பித்த வெடிப்பு உள்ளவர்கள் வெந்நீரில் கால் பாதங்களை வைத்து எடுத்த பிறகு, 'பியூமிக் ஸ்டோன்' கொண்டு தேய்த்தால் நாளடைவில் பித்த வெடிப்புகள் குணமாகும்.

⊖ கால் பொறுக்கும் அளவுக்கு வெந்நீரை ஒரு வாளியில் ஊற்றி அதில் சிறிது கல் உப்பைப் போட்டு, அதில் காலை 15 நிமிடங்கள் வைத்து எடுத்தால் கால் வலி குறையும்.

⊖ சாப்பிடுவதற்கு அரை மணி நேரம் முன்பு ஒரு டம்ளர் வெந்நீர் குடித்தால் உடல் எடை குறையும்.

# வெளியாகும் கலைப்படைப்புக்கள் கலாசாரத்தை பிரதிபலிக்க வேண்டும்



(யாழ்ப்பாணம்)

எமது கலாசார விழுமியங்களைப் பாதுகாக்கும் வகையிலான கலைப்படைப்புக்கள் எமது பகுதிகளிலிருந்து வெளிவரவேண்டும் என ஈ.பி.டி.பி.யின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் தவநாதன் தெரிவித்துள்ளார். கடந்த சனிக்கிழமை முழங்காவிலில் 'உருகும் நிலவு' குறும்படத்தின் வெளியீட்டுவிழாவில் முதற்பிரதியினைப் பெற்றுக் கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில், மக்களின் வாழ் நிலைகளில் ஏற்படும் பண்பாடு கலாசாரம் போன்ற விடயங்களின் மாற்றங்களுக்கு இலத்திரனியல் ஊடகங்கள் பெரும் செல்வாக்கு செலுத்துகின்றன.


இன்று எமது சமூகம் பொருத்தமற்ற கலாசாரத்தின் பின்னனியில் பயணித்துக் கொண்டிருக்கின்றது. இதற்கு தென்னிந்திய சினிமாக்களும் மற்றும் தென்னிந்திய தொலைக்காட்சிப்படைப்புக்களுமே பெருமளவில் வழிகாட்டியாக அமைகின்றன.

எனவே இவற்றை முறியடித்து எமது சமூகத்திற்கேற்ற கலாசாரங்களைப் பிரதிபலிக்கின்ற படைப்புக்கள் வெளியிடப்படவேண்டும். அதற்கான வளம் எமது பகுதிகளில் இல்லாதபோதும் நாட்டில் செய்யப்பட்டுவரும் தமிழ் இலத்திரனியல் ஊடகங்கள் ஏனும் அப்பணியை செய்ய. முன்வரவேண்டும். இதனிடையே இன்று வெளியிடப்பட்ட படைப்புப் போன்று கிராம மட்டங்களிலிருந்து வெளிவரும் இவ்வாறான சமூக சீர்படுத்தல் கருத்துக்கள் உள்ளடங்கிய படைப்புக்களை நாம் வரவேற்கின்றோம் இவ்வாறான படைப்பாளிகளை ஊக்குவிக்கவும் நாம் தயாராக உள்ளோம் அத்தோடு தொடர்ந்தும் இவ்வாறான படைப்புக்கள் வெளிக் கொண்டுவரப்பட்டு, திசைமாறிப் பயணிக்கமுயலும் எமது சமூகத்தை சீர்ப்படுத்த வேண்டும் என அவர் மேலும் குறிப்பிட்டார்.

கிளிநொச்சி முழங்காவில் அன்பு ஐக்கிய கலாமன்றத்தினால் 'உருகும்நிலவு' எனும் குறும்படம் வெளியிடப்பட்டது. எஸ்.யசிந்தனின் தயாரிப்பில் உருவான இக்குறும்படம் கிராமிய கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளதுடன், கலாசார பிறழ்வுக்குள்ளா கிவரும் எமது இளம் தலைமுறையினரை பாதுகாக்கும் வகையிலான கருத்துக்கள் உள்ளடங்கியதாகவும் அமைந்துள்ளது.

அன்பு குடியிருப்பு மைதானத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் அப்பகுதி கிராமசேவையாளர் நாகலிங்கம் ஆசிரியர் குகேந்திரன், ஈ.பி.டி.பி.யின் பூநகரிபிரதேச இணைப்பாளர் நிர்மல றொபின்சன், மற்றும் பிரதேச முக்கிய பிரமுகர்கள், கிராம மட்ட அமைப்புக்கின் தலைவர்கள் மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

## பரமர் சங்கமம்



'கானமயிலாடக் கண்டிருந்த வான் கோழி தன்பொள்ளாச் சிறகடித்து ஆடியதாம' இதற்கு உதார்ரணமாகக் கனக்கப் பார்க்கலாம்.

அதில ஒன்றுதான் யாழ்.எவ்.எம். வானொலிச் சேவை இண்டைக்கு மூலைக்கு மூலை எவ்.எம்.சேவைகள் முழங்கிக் கொண்டிருக்கின்றன. அதனிடையே இந்த யாழ்.எவ்.எம்.மும் தள்ளாடித் தள்ளாடி நடைபோட்டுக் கொண்டிருக்கிறது.

இது ஒரு குழந்தைச் சேவையல்ல. அன்னை வானொலி என வர்ணிக்கப்புடும் இலங்கை வானொலியின் இளந்தாரிப் பிள்ளை. முன்னதாக பலாலியைத் தளமாகக் கொண்டு இயங்கி வந்தது.

இப்பொழுது யாழ்.நகரப்பகுதியொன்றில் இயங்கி வ்ருகிறது. இலங்கை வானொலியின் தத்துப்பிள்ளை என்பதால் பழைய பழைய பொக்கிஷங்களான சினிமாப் பாடல்கள் தொட்டு நீண்ட நெடுங்காலத்து வானொலி நாடகங்களும் ஒலிபரப்பாகின்றன.

பழைய பாடல்கள் ஒலிபரப்பு தற்சமயம் ஒவ்வொரு நாட்களும் அரைமணி நேரம் இரவுகளில் ஒலிபரப்பாவதைக் கேட்க முடிகிறது. இந்நேரங்களில் நடைபெற்று வந்த 'தமிழ்த்தூது', 'கல்வி' நிகழ்ச்சிகளை சில வாரங்களாகக் கேட்க முடியவில்லை.

'தமிழ்த்தூது நகழ்ச்சியை தொகுத்தளித்த தமிழ்தேசிகன் அரைமணிநேர நிகழ்ச்சியில் 'அந்த வகையில' என்ற சொல்லை அடிக்கடி பாவித்து வந்தால் தரமான அந்நிகழ்ச்சியும் சோடைபோக ஏது வாயிற்று.

மோகனாசிரியர் நடத்திய கல்வி நிகழ்ச்சியும் செய்யுள்களுக்கான விளக்கமுமாக அமைந்தது. நிகழ்ச்சி தரமானது ஆயினும் ஜனரஞ்சகப் படவில்லை. பழைய பாடல்கள் ஒலிபரப்புச் செய்கையில் அறிவிப்பாளராகச் செயற்பட்டவர் குறிப்பாக யசோதரா பாலசிங்கம் விதிக்கு மிஞ்சியே உரையை நீட்டிச் செல்கிறார்.

ஒலிபரப்புக் கருவி முன்பாக இருக்கையில் எப்படிச் செயற்பட வேண்டுமென ஒலிபரப்புக் கலை சம்பந்தமான பயிற்சி நெறிகள் பெறாதவர்களாகவே ஒலிபரப்பாளர்கள் ஈடுபட்டு வருவதை யாழ்.எவ்.எம்.மில் அபரிமிதமாக அனுபவிக்க முடிகிறது.

இதே பழைய பாடல்கள் நிகழ்ச்சியை கிழமைநாட்களில் மாலை 6.30 மணி தொடக்கம் இரவு 7 மணிவரை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் 'தென்றல்' எவ்.எம்.ஒலிபரப்பி வந்தது. இப்பவும் தொடர்கிறதோ தெரியவில்லை.

தென்றல் எப்.எம்., யாழ்.எவ்.எம். இரவு 8 மணிக்கு முடிவடையவே அதே அலைவரிசையில் வடபகுதியில் கேட்கக் கூடியதாக உள்ளது. அந்நிகழச்சியைத் தொகுத்தளிக்கும் ஜெயகிருஷ்ணா அல்லது புவனனோஜனி ஆகியோர் பாடல் உருவான சுவாரஸ்யமான தகவல்களையும் சேர்ந்து வந்தால் நிகழ்ச்சி ஒருபடி உயாவாக அமைந்தது.

பழைய பாடல்களுக்கு இவர்கள் சொல்கின்ற வார்த்தைகளைச் சகிக்கவே முடிவதில்லை. நிகழ்ச்சிகளுக்கு உரிய எழுத்துப் பிரதிகள் இன்றிச் செயற்படுவதே இதற்கான முக்கிய காரணமாக உணர முடிகிறது.

நிகழ்ச்சி மேலதிகாரிகள் இல்லாவிட்டால் இப்படித்தான் 'கானமயிலாடக் கண்டிருக்கும் வான் கோழி' ஆட்டம் போட வேண்டியது தானே இல்லையே பின்னை...

## மின்சார சபை சேவை குறைக்க உள்ளக மறுசீரமைப்பு

(கொழும்பு)

மின்சார சபையை மறு சீரமைக்க வேண்டியுள்ளதாக பிரதி நிதி அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்துள்ளார். புதுடில்லியிலும், பாங்கொக்கிலும் நடைப்பெற்ற இரண்டு மாநாடுகளில் கலந்து கொண்டதன் பின்னர் நேற்று முன்தினம் நாடுதிரும்பியபோதே பிரதி அமைச்சர் இந்தக் கருத்துக்களை வெளியிட்டார்.

'இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு இன்னும் எட்டு பில்லியன் ரூபாவை தேடிக் கொள்ள நேரிடும் என நினைக்கின்றேன், மின்சார சபையின் உள்ளக வியூகத்தை, மறுசீரமைப்பு நடவடிக்கையூடாக அவர்களது செலவுகளை குறைத்து அந்த எட்டு பில்லியன் ரூபாவை திரட்ட வேண்டும் என நினைக்கின்றேன்' என அவர் குறிப்பிட்டார்.

## உச்ச விலையில் முருங்கைக்காய்

மரக்கறிச் சந்தைகளில் ஏனைய மரக்கறிகளை விட உச்சவிலையில் முருங்கைக்காய் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

தற்பொழுது முருங்கைக்காய் சீசன் ஆரம்பித்துள்ள நிலையில் இதற்கான கேள்வி அதிகரித்துள்ளது. இதனால் ஏனைய மரக்கறிகளை விட நான்கு மடங்கு விலையில் முருங்கைக்காய் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

இதில் நாட்டு முருங்கைக்காய்க்கு கேள்வி மிகவும் அதிகரித்துள்ளது. கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் உட்பட ஏனைய சந்தைகளிலும் இதன் விலை அதிகரித்துள்ளது. தற்போதைய சீரற்ற காலநிலையால் இதன் விலைகள் மேலும் அதிகரிக்கவாய்ப்புள்ளது.

## இலங்கைப் பெண்ணிற்கு சிறைத்தண்டனை

சிங்கப்பூரில் பணியாற்றிய இலங்கைத் தமிழ்ப் பெண் ஒருவருக்கு, அந்த நாட்டு நீதிமன்றத்தினால் 10 வருட கால சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 2009ஆம் ஆண்டு தமது கணவரான இந்தியர் ஒருவரை கொலை செய்த குற்றத்திற்காகவே இவருக்கு இந்தத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. குறித்த பெண் தாம் பணிப்புரிந்த வீட்டின் உரிமையாளரது காசோலையை களவாடித் தரும்படி, கணவரால் வற்புறுத்தப்பட்டுள்ளார். அதுவும், தமது பெற்றோர் பார்த்த இந்தியப் பெண்ணை மறுமணம் செய்யவேஇவ்வாறு இவர் வற்புறுத்தியுள்ளார். இந்த நிலையிலேயே, குறித்த் இலங்கைப் பெண்ணால் இவரது இந்தியக் கணவர் தாக்கிக் கொலை செய்யப்பட்டுள்ளார். குறித்த இலங்கைப் பெண் இரண்டு பிள்ளைகளின் தாயார் என தெரிவிக்கப்படுகிறது.

## முரசின் இன்றைய பலன்

(08.05.2013 – புதன்கிழமை)

விஜய வருஷம் சித்திரை மாதம் 25 ஆம் திகதி.
நட்சத்திரம் அச்சுவினி முழுவதும். திதி சதுர்த்தசி.
பின்னிரவு 05.06 வரை. இராகுகாலம் 11.55 - 01.25 வரை.
சுபநேரம் 04.25 - 05.55 வரை. மரணயோகம்.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம்  | மனதில் உற்சாகம், செயலில் உத்வேகம். பலரும், உங்கள் உழைப்பைப் பாராட்டுவர். தொழிலில் திட்டமிட்ட இலக்கு நிறைவேறும். பணவரவு திருப்திகரமாகும். இல்லறத்துணை விரும்பியது வாங்கித் தருவீர்கள். குடும்பத்தினருடன் உல்லாசம். |
| ரிஷபம்  | வெகுநாள் திட்டமிட்ட வேலையை நிறைவேற்றுவீர்கள். பேச்சில் பிறர் நலமும், வசீகரமும் மிகுந்திருக்கும். தொழில், வளர்ச்சி பெற தேவையான உதவி கிடைக்கும். பணவரவு திருப்திகரமாகும். இல்லறத்துணை விரும்பியது வாங்கித் தருவீர்கள். |
| மிதுனம்  | சிலர் பகை வளர்க்க வருவர். விலகுதல் நலம். குடும்ப விஷயம் பிறரிடம் பேச வேண்டாம். தொழில், நேரம் தவறாமை நன்மை தரும். சிக்கனம் சிரமம் தவிர்க்கும். பயணத்திட்டத்தில் மாறுதல். குடும்பத்தினர் பாசம் ஆறுதல் தரும். |
| கடகம்  | சம்பந்தமில்லாத வேலைகளில் ஈடுபட வேண்டாம். பிறரிடம் வீண்பேச்சு வேண்டாம். மறதி சிரமப்படுத்தும். தொழில், போட்டி கூடும். அளவான பணவரவு. உடல் நலம் பாதுகாக்க ஒய்வு அவசியம். வெளியூரிலிருந்து நல்ல செய்தி வரும். |
| சிம்மம்  | உங்களைப் புகழ்ந்து சுயலாபம் பெற சிலர் முயற்சிப்பர். முன்யோசனையுடன் நடந்து கொள்வது நல்லது. தொழில், தாமத கதியில் இயங்கும். வரவை விட செலவு கூடும். வாகன பயணத்தில் கவனம். அச்சம் நீங்க இறையருளில் நம்பிக்கை. |
| கன்னி  | கஷ்டங்கள் தீர்ந்து, நிம்மதி உணர்வு வரும். பொது நல சேவையில் ஆர்வம். தொழில், செழிக்க அனுகூலம் வரும். உபரி பணவரவு. கடனில் கொஞ்சம் தீர்ப்பீர்கள். சண்டையிட்ட உறவுகள் சமாதானமாகுவர். இனிய கனவுடன் நித்திரை. |
| துலாம்  | செயலில் ஆரவாரத்தன்மை இருக்கும். குடும்பத்தின் எதிர்பார்ப்பு நிறைவேற தாமதமாகலாம். தொழில், அனுகூல விஷயங்களை, பிறரிடம் சொல்ல வேண்டாம். வரவை விட செலவு கூடும். ஒரு வெற்றிக்கு ஒன்பது முயற்சி செய்வீர்கள். |
| விருச்சிகம்  | அணுகுமுறையை மாற்றி, நன்மை பெறுவீர்கள். உறவினர் அன்பு பாராட்டுவர். தொழில், திட்டமிட்ட இலக்கு நிறைவேறும். பணவரவு திருப்திகரம். வெகுநாள் காணாமல் தேடிய பொருள் கிடைக்கும். கடந்தகால குடும்பச் சச்சரவு நீங்கும். |
| தனுசு  | மனச்சாட்சிக்கு, அதிக முக்கியத்துவம் தருவீர்கள். நண்பரின் கஷ்டம் போக்க உதவுவீர்கள். தொழில், திருப்திகரமான முன்னேற்றம் பெறும். கொடுக்கல் வாங்கல் சீராகும். சொத்து வாங்க அனுகூலம் உண்டு. பெற்றோர் ஆசியால் நிறைவு. |
| மகரம்  | உங்கள் நலம் விரும்புவரை சந்திப்பீர்கள். இனியவை பேசி மகிழ்வீர்கள். தொழில், அதிக நேர்மை பின்பற்றுவீர்கள். பணவரவு திருப்திகரம். நண்பர் வெகுநாளாய் கேட்ட உதவி செய்வீர்கள். புத்திரரிடமிருந்து மகிழ்விக்கும் செய்தி. வழிபாடு. |
| கும்பம்  | பொது விவகாரங்களில் கருத்து சொல்ல வேண்டாம். போட்டியை எதிர்கொள்வீர்கள். தொழில், இலக்கை அடைய காலம் தேவைப்படும். உறவினர் வகையில், பணச் செலவு. உடல்நலத்திற்கு உணவில் கவனம். நட்பால் ஆறுதல். |
| மீனம்  | பரிகாசம் செய்வோரிடம் தர்க்கம் வேண்டாம். சொந்த வேலையைக் கவனிப்பது நல்லது. தொழில் சராசரியாக இருக்கும். முக்கிய செலவுக்கு கடன் பெற நேரும். அவசரப்பட்டு செய்த காரியத்துக்காக வருந்த நேரிடலாம். இறை தொண்டு. |

தரம் - 3 மாணவர்களுக்கான பயிற்சிப் பரீட்சை

# கல்வி முரசு



வ.சிவநேசன் BA. Dip.in edu. S.L.P.S 2 -II

01) பின்வரும் பொருட்களை உரியவாறு வகைப்படுத்துக.

வெண்கட்டி, பேனா, சீப்பு, கடதாசி, வாளி, கத்தி, பற்தூரிகை, கண்ணாடி, கோப்பி, கரும்பலகை

| வகுப்பறையில் பயன்படுத்துபவை | வீட்டில் பயன்படுத்துபவை |
|---|---|
| | |

02) விடை எழுதுங்கள்

1) இரும்பினால் செய்யப்பட்ட பொருட்கள் 4 எழுதுக?
..............................................................................

2) பிளாஸ்ரிக்கினால் செய்யப்பட்ட பொருட்கள் 4 எழுதுக?
..............................................................................

3) சுய சுகாதாரம் பேணப்படும் பொருட்கள் 2 எழுதுக?
..............................................................................

4) அன்றாடம் கழுவி உலர்த்திப் பயன்படுத்த வேண்டிய பொருட்கள் 4 எழுதுக?
..............................................................................

5) நீரினைப் பெறும் இடங்கள் 3 தருக..
..............................................................................

6) பயன்படுத்தும்போது வெட்டுக்காயத்தை ஏற்படுத்தும் பொருட்கள் 4 எழுதுக.
..............................................................................

7) உணவின் முக்கியத்துவம் 2 எழுதுக.
..............................................................................


8) இறைச்சிக்காக வளர்க்கப்படும் பிராணிகள் 2 எழுதுக.
..............................................................................

04) Write Tamil meanings following the words

1) fins ..............................
2) milk ..............................
3) fruit ..............................
4) grass ..............................
5) meat ..............................
6) worms ..............................
7) parrot ..............................
8) sun ..............................
9) school ..............................
10) name ..............................


05) Read and underline the correct picture

1)  Kite

2)  Book

3)  Crow

4)  Tiger

5)  duck

07) Fill and draw your pet

I have a
..............................

08) Underline the odd one

| | | | | |
|---|---|---|---|---|
| 1) | dog | cat | lion | fish |
| 2) | milk | fruit | swim | cake |
| 3) | purple | cow | black | red |
| 4) | mouth | nose | eight | hand |



விசேட வினாத்தாள் தரம் 03- 2013 கல்விமுரசு




9) உணவு உண்ணும்போது அனுசரிக்க வேண்டிய பழக்கங்கள் 2 எழுதுக.

..................................................................................................................

10) பச்சையாக உண்ணக்கூடிய உணவுப் பொருட்கள் 2 எழுதுக.

..................................................................................................................

03) பின்வரும் படங்களின் பெயர்களை எழுதுக.

1)  2)  3)  4) 

.................... .................... .................... ....................

04) பின்வரும் சிங்களச் சொற்களுக்குரிய தமிழ்க் கருத்தை எழுதுக.

| | | | |
|---|---|---|---|
| மல்லிகைப்பூ | சாப்பிடுங்கள் | வெள்ளை நிறம் | ஆடு |

1) சுதுபா (ட்) ட ......................  2) பிச்சமல் ......................

3) எலுவா ......................  4) கன்ன ......................

05) பின்வரும் கூற்றுக்களை வாசித்து சரி (√) பிழை (x) இடுக.

1) உணவு உண்ண முன் கை கழுவத்தேவையில்லை. ( )

2) உணவு உண்ணும் போது தேவையற்றுக் கதைக்கக்கூடாது ( )

3) தாவரங்கள் நிழலைத் தருவதில்லை. ( )

4) கிழங்கு வகைகளுள் ஒன்று பூசணி ஆகும். ( )

5) புளியம் இலை இரவில் சுருங்கிக் காணப்படும். ( )



06) பின்வரும் பிராணிகளால் ஏற்படும் ஆபத்துக்களை / சேதங்களை எழுதுக.

| பிராணி | ஆபத்து |
|---|---|
| 1) எலி | |
| 2) கறையான் | |
| 3) நுளம்பு | |
| 4) பாம்பு | |




07) சரியான ஆங்கில எழுத்துக்களைக் குறிக்க.

| | | |
|---|---|---|
| 1) | தினமும் பயன்படுத்துவோம் | |
| 2) | கம்பளித் தையல் | |
| 3) | புரதம் | |
| 4) | விற்றமின்கள் உயிர்ச்சத்து | |
| 5) | சக்தி விரயமாதல் | |

A) 
B) 
C) 
D) 
E) 

01) **Read and match.**




1) e a b k — horns 

2) o r h s n — beak 

3) n s i f — trunk 

4) u k t n r — fins 

02) **Trace and colour.**



03) Write "yes" or "no"

1) Fish can fly. ( )
2) Dog can bark ( )
3) Tiger can hop ( )
4) Rabbit can swim ( )
5) Parrot can fly. ( )

## கால்பந்து நடுவர் குத்திக்கொலை



கால்பந்து வீரர் தாக்கியதால் நடுவர் மரணமடைந்த சம்பவம் ஒன்று அமெரிக்காவில் இடம் பெற்றுள்ளது. அமெரிக்காவின் உட்டா மாநிலம், சால்ட் லேக் நகரில் கடந்த மாதம் 27ஆம் திகதி கால்பந்து போட்டிகள் நடைபெற்றன. இப்போட்டியின் நடுவராக ரிச்சர்டோ போர்ட்டிலா (வயது -46) பணியாற்றினார்.

அதில் ஒரு லீக் ஆட்டத்தில்,ஐசனோவர் ஜூனியர் உயர்நிலைப்பள்ளி அணியின் கோல்கீப்பராகப் பணியாற்றிய 17 வயது வீரர், போட்டி விதியை மீறினார். இதனால் அவருக்கு நடுவர் போர்ட்டிலா, மஞ்சள் அட்டை காட்டி எச்சரித்தார். இதனால் ஆத்திரமடைந்த அந்த வீரர், நடுவர் போர்ட்டிலாவுடன் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். வாக்குவாதம் முற்றிய நிலையில் அந்த வீரர், நடுவரின் தலையிலும், முகத்திலும் சரமாரியாக குத்தியுள்ளார்.

அந்த சமயத்திலும் தனது கடமையை செய்த நடுவர் போர்ட்டிலோ, தன்னைத் தாக்கிய வீரருக்கு அபராதம் விதிப்பதாகக் கூறினார். ஆனால் சிறிது நேரத்தில் மயக்கம் வருவதாக கூறிய அவர், திடீரென ரத்த வாந்தி எடுத்து தரையில் உட்கார்ந்தார்.பின்னர் உடனடியாக அம்புலன்ஸை வரவழைக்கும்படி அவர் கூறிவிட்டு மயங்கி விழுந்துவிட்டார். நடந்த சம்பவத்தைப் பார்த்த இரசிகர்கள் அதிர்ச்சியடைந்தனர்.தாக்கிய வீரர் தப்பி ஓடி விட்டார். இந்தத்தாக்குதலில் காயமடைந்த போர்ட்டிலா, மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது. ஆனால் உடல்நிலை மோசமடைந்து கோமா நிலைக்குச் சென்ற அவர், நினைவு திரும்பாமலேயே இறந்துவிட்டார்.

இதுதொடர்பாக பொலிஸார் வழக்குப்பதிவு செய்து தப்பி ஓடிய சிறுவனைத் தேடி வருகின்றனர். அவனைப் பிடித்து பொலிஸில் ஒப்படைப்பதாக அவனது பெற்றோர் உறுதி அளித்துள்ளனர். கால்பந்து போட்டியில் நடுவராகப் பணியாற்ற வேண்டாம், வீரர்களின் கோபத்திற்கு ஆளாள நேரிடும் என்றும் போர்ட்டிலாவிடம் அவரது மகள்கள் கேட்டுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## மத உணர்வைப் புண்படுத்தி விளம்பரம்
## டோனி மீது அவதூறு வழக்கு




(பெங்களூர்)

மத உணர்வுகளைப் புண்படுத்தும் வகையில் விளம்பரப்படத்துக்குக் காட்சி கொடுத்ததாக,இந்திய அணிக் கப்டன் மகேந்திர சிங் டோனி மீது பெங் களூர் நீதிமன்றத்தில் வழக்குப் போடப்பட்டுள்ளது. பெங்களூரைச் சேர்ந்த சமூகஆர்வலர் ஜெயகுமார் ஹிரேமத் என்பவர் தாக்கல் செய்துள்ள மனுவில், வணிக இதழ் ஒன்றில் வெளியாகி உள்ள விளம்பரத்தில் இந்திய அணி கேப்டன் டோனி,

மகாவிஷ்ணு போன்று வேடமணிந்து கைகளில் பல்வேறு பொருட்களை வைத்திருக்கும் படம் இடம் பெற்றுள்ளது. இது இந்துக் கடவுளை அவமதிக்கும் வகையிலும், இந்துக்களின் மத உணர்வுகளைப் புண்படுத்தும் வகையிலும் அமைந்துள்ளதால் அவர் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரியுள்ளார். இந்த மனு மீதான விசாரணை வரும் 12ஆம் திகதி நடைபெற உள்ளது.

## வீனஸ் விலகல்



(மட்ரிட்)

மட்ரிட் ஓப்பன் ரென்னிஸ் போட்டி ஸ்பெயினில் நேற்று முன்தினம் தொடங்கியது. இதன் பெண்கள் ஒற்றையர் பிரிவில் முதல் சுற்று ஆட்டத்தில் உலகின் முன்னாள் முதல்நிலை வீராங்கனையான வீனஸ் வில்லியம்ஸ் (அமெரிக்கா), வைல்ட் கார்ட் வீராங்கனை அனபெல் மெடினாவை (ஸ்பெயின்) எதிர்த்து விளையாட இருந்தார். இந்த நிலையில் முதுகுவலியால் பாதிக்கப்பட்ட 32 வயதான வீனஸ் வில்லியம்ஸ் கடைசி நேரத்தில் இந்தப் போட்டியிலிருந்து விலகியுள்ளார். வீனஸ் வில்லியம்ஸுக்கு பதிலாக 56ஆம் நிலை வீராங்கனை ஸ்டெபானிக்கு (ஸ்பெயின்) வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

## அபராதம்

பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் சகல துறை ஆட்ட வீரர் ஷக்கிப் அல் ஹசனுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

நடுவரின் தீர்ப்புத்தொடர்பில் அதிருப்தி வெளியிட்டுள்ளதுடன் மோசமாக நடந்து கொண்டதாகத் தெரிவித்து போட்டிக் கட்டணத்தில் 75 வீதத்தை அபராதமாக செலுத்துமாறு அவருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

சிம்பாப்பே அணிக்கு எதிரான இரண்டாவது சர்வதேச ஒரு நாள் கிரிக்கெட் போட்டியின்போது ஷக்கிப்அல் ஹஸன் இவ்வாறு நடந்துகொண்டுள்ளார்.

எனினும் இது குறித்து வருத்தம் வெளியிட்டுள்ள ஷக்கிப் அல் ஹஸன், குற்றச்சாட்டுக்களை ஏற்றுக்கொண்டுள்ளார்.

## இந்தியாவில் பிபா உலகக் கிண்ணம்

17 வயதுக்குட்பட்டோருக்கான உலகக் கிண்ணக் கால்பந்துப் போட்டியை இந்தியாவில் நடத்த சர்வதேச கால்பந்து அமைப்பின் (பிபா) துணைத் தலைவர் அல் ஹுஸன் ஆதரவு தெரிவித்துள்ளார்.

டில்லியில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்ட அல் ஹுஸன் இவ்வாறு தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

2017ஆம் ஆண்டு நடைபெறவுள்ள 17 வயதுக்குட்பட்டோருக்கான உலகக் கிண்ணக் கால்பந்துப் போட்டியை இந்தியாவில் நடத்த ஆதரவு தெரிவிக்கிறேன்.

ஆசிய கண்டத்தில் இந்தியா முக்கியமான நாடு. இங்கு, விளையாட்டுத்துறை நன்கு வளர்ச்சி அடைந்து வருகிறது. ஆசியாவில் நடைபெறும் பெரிய கால்பந்துப்போட்டியான ஏ.எப்.சி. சம்பியன்ஸ் லீக் போட்டியில் இந்தியாவுக்கு உரிய பிரதிநிதித்துவம் அளிக்கவேண்டும்என்று தெரிவித்தார்.

முறைப்படியான அறிவிப்பை விரைவில் பிபா வெளியிடும் என இந்திய கால்பந்து சம்மேளம் தெரிவித்துள்ளது.

## டோனியிடம் கற்று வருகிறேன்



(சென்னை)

டோனியிடம் நான் களத்திலும், வெளியிலும் நிறையக் கற்று வருகிறேன். நாங்கள் கிரிக்கெட்டைப் பற்றி நீண்ட நேரம் பேசுவோம். ஒவ்வொரு நிமிடத்தையும் மகிழ்ச்சியுடன் கழிக்கிறேன். மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு கப்டனாக நியமிக்கப்பட்ட உணர்வு சிறப்பானதாக இருக்கிறது. நிறைய திறமையான வீரர்களுக்கு தலைமை தாங்குவது என்பது சவாலான விடயம் என மேற்கிந்தியத்தீவுகள் அணியின் புதிய கப்டன் பிராவோ தெரிவித்துள்ளார்.

அணியில் ரவி ராம்போல், போலாட், சுனில் நரைன் ஆகியோர் இருப்பது பலமாக உள்ளது. திறமையான வீரர்களுடன் விளையாட வாய்ப்பு உருவாகியுள்ளது. என்னுடைய நோக்கம் சிறப்பாக விளையாடி உலகின் பார்வையை எமது அணி மீது திருப்ப வேண்டும் என்பதே.

சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட்டில் நாங்கள் கடினமான பிரிவில் உள்ளோம். இந்தியா, பாகிஸ்தான், தென்னாபிரிக்கா அணிகளுடன் மோத வேண்டியுள்ளோம். வெற்றி என்பது எளிதானது கிடையாது. சம்பியன்ஸ் கிண்ணக் கிரிக்கெட்டில் சிறப்பாக விளையாட முயற்சிப்போம். இப்போதும் எப்போதும் எனக்குப் பிடித்த வீரர் பிரையன் லாரா. அவர் தவிர ஜக் கலிஸையும், என்னையும், சக வீரர் போலாட்டையும் பிடிக்கும். போலாட்டுடன் விளையாடுவது பெருமை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.




## ரஹானே, ராவிட் அதிரடி; ராஜஸ்தான் இலகு வெற்றி



(ஜெய்ப்பூர்)

ராகுல் ராவிட், ரஹானே ஆகியோரின் அதிரடித்துடுப்பாட்டத்தின் மூலம் டில்லி டேர்டெவில்ஸ் அணிக்கெதிரான போட்டியில் ராஜஸ்தான் றேயல்ஸ் அணி இலகுவாக வெற்றிபெற்றது.

ஆறாவது ஐ.பி.எல். ருவென்ரி-20 கிரிக்கெட் தொடரின் 52ஆவது லீக் ஆட்டம் நேற்று ஜெய்ப்பூரில் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற டில்லி டேர்டெவில்ஸ் அணி முதலில் துடுப்பாடத் தீர்மானித்தது. இதற்கமைய சேவாக், மஹேல ஜோடி களமிறங்கியது. முதலிரு ஓவர்களில் அசத்திய இந்த ஜோடி வழமை போன்று மீண்டும் சொதப்பியது. 19 ஓட்டங்களைப் பெற்ற வேளை சேவாக் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தார். தொடர்ந்து 22, 47 ஓட்டங்களில் டில்லி அணியின் விக்கெட்டுக்கள் சாய்க்கப்பட்டது. இருப்பினும் ஒரு முனையில் கப்டன் மஹேல ஜெயவர்த்தன பொறுமையாக ஆடினார். இந்நிலையில் நான்காவது விக்கெட்டுக்காக இணைந்த பென் றொஹற்றீர் மஹேலவுடன் பொறுமையாக ஆடினார். இந்த 31 ஓட்டங்களைப் பெற்றவேளை இந்த ஜோடி (மஹேல) பிரிக்கப்பட்டது. டில்லி அணியின் சரிவை இனி யாராலும் நிறுத்த முடியாது என்ற நிலையில் களத்தில் தோன்றியது. இருப்பினும் ஐந்தாவது விக்கெட்டுக்காக பென் ஹொஹற்றீருடன் இணைந்த ஜக்கௌவ் அதிரடியாக ஆடி- அணியின் ஓட்ட வேகத்தை அதிகரித்தார். இந்த ஜோடியின் ஆட்டம் டில்லி அணி வலுவான அடித்தளத்தை அமைத்துக் கொள்ள துணைபுரிந்தது. இறுதி ஓவர் வரை அதிரடியில் கலக்கிய இந்த ஜோடி 76 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றது. இறுதியில் டில்லி டேர்டெவில்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து 154 ஓட்டங்களைப் பெற்றது. இதில் பென் றொஹற்றீர் 40 பந்துகளை எதிர்கொண்டு ஒன்பது பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக 63, ஜக்கௌவ் இரண்டு பவுண்டரிகள் அடங்கலாக 24 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றனர். கப்டன் மஹேல ஜெயவர்த்தன 34 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் வட்சன், பின்னி ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர்.

பதிலுக்கு 155 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய ராஜஸ்தான் றோயல்ஸ் அணி, ரஹானே, ராவிட் இணை ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களாக களமிறங்கிய அசத்தலான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. இந்த ஜோடியின் ஆட்டம் ராஜஸ்தான் வெற்றி வாய்ப்பை மிக இலகுபடுத்தியது. இந்த ஜோடி 108 ஓட்டங்களைப் பெற்ற வேளை பிரிக்கப்பட்டது. தொடர்ந்து ரஹானேயுடன் இணைந்த வட்சன் அதிரடியில் கலக்கி அணியின் வெற்றியை உறுதி செய்தார். இறுதியில் ராஜஸ்தான் றோயல்ஸ் அணி 17.5 ஓவர்கள் நிறைவில் ஒரு விக்கெட்டை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் ரஹானே 45 பந்துகளை எதிர்கொண்டு ஐந்து பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக 63, வட்சன் 14 பந்துகளை எதிர்கொண்டு மூன்று பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக 28 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றனர். மற்றும் ராவிட் 53 ஓட்டங்களைப் பெற்றார். போட்டியின் ஆட்டநாயகனாக ரஹானே தெரிவானார்.

# பிரசார பேரணியில் குண்டுவெடிப்பு; பாகிஸ்தானில் 20 பேர் பலி





பாகிஸ்தானில் தேர்தல் பிரசாரத்தில் குண்டுவெடித்ததில் 20 பேர் பரிதாபமாக இறந்தனர். மேலும், 70 பேர் வரை படுகாயம் அடைந்துள்ளனர். பாகிஸ்தானில் வரும் 11ம் தேதி நாடாளுமன்ற தேர்தல் நடக்கிறது. இதற்கான பிரசாரம் உச்சகட்ட நிலையில் உள்ளது.இந்நிலையில், ஜமியத் உலேமா இ இஸ்லாம் பாஜி கட்சியின் சார்பில் மத்திய குர்ரம் பகுதியில் பிரசார பேரணி நடந்தது. அங்குள்ள மதராசாவில் இருந்து பேரணி தொடங்கியது. அப்போது அங்கு திடீரென குண்டுவெடித்தது. இதில், அங்கிருந்த 20 பேர் உடல்சிதறி பலியாகினர். மேலும், 70க்கும் மேற்பட்டவர்கள் படுகாயம் அடைந்தனர்.

கட்சியின் தலைவரும், முன்னாள் எம்.பி.யுமான முனிர் கான் ஓரக்ஜாய் காயங்களுடன் உயிர்தப்பினார். பழங்குடியினர் அதிகம் வசிக்கும் குர்ரம் பகுதியில் நடந்த இந்த குண்டு வெடிப்பால் அங்கு பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளது. ஆனால், இதுவரையில் எந்த தீவிரவாத அமைப்பும் இந்த குண்டுவெடிப்புக்கு பொறுப்பு ஏற்கவில்லை.

# இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 45 சிரிய படையினர் பலி



இஸ்ரேல் தாக்குதல் நடத்தியதில், 45 சிரிய வீரர்கள் கொல்லப்பட்டனர். 150 பேர் படுகாயமடைந்தனர். சிரியாவில், தலைநகர் டமாஸ்கஸ் மற்றும் அதை சுற்றியுள்ள, மூன்று ஆயுத கிடங்குகள் மீது, இஸ்ரேல் நேற்று முன்தினம், திடீர் தாக்குதல் நடத்தியது. இந்த பயங்கர தாக்குதலில், 45 வீரர்கள் பலியாயினர் ஏராளமான வீரர்கள் படுகாயமடைந்தனர். ஹிஸ்புல்லா பயங்கரவாதிகளுக்கு வழங்கல் செய்வதற்காக, இந்த கிடங்குகளில் ஏவுகணைகள் வைக்கப்பட்டிருந்ததாகவும், இதை அழிப்பதற்காக தான் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும், இஸ்ரேல் விளக்கம் அளித்துள்ளது.இஸ்ரேலின் இந்த அதிரடி தாக்குதலுக்கு, ஈரான் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

## உலகச் செய்திகள்

# விமான விபத்து; விமானி பலி

ஸ்பெயின் நாட்டிலுள்ள மாட்ரிட் நகரில் கடந்த 1950ம் ஆண்டுகளைச் சேர்ந்த பழைய விமானம் ஒன்றின் சாகச நிகழ்ச்சி நட்த்தப்பட்டது.அப்பொழுது தீடிரென அந்த விமானம் வெடித்துச் சிதறியதில் அதன் விமானி பலியானார்.



© Bizipapo YouTube

ஆயிரக்கணக்கானோர் இதனை பார்த்துக்கொண்டிருந்த நிலையில், மின் கம்பியில் உரசிய விமானம் திடீரென தரையில் பாய்ந்து வெடித்தது.இந்த விபத்தைத் தொடர்ந்து பெரும் புகைமூட்டமும் உருவானது. படுகாயங்களுடன் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்ட 32 வயதான விமானி, சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்தார்.

# அமிலத் தன்மையாக மாறும் ஆர்ட்டிக் பெருங்கடல்




உலக முழுவதிலுமிருந்து தொழிற்சாலைகள் வெளியேற்றும் கார்பன் டை ஒக்சைட் வெளியேற்றத்தால் பூமி அதிகம் வெப்பம் அடைகிறது.இதன் மாசுக்கள் காற்றில் கலந்து வெப்பமடையச் செய்வதுடன் அமிலமாகவும் மாறுகிறது.


பூமியின் வட-தென் துருவங்களில் அதிகம் குளிர்ந்த காற்று இருப்பதால் இதில் காபன் டை ஒக்சைட் கலந்து கடலில் படிகிறது. இதில் ஆர்கட்டிக பெருங்கடல் பகுதி அதிக அமிலமாக மாறி வருகின்றது.

தொழிற் புரட்சி ஏற்படுவதற்கு முன்பு இருந்ததை காட்டிலும் இப்போது பெருங்கடலின் மேற்பரப்பு நீர் 30 சதவிகிதம் அமிலமயமாகியுள்ளது என்றும் சொல்லப்படுகிறது. இதனால் வர்த்தக ரீதியாக அதிகம் பயன்படும் மீன்கள் ஏற்றுமதி வெகுவக பாதிக்கப்படுவதுடன், மற்று கடல் உயிரினங்கள் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளன.

இது மீண்டும் பழைய நிலைமைக்கு திரும்புவதற்கு பல ஆயிரம் ஆண்டுகள் ஆகும்மேலும் கடல் சுற்றுச் சூழலில் என்ன பாதிப்பு நடக்கும் என்று சொல்ல முடியாத அளவிற்கு இதன் பாதிப்புகள் இருக்கும் என்று சொல்லப்படுகிறது.

# மலேசிய பிரதமராக மீண்டும் நஜீப் ரசாக்

தேர்தலில் வெற்றி பெற்றதைத் தொடர்ந்து மலேசிய பிரதமராக நஜீப் ரசாக் மீண்டும் நேற்று பொறுப்பு ஏற்றுக் கொண்டார். மலேசியாவில் கடந்த வாரம் நாடாளுமன்ற தேர்தல் நடந்தது. மொத்தமுள்ள 222 தொகுதிகளில், ஆளும் பேரிசன் தேசியக் கூட்டணி 133 இடங்களை பிடித்து பெரும்பான்மை பெற்றது. இக்கட்சி கடந்த 56 ஆண்டுகளாக மலேசியாவில் ஆட்சியில் உள்ளது குறிப்பிடத்தக்கது. இம்முறை, எதிர்க்கட்சி தலைவரான அன்வர் இப்ராகிம் (65) தலைமையில், மூன்று எதிர்க்கட்சிகள் ஒன்றாக சேர்ந்து தேர்தலைச் சந்தித்தன. தேர்தலில் எதிர்க்கட்சி கூட்டணிக்கு 88 இடங்கள் மட்டுமே கிடைத்தது.



தேர்தலில் பெரும்பான்மை பெற்றதை தொடர்ந்து பேரிசன் தேசியக் கூட்டணியின் சார்பில், நஜிப் ரசாக் இரண்டாவது முறையாக நேற்று முன்தினம் பிரதமர் பதவியை ஏற்றார். கோலாலம்பூரில் உள்ள நெகரா அரண்மனையில் நடந்த பதவியேற்பு விழாவில் மன்னர் துவான்கு அப்துல் ஹாலிம் முவாத் ஜாம் ஷா முன்னிலையில், நஜீப் ரசாக் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்டார்.

# மிகக் கொடுமையான பால்வினை ஆட்கொல்லி நோய் கண்டுபிடிப்பு



எயிட்ஸை விட வேகமாக பரவி மரணத்தை ஏற்படுத்தக்கூடிய பால்வினை நோய்ப் பயம் ஜப்பான் மக்களை ஆட்கொண்டுள்ளது.

ஜப்பானில் பாலியல் தொழில் செய்து வருகின்ற 31 வயது பெண்ணிடம் 2 ஆண்டுகளுக்கு முன்னர் நடத்தப்பட்ட சோதனையில் எச்ஓ41 எனப்படும் கொனோரியா நோய்க் கிருமியின் தாக்கம் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

நோய் எதிர்ப்பு சக்தி மருந்துகளுக்கு கட்டுப்படாமல், எயிட்ஸ் கிருமியை விட அதிபயங்கர வீரியத்துடன் நோயாளியை வீழ்த்தும் இந்த கிருமியை அழிக்கும் மருந்தைக்கண்டுபிடிக்க 5 கோடி டொலர்களை ஜப்பான் அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

எச்ஓ41 நோய்க் கிருமியின் பாதிப்புக்குள்ளானவர்கள் சிகிச்சை பலனின்றி ஒரு சில நாட்களிலேயே இறந்து விடுவார்கள்.

மேலும் இந்த நோய் எயிட்ஸைவிட அதிக வேகமாக பரவக்கூடியது என்பதால் ஜப்பான் சுகாதாரத்துறை அதிகாரிகள் கலக்கம் அடைந்துள்ளனர்.

# எரிமலை வெடிப்பு; 3பேர் பலி

பிலிப்பைன்ஸ் நாட்டில் பல எரிமலைகள் உள்ளன. இவற்றில் ஒன்றான மயோன் எரிமலை அலபய் மாகாணத்தில் உள்ளது.

தலைநகர் மணிலாவில் இருந்து 330 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள இந்த எரிமலை நேற்று திடீரென வெடித்து புகையையும் சாம்பலையும் வெளியேற்றியது. அப்போது 500 மீற்றர் உயரம் வரை அடர்த்தியான சாம்பல் வெளியேறியதாக நேரில் பார்த்தவர்கள் கூறினர்.

அந்த நேரத்தில் எரிமலையை சுற்றிப்பார்க்க சென்ற 3 சுற்றுலா பயணிகள் இறந்து விட்டதாகவும், மேலும் 4 பேர் படுகாயம் அடைந்து இருப்பதாகவும் உள்ளூர் அதிகாரிகள் தெரிவித்தனர்.

# மருதங்கேணி மருத்துவமனைக்கு மருத்துவர் நியமனம் எப்போது?

## அங்கு செல்ல மருத்துவர்கள் தயக்கம்

மருதங்கேணி, அம்பன், முள்ளியான் ஆகிய வைத்தியசாலைகளில் நிரந்தரமாக வைத்தியர் ஒருவரை நியமிக்க சுகாதார அமைச்சு விண்ணப்பங்களைக் கோரியிருந்தபோதும் அந்த வைத்தியசாலைகளுக்கு எந்த வைத்தியரும் கடமையாற்றுவதற்கு விண்ணப்பிக்கவில்லை என்று யாழ். பிராந்திய சுகாதார வேலைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக எ.ஆர். எம்.பி. ஒருவரே வைத்தியராக இந்த வைத்தியசாலையில் கடமையாற்றிவருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த வைத்தியசாலைகள் ஏற்கனவே யுத்த சூழ்நிலைகள் காரணமாக அழிவடைந்திருந்த நிலையில் மீளவும் புனரமைக்கப்பட்டு இயங்கிவருகின்றமை தெரிந்ததே.

இந்த நிலையில் இந்தப் பகுதி மக்களின் மருத்துவ தேவைகளை நிறைவு செய்வதற்கு நிரந்தர வைத்தியர் ஒருவரை நியமிக்குமாறு யாழ். பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி ஆ.கேதீஸ்வரன் சுகாதார அமைச்சரிடம் கோரிக்கை விட்டிருந்ததனை அடுத்து சுகாதார அமைச்சு இந்த வைத்தியசாலைகளுக்கு நிரந்தர வைத்தியரை நியமிக்க விண்ணப்பங்களைக் கோரியிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.(பா)

# தீயில் கருகி பெண் காயம்

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் ஐயனார் வீதியில் உள்ள கடை ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் எரிகாயங்களுக்கு இலக்காகிய பெண் ஒருவர் ஆபத்தான நிலையில் நேற்று யாழ் போதனா வைத்தியசாலையில் நேற்று அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நண்பகல் நடைபெற்ற இந்தச் தீச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த எஸ். நாகேஸ்வரி என்ற குடும்பப் பெண்ணே எரிகாயங்களுக்கு இலக்காகினார்.

கடையின் விறாக்கியில் இவருக்குத் தெரியாது இவரது கணவர் பெற்றோலை மறைத்து வைத்திருக்கின்றார். சம்பவ நேரம் குறித்த பெண் அங்கே மறைத்து வைக்கப்பட்டிருந்த பெற்றோலை எடுத்து தேங்காய் எண்ணை என நினைத்து படவிளக்கிற்கு முன் பாகத் திறந்தபோது அதுபற்றிக் கொண்டதன் காரணமாகவே அவர் எரிகாயங்களுக்குள்ளாகியதாகத் தெரியவருகின்றது.(பா)

# மலையாளபுரத்தில் காணிக்கச்சேரி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலர் பிரிவிலுள்ள மலையாளபுரம் கிராமத்தில் நேற்றைய தினம் காணிக்கச்சேரி நடமாடும் சேவை இடம்பெற்றுள்ளது. 2013, 01 இலக்க சுற்றுநிருபத்தின் படி மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களிலும் இடம்பெற்றுவரும் நடமாடும் காணி கச்சேரி நடவடிக்கைகள் மலையாளபுரத்தில் கரைச்சி பிரதேச செயலர் கோ. நாகேஸ்வரன் தலைமையில் நடைப்பெற்றது.

மீள் குடியேற்றத்தின் கிளிநொச்சி மாவட்டத்தில் மக்கள் எதிர்கொண்ட பிரச்சினைகளில் மிக அதிகளவான பிரச்சினையாக காணிப் பிரச்சினையே காணப்பட்டது இந்த நிலையில் மக்களின் காணிப் பிரச்சினைகளை ஆராய்ந்து தீர்க்கும் வகையில் அந்தந்த பிரதேசங்களிலேயே காணிக் கச்சேரிகள் நடாத்தப்படுகின்றன. இதன் மூலம் மக்களுடைய காணிப்பிணக்குகள் ஆராயப்பட்டு தீர்வுகள் காணப்பட்டு சட்டரீதியான ஆவணங்களுக்கு பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்த நடவடிக்கைகள் மூலம் நீண்ட காலமாக காணிப்பிணக்குகளுடன் வாழ்ந்து வந்த மக்களுக்கு தீர்வுகள் கிடைக்கப் பெற்று வருகின்றன.

மலையாளபுரத்தில் இடம் பெற்ற காணி கச்சேரி நிகழ்வில் கரைச்சி பிரதேச செயலர் கோ. நாகேஸ்வரன், கரைச்சி பிரதேச காணி அலுவலர் சிவகுமார்,வடமாகாண காணித்திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள், கிராம அலுவலர் மற்றும் பிரதேச செயலகத்தின் உத்தியோகத்தர்கள் எனப்பலர் கலந்துகொண்டனர்.(29)

# அம்புலன்ஸ் வண்டிகள் வடக்கு மருத்துவமனைகளுக்கு

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்திற்கென இம் மாதம் சுகாதார அமைச்சினால் 30 அம்புலன்ஸ் வண்டிகள் புதிதாகக் கொள்வனவு செய்யப்பட இருப்பதாக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இவற்றில் சுமார் ஏழு அம்புலன்ஸ் வண்டிகள் சுகாதார அமைச்சினால் யாழ். பிரதேச வைத்தியசாலைகளுக்கு வழங்க உத்தேசிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்த அவர் யாழ். பிரதேச வைத்தியசாலைகளில் அம்புலன்ஸ் வண்டி பற்றாக்குறை காணப்பட்டதனை அடுத்துச் சுகாதார அமைச்சிற்குத் தாம் தெரியப்படுத்த சுகாதார அமைச்சு இந்த நடவடிக்கையை எடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும் இவ்வாறு கொள்வனவு செய்யப்படும் அம்புலன்ஸ் வண்டிகள் வடக்கின் ஏனைய மாவட்ட வைத்தியசாலைகளுக்கும் பகிர்ந்தளிக்கப்படவுள்ளதாகவும் தெரியவரு கின்றது.

இதேவேளை அண்மையில் சுகாதார அமைச்சினால் யாழ். பிராந்திய சுகாதார வேலைகள் பணிமனைக்கு வழங்கப்பட்ட மூன்று அம்புலன்ஸ் வண்டிகள் பருத்தித்துறை, தெல்லிப்பழை, சாவகச்சேரி வைத்தியசாலைகளுக்கு வழங்கப்படவுள்ளதாகவும் ஆ.கேதீஸ்வரன் மேலும் தெரிவித்தார். (பா)

### குடாக்கடலில்...

நீதிமன்ற உத்தரவின் பேரில் நேற்று அழிக்கப்பட்டதாகத் தெரியவருகின்றது. இது குறித்த வழக்கு ஒன்று யாழ். நீதவான் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் தாக்கல் செய்யப்பட்டது. டைனமற் பயன்படுத்திப் பிடிக்கப்பட்ட இந்த மீன் மனித பாவனைக்கு உகந்தது அல்ல என்று நீதிமன்றம் கருதி இந்த மீனை அழிக்குமாறு யாழ். கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள அதிகாரிகளுக்கு உத்தர விட்டதனை அடுத்து நேற்று முற்பகல் அந்த மீன்கள் அழிக்கப்பட்டதாக யாழ். கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களப் பணிப்பாளர் ந.கணேசமூர்த்தி தெரிவித்துள்ளார். அத்துடன் இந்த மீனைவைத் திருந்த வியாபாரியை யாழ். நீதவான் நீதிமன்றம் ஒரு இலட்சம் ரூபா சரீரப்பிணையில் செல்ல அனுமதித்ததுடன் எதிர்வரும் யூன்மாதம் 16 ஆம் திகதிக்கு இந்த வழக்கை ஒத்திவைத்துள்ளது. மேலும் டைனமற்றைப் பயன்படுத்தி மீன்பிடிப்பது கடற்றொழில் நீரியல் வள அமைச்சினால் தடைசெய்யப்பட்டிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

### பணம்கொடுத்து...

முதலாம் திகதி முதல் 4 ஆம் திகதி வரை தங்கியிருந்துள்ளார். அவர், விடுதிக்கு செலுத்த வேண்டிய 38 ஆயிரம் ரூபா பணத்தினை செலுத்தாது தப்பிச்செல்ல முற்பட்டவேளை விடுதியின் பணியாளர்களினால் பிடிக்கப்பட்டு, யாழ். பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார். தான் ஓய்வு பெற்ற இராணுவ கேணல் எனக் கூறி பல பணமோசடி செய்ததுடன், காணி பிணக்குகளையும் தீர்த்து வைத்துள்ளதாக பொலிஸ் நிலையத்தில் வாக்குமூலம் அளித்துள்ளார்.

அந்த வாக்குமூலத்தின் பிரகாரம் இவர் யாழ். நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டு 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.இவ்வாறு இராணுவ கேணல் ரூபன் பத்திரண என்ற பெயரைக் கூறியவரிடம் பணமோசடி மற்றும் காணி பிணக்குகள் தொடர்பாக பாதிக்கப்பட்டவர்களையே முறைப்பாடு செய்யுமாறு பொலிஸ் பொறுப்பதிகாரி பொது மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.(25)

### தீவக...

ஆகிய பிரதேச சபைகளுக்கு தலா 100 மில்லியன் ரூபா வீதம் 300 மில்லியன் ரூபாவை பொருளாதார அபிவிருத்தி அமைச்சு ஒதுக்கீடு செய்துள்ளது. இந்நிதியினைக் கொண்டு 3 பிரதேச சபைகளின் கீழான வீதிகள், பொதுச்சந்தை உள்ளிட்ட பல்வேறு கட்டுமானப் பணிகள் முன்னெடுக்கப் படவுள்ளன. கடந்த உள்ளூராட்சி சபைத்தேர்தல் காலத்தின் போது ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தீவகத்தின் அபிவிருத்திக்கு முழுமையான பங்களிப்பு வழங்கப்படும் என வாக்குறுதி வழங்கியிருந்தார்.

இதன் அடிப்படையில் குறித்த 3 பிரதேச சபைகளினதும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் தவிசாளர்களிடம் கேட்டறிந்து கொண்டார். இதனடிப்படையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் தலைமை மற்றும் வழிகாட்டலுக்கமைவாக அபிவிருத்தி செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதன்போது ஈ.பி.டி.பி.யின் சர்வதேச முக்கியஸ்தர் விந்தன், அமைச்சரின் இணைப்பாளர் ராஜ்குமார், ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்) ஆகியோர் உடனிருந்தார்.

### பொதுநலவாய...

87 வயதாகும் பிரிட்டிஷ் அரசிக்கு, இத்தகைய நீண்டதூர விமானப் பயணங்கள் ஏற்படுத்தும் உடல்நலப் பிரச்சினைகளை மீளாய்வு செய்த பின்னர், இந்தமுடிவு எடுக்கப்பட்டிருப்பதாக அரண்மனை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இலங்கையின் மனித உரிமைகள் செயல்பாடு தொடர்பாக எழுந்துள்ள சர்ச்சைக்கும், பிரிட்டிஷ் அரசி இந்த மாநாட்டில் கலந்துகொள்ளாமல் தவிர்த்திருப்பதற்கும் எந்த விதத் தொடர்பும் இல்லை என்று தோன்றுவதாக பி.பி.சி. செய்தியாளர் ஒருவர் கூறினார்.

### மலகூட...

காணப்பட்ட மலசலகூடக் குழியை துப்புரவு செய்யும் நடவடிக்கையை வீட்டு உரிமையாளர்கள் நேற்று முன்தினம் மாலை மேற்கொண்டனர்.

இந்த நேரத்தில் மண்டையோடு வாயின் பற்கள் உள்ளடக்கிய தாடைப் பகுதி காலின் துடைஎலும்பு என்பன கண்டெடுக்கப் பட்டுள்ளன. இது சம்பந்தமாக இளவாலைப் பொலிஸாருக்கு உடனடியாக தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து குறிப்பிட்ட இடத்திற்கு சென்ற பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சிந்திக்க என். பண்டாரா தலைமையிலான குழுவினர் அந்த குழியிலிருந்து எலும்புக் கூடொன்றை மீட்டனர். அந்த இடத்திற்கு சென்ற மல்லாகம் நீதிமன்ற பதில் நீதிபதி ஜே.தம்பித்துரை சட்டவைத்திய அதிகாரியுடன் குறிப்பிட்ட இடத்திற்குச் சென்று பார்வையிட்டதுடன் எலும்புக் கூட்டை யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்குமாறும் உத்தரவிட்டார்.

### புலிகளின்...

ஆறு இராணுவ வீரர்கள் காயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்களில் ஐந்து பேர் சிகிச்சைக்காக முல்லைத்தீவு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் மற்றுமொரு இராணுவ வீரர் சிகிச்சைக்காக அநுராதபுரம் வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. புலிகளின் பதுங்கு குழிகளை இராணுவத்தினர் துப்புரவு செய்துகொண்டிருந்த போதே இந்த வெடிப்புச் சம்பவம் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### பலாலி வீதியில்...

பஸ்ஸில் இருந்து இறங்கி வீடு நோக்கி செல்ல முற்பட்டவேளை திடீரென மாரடைப்பு ஏற்பட்டு உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கபடுகிறது. சம்பவ இடத்திற்கு சென்ற கோப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டனர். இவரது சடலம் பிரதே பரிசோதனைகளுக்காக யாழ். போதனா வைத்திய சாலையில் நேற்று ஒப்படைக்கப்பட்டிருந்தது.

### முஸ்லிம்களை...

தெரிவித்தார். வன்னியில் இறுதி யுத்தம் முடிவடைந்த பின்னரும் அவசரகாலச் சட்டத்தையும், பயங்கரவாதச் சட்டத்தையும் அரசாங்கம் நடைமுறையில் வைத்திருந்தது. அதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு காட்டிய எதிர்ப்பையடுத்து அவசரகாலச் சட்டத்தை மட்டும் அரசாங்கம் நீக்கியது. ஆனால், பயங்கரவாத தடைச் சட்டத்தை அரசாங்கம் நீக்காமல் வைத்துள்ளது

கடந்த காலங்களில் தமிழருக்கு எதிராகப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை பிரயோகித்து வந்த அரசாங்கம், தற்போது முஸ்லிம்களுக்கு எதிராகவும் இந்தச் சட்டத்தைப் பிரயோகிக்கத் தொடங்கியுள்ளது. இதற்கு முதலாவதாக அசாத் சாலியே இலக்காகியுள்ளார்.

ஆனால், அசாத் சாலி பயங்கரவாதி அல்லர் வன்முறைவாதியும் அல்லர். அவர் சமாதானத்தை விரும்பும் ஜனநாயகவாதி. முஸ்லிம் சமூகத்திற்கு எதிராக அரசால் இழைக்கப்படும் அநீதிகளைக் கண்டித்துக் குரல் கொடுத்தபடியால் அவரைப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் இந்த அரசாங்கம் கைது செய்துள்ளது.

ஜனநாயகத்தை விரும்பும் எவரும் இந்தக் கைதை ஏற்கமாட்டார்கள். இவரின் விடுதலையை வலியுறுத்தி ஜனநாயகவாதிகளுடன் சேர்ந்து போராட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தயாராகவுள்ளது. அதேவேளை, அசாத் சாலிக்கு நீதிகோரி சர்வதேசத்திடம் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு முறையிடவுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

# அனர்த்தம் நிகழ்ந்தால் செய்வது என்ன?

வவுனியாவில் அனர்த்தத்தின் போது மக்களை பாதுகாப்பதற்கு இடங்கள் இனங்காணப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்தார்.

இது தெடர்பில் அவர் தெரிவிக்கையில், வவுனியா மாவட்டத்தில் ஏதேனும் அனர்த்தம் ஏற்படும் போது மக்களை பாதுகாப்பாக வைத்திருப்பதற்கான நிலையங்கள அடையாளம் காணப்பட்டு அங்கு வசதிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. தற்போது பிரமண்டு வித்தியாலயம், ஊஞ்சல்கட்டி அ.த.க. பாடசாலை, அல் இக்பால் வித்தியாலயம் என்பவற்றில் மலசலகூடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றது.

அனர்த்தங்களின் போது மக்களின் செயற்பாட்டை அடைந்து கொள்வதற்காக வவுனியா மாவட்டத்தில் உள்ள 102 கிராம சேவகர் பிரிவுகளிலும் அனர்த்த முகாமைத்துவ குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு கிராம மட்டத்தில் அமைக்கப்படும் குழுக்களில் தேடுதல் மற்றும் மீட்பு உப குழு, முன் எச்சரிக்கை உப குழு, உடனடி தேவைகள் விநியோகம் புனர்நிர்மாண உப குழு, நிவாரணம் மற்றும் உணவு விநியோக உப குழு, சுகாதார நலன்புரி உப குழு என உப குழுக்களும் அமைக்கப்பட்டு வருவதாகவும் சூரியராஜா தெரிவித்தார்.

# மட்டக்களப்பில் துப்பாக்கிச்சூடு

மட்டக்களப்பு, செங்கலடி கொம்மாதுறை பகுதியில் வைத்து பெண் ஒருவரை இலக்குவைத்து இனந்தெரியாத நபர் ஒருவர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில் நடைபெற்ற இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் அதிஷ்டவசமாக குறித்த பெண் எந்தவித காயங்களுமின்றி தப்பித்துக்கொண்டுள்ளார்.

இது குறித்து மேலும் தெரிய வருவதாவது,

மட்டக்களப்பு கல்லடி பிரதேசத்தில் இருந்து கொம்மாதுறை பகுதிக்கு வருகைதந்திருந்த பெண்மணி ஒருவர் மீது கொம்மாதுறை மதுபானக் கடைக்கு அருகாமையில் வைத்து இனந்தெரியாத நபர் ஒருவர் சைலன்சர் பொருத்தப்பட்ட கைத் துப்பாக்கியை கொண்டு தாக்குதல் நடத்தியதாகவும் ஆனால் குறித்த பெண் எந்தவித காயங்களுமின்றி தப்பித்துக்கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த சம்பவத்தை தொடர்ந்து குறித்தபெண் உடனடியாக பொலிஸ் நிலையத்திற்கு அறிவித்ததுடன் மேற்படி சம்பவம் குறித்து ஏறாவூர் பொலிஸார் விசாரணைகளையும் மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவத்தை தொடர்ந்து ஆயுததாரிகளின் நடமாட்டம் குறித்து பொலிஸார் கொம்மாதுறை வர்த்தகர்கள் பலரிடம் விசாரணை நடத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# மாத்தளை எலும்புக்கூடு விவகாரம் நீதிமன்றம் செல்கிறது ஜே.வி.பி.

மாத்தளை வைத்தியசாலை வளாகத்தில் கண்டுபிடிக்கப்பட்ட மனித புதைக்குழியில் காணப்பட்ட மனித எலும்புக்கூடுகள் தொடர்பில் டி.என்.ஏ பரிசோதனை நடத்தப்பட வேண்டும் என மக்கள் விடுதலை முன்னணி வலியுறுத்தியுள்ளது. இது குறித்து இன்று மாலை மாத்தளை நீதவான் நீதிமன்றில் சத்திய வாக்கு மூல மனுவொன்றை தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

காணாமற்போன தமது உறுப்பினர்களின் உறவினர்கள் இதில் கலந்து கொள்வர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மனித புதைக்குழி தொடர்பில் மக்கள் விடுதலை முன்னணி அமைத்த குழு மேற்கொண்ட ஆய்வை அடுத்தே இந்த நீதிமன்ற நடவடிக்கை எடுக்கப்படுவதாக மக்கள் விடுதலை முன்னணி அறிவித்துள்ளது.

# பாடசாலை மாணவி கடத்தல்; அச்சுவேலியில் பரபரப்பு

(அச்சுவேலி)

பட்டப்பகலில் பாடசாலை மாணவி ஒருவர் ஹயஸ் வானில் வந்தவர்களால் கடத்தப்பட்ட சம்பவம் நேற்று மதியம் அச்சுவேலி தோப்பு பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக தெரிய வருவதாவது,

குறித்த மாணவி அச்சுவேலியில் உள்ள பிரபல பாடசாலை ஒன்றில் உயர்தரம் கற்று வருகிறார். சம்பவ தினம் மாணவி பிரத்தியேக வகுப்பு முடித்து திரும்பிக் கொண்டிருந்த சமயம் கடத்தப்பட்டதாக நேரில் பார்த்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் பெற்றோர்கள் கொடுத்த முறைப்பாட்டை அடுத்து குற்றத்தடுப்பு பொலிஸார் கடத்தலுக்கு பயன்படுத்திய வாகனத்தினையும் கைப்பற்றியுள்ளதுடன் வாகனச் சாரதியையும் கைது செய்துள்ளனர். குறித்த நபர் தனது நண்பனுக்கு உதவியதாக பொலிஸார் மேலும் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக வாகனச் சாரதி தெரிவிக்கையில்,

இச்சம்பவம் பற்றி தனக்கு முதல் தெரியாது என்றும் பின்னர் பொலிஸார் கைது செய்த பின்னரே அறிந்து கொண்டதாகவும், இருவரையும் கைதடியில் இறக்கி விட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்ட நிலையில் குறித்த நபர் யுவதியை பல வருடமாக காதலித்து வந்ததாக தெரிவிக்கப்பட்ட நிலையில் இக்கடத்தல் சம்பவம் இடம்பெற்றுள்ளது. (15)

# செயற்பட மறுத்தது சமிக்ஞை விளக்கு

(கொழும்பு)

சமிக்ஞைக்காக வாகனத்தை நிறுத்தி வைத்துக்கொண்டிருப்பதா? இன்றேல் இயக்குவதா? அப்படியின்றேல் முன்னோக்கி செலுத்துவதா? என்று தெரியாமல் சாரதிகள் திண்டாடிய சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

கொழும்பிலேயே நேற்றுக் காலை வேளையில் இவ்வாறானதொரு விசித்திரமான சம்பவம் இடம்பெற்றது. கொழும்பு தர்மபால மாவத்தையில் விகாரமகா தேவி பூங்காவிற்கு முன்பாகவுள்ள வீதி சமிக்ஞையினாலேயே சாரதிகள் சில மணிநேரம் சங்கடத்திற்கு உள்ளாகினர்.

இதனால் அப்பகுதியிலுள்ள வீதிகளில் பெரும் வாகன நெரிசல் ஏற்பட்டது. அவ்விடத்தில் குறித்த நேரத்தில் போக்குவரத்து பொலிஸாரும் கடமையில் இருக்காமையினால் சாரதிகள் பெரும் சிரமத்திற்கு முகம்கொடுத்தனர்.

குறிப்பிட்ட அந்த சமிக்ஞையில் சிவப்பு, மஞ்சள் மற்றும் பச்சை ஆகிய மூன்று நிற விளக்குகளும் ஒரேநேரத்தில் செயற்பட்டமையினால் சாரதிகள் குழப்பத்திற்குள்ளானார்கள்.

# உதவிக் கல்விப் பணிப்பாளர் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்

(யாழ்ப்பாணம்)


தீவகக் கல்வி வலயத்தில் முறைசாரக் கல்விப் பிரிவிற்கான உதவிக் கல்விப் பணிப்பாளர் பதவி வெற்றிடம் 31.07.2013 இல் ஏற்படவுள்ளது.

இவ்வெற்றிடத்திற்கு தீவக கல்வி வலயத்தில் கடமையாற்றும் ஆசிரியர் தரம் 1, 2-1 தரத்தைச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

ஆசிரியர் தரம் 1 இனைச் சேர்ந்தவர்கள் விண்ணப்பிக்காதவிடத்து ஆசிரியர் தரம் 2-1 இனைச் சேர்ந்தவர்களின் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

விண்ணப்பதாரி தீவகச்சூழல் பற்றிய பூரண அறிவைக் கொண்டிருப்பதோடு ஆகக்குறைந்தது 3 வருடங்கள் தொடர்ச்சியாக தீவக கல்வி வலயத்தில் சேவையாற்றக்கூடிய வயதினைக் கொண்டிருத்தல் வேண்டும். விண்ணப்பப்படிவங்களை தீவகக் கல்வி வலயத்தில் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்ப முடிவுத் திகதி 17.05.2013 ஆகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# மும்பை அணி 65 ஓட்டங்களால் வெற்றி



(மும்பை)

ஐ.பி.எல். கிரிக்கெட்டின் 53 ஆவது லீக் போட்டி மும்பையில் நேற்று நடைபெற்றது. இதில் மும்பை இந்தியன்ஸ் - கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணிகள் மோதின. நாணயச்சுழற்சியில் வென்ற மும்பை இந்தியன்ஸ் அணி கப்டன் ரோகித் சர்மா துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார்.

தொடக்க வீரர்களாக சச்சின் மற்றும் ஸ்மித் களமிறங்கினர். சச்சின் அதிரடியாக ஆட ஸ்மித் நிதானமான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். சச்சின் 48 ஓட்டங்கள் எடுத்த நிலையில் பாட்டியா வீசிய பந்தில் ஆட்டமிழந்தார்.

ஸ்மித் 47 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அடுத்து களமிறங்கிய ரோகித் சர்மா 16, பொலார்ட் 4, ராயுடு 0, ஹர்பஜன் சிங் 0 என ஆட்டமிழந்தனர்.

மறுமுனையில், நிலைத்து விளையாடிய தினேஷ் கார்த்திக் 34 ஓட்டங்கள் எடுத்தார். இதனால் மும்பை அணி 20 ஓவர் முடிவில் 6 விக்கெட் இழப்பிற்கு 170 ஓட்டங்கள் எடுத்தது.

171 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய கொல்கத்தா அணிக்கு தொடக்கத்திலேயே அதிர்ச்சி காத்திருந்தது. தொடக்க வீரராக களமிறங்கிய அணியின் கப்டன் கம்பீர் முதல் ஓவரிலேயே ஓட்டம் ஏதும் எடுக்காமல் ஜோன்சன் வீசிய பந்தில் ஆட்டமிழந்தார்.

பிஸ்லா 17, யூசுப் பதான் 13, மோர்கன் 5 என சொற்ப ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். பின்னர் வந்த கலிஸ் 24, தாஸ் 23 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர்.

இறுதியில், கொல்கத்தா அணி 105 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து தோல்வியை தழுவியது.





யாழ். நகரில் தங்க நகைகளின் கரட் பரிசோதனை இயந்திரத்தை முதல் முதலில் அறிமுகப்படுத்தி சிறிராம் ஜுவல்லர்ஸ் ஸ்தாபனத்தார் குறையாத செல்வத்தை வளமாக அள்ளித்தரும் அதிசயத் திருநாளாம்



22 Karat Only

**அட்ஷய திருதியை**

**எதிர்வரும் 12, 13 ஆம் (ஞாயிறு, திங்கள்) திகதிகளில் வருகின்றது. இத்திருநாளில் உங்கள் வாழ்வில் சுபீட்சத்தை உருவாக்கும் பெறுமதிமிக்க நகைகளை சிறிராம் ஜுவலரியில் வாங்கி மகிழுங்கள்.**

**அன்றைய தினத்திற்காக...**

☆ அட்ஷய திருதியை முன்னிட்டு அதிநவீன டிசைன்களை அறிமுகம் செய்வதோடு நம்பமுடியாத விசேட விலைக்கழிவுகள் வழங்கப்படும்.

☆ அன்று குறிப்பிட்ட சில நகைகள் செய்கூலி சேதாரமின்றி தங்க விலைக்கே விற்கப்படும்.

☆ அன்றைய தினம் நகைகள் கொள்வனவு செய்யும் அனைவருக்கும் விசேட பரிசுகள் காத்திருக்கின்றன.

☆ அன்றைய தினங்களில் உங்களது சிரமத்தினைத் தவிர்த்துக்கொள்ள இன்று முதல் முற்பணம் இன்றி உங்கள் நகைகளைத் தெரிவுசெய்து அட்ஷய திருதியை திருநாளில் பெற்றுக்கொள்ளலாம்.

☆ அட்ஷயதிருதியை தினங்களில் எமது காட்சியறை காலை 7.30 தொடக்கம் இரவு 8.30 வரை உங்களுக்காகத் திறந்திருக்கும்.

☆ அனைத்துக் கொள்வனவுகளுக்கும் பற்றுச்சீட்டுடன் தரநிர்ணய சான்றிதழ் வழங்கப்படும்.

**இல. 158, 193, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

**தொ.பே: 021 222 8334, 077 7730567**

(C/2733)


இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 மே 08 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.